# பரிசில் வாழ்க்கை

தமிழண்ணல்

# பரிசில் வாழ்க்கை

தமிழண்ணல்

விற்பனை உரிமை
**மீனாட்சி புத்தக நிலையம்**
மயூரா வளாகம்
48, தானப்ப முதலி தெரு
மதுரை-625 001.

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | அக்டோபர், 1956 |
| இரண்டாம் பதிப்பு | : | மே, 1977 |
| மூன்றாம் பதிப்பு | : | சூன், 1979 |
| நான்காம் பதிப்பு | : | சூன், 1984 |
| ஐந்தாம் பதிப்பு | : | சூன், 1999 |

விலை : ரு 25.00

நூலைப்பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பரிசில் வாழ்க்கை |
| ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | இலக்கியம் |
| முதற் பதிப்பு | : | அக்டோபர் 1956 |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18 x 12.5 செ.மீ. |
| அச்சு எழுத்து அளவு | : | 11 பாயிண்ட் |
| மொத்தப் பக்கங்கள் | : | 108 |
| நூலின் விலை | : | 25.00 |
| நூல் கட்டுமானம் | : | பாக்ஸ் போர்டு |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஐ கேட்சர்<br>121, நேதாஜி ரோடு, மதுரை - 1 |

---

SELLING RIGHTS

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

MAYURA COMPLEX

48, Dhanappa Mudali Street,

MADURAI - 625 001.

# உள்ளுறை

1. நாகரிகமும் இலக்கியமும் ......................... 5

2. பரிசில் வாழ்க்கை ......................... 16

3. அமைச்சரின் அறிவுரை ......................... 38

4. தூதரின் தொண்டு ......................... 51

5. நண்பரின் பண்பு ......................... 60

6. அருள் உள்ளம் ......................... 79

7. பெருமித வாழ்வு ......................... 86

8. அரசரும் புலவரும் ......................... 93

9. பாடும் நெறிகள் ......................... 99

சங்ககாலப் புலவர்களின் வாழ்வு பற்றி ஆராயக் கருதிச் சேகரித்த குறிப்புகளின் விளைவாகவே இச் சிறுநூல் எழுதப்பட்டது. தன்னிகரற்ற அப்புலவர்களின் வாழ்வு, இன்றைய மக்களுக்கும் பயன்படக் கூடியது; சுவையானதும் கூட. மாணாக்கர்கள் உள்ளத்தில் சங்க இலக்கியச் சுவையுணர்வை இச் சிறுநூல் விளைவிக்கும். நமது பண்பாட்டுச் சிறப்புக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு.

**தமிழண்ணல்**

# 1 நாகரிகமும் இலக்கியமும்

முத்து விளையும் நாடு; முப்புறமும் கடல் சூழ்ந்த நாடு; முத்தமிழ் வளரும் நாடு-நாம் பிறந்த கன்னித்தமிழ் நாடு. வரலாற்றுக் காலத்துக்கு முந்திய பழைமையும், உலக மக்கள் அனைவரினும் சிறந்த நாகரிகமும், பிற இனத்தார் எவரினும் மேம்பட்ட பண்பாடும், பிறமொழி எதற்கும் உயர்ந்த இலக்கியமும் பெற்ற நாடு இத் தமிழ்நாடு. இந்நாட்டில் பிறக்கும் பேறுபெற்ற தமிழர்கள் ஈடற்ற பெருமைக்கு உரியவர்கள்; அதே நேரத்தில் அப்பெருமையைச் சிறிதும் குறையாமல் காப்பாற்றும் கடமையும் உடையவர்கள். அக் கடமையாற்றும் வழிதான் யாது? இதுவே இன்றுள்ள தமிழ் இளைஞர்களின் முன்பு வினவப்படும் தலையாய கேள்வியாகும்

நம் கடமையைச் சரிவரச் செ_ ı வேண்டுமானால், நம் தகுதி, வரலாறு, நாகரிகம், பண்பாடு இவற்றை நாம் ஆராய்ந்தறிய வேண்டும்; நம்மை நாமே அறிந்துகொள்ள வேண்டும். 'தன்னைத் தலைசிறந்தவனாக ஆக்கிக்கொள்வதும், நிலைகலக்கி இழிந்தவனாக ஆக்கிகொள்வதும்' அவனவன் உள்ளப்பாங்கையும் செயலையும் பொறுத்திருக்கின்றன. இது கருதியே 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்றனர் நம் முன்னோர். ஆம், ஒருவனுக்குத் தீமையும் நன்மையும் பிறரால் உண்டாவன அல்ல; அவன் செயலே அதற்குக்காரணம். எனவே தமிழர்கள் தங்கள் பெருமையைக் காக்கவேண்டுமாயின், அவர்கள் வரலாற்றுணர்வுடையவர்களாக வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரை பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியே வரலாற்றுணர்வைத் தருவதாகும்.

**நமது நாகரிகம்**

உலக நாகரிகங்களுக்கும் தமிழர் நாகரிகத்திற்கும் ஒரு குறிப்பான வேறுபாடு உண்டு. இன்றறியப்படும் தொன்மைமிக்க பிறர் நாகரிகங்கள் பெரும்பாலும் புறநிலை சார்ந்தவை; பருப்பொருளாய் மெய்ப்பிக்கக்கூடியவை. கிரேக்க, உரோமானிய, எகிப்திய நாகரிகங்களுக்கு இச் சிறப்புண்டு. உரோம் நகரத்து அகழ்வாராய்ச்சிகள் இன்றும் மெய்சிலிர்க்க வைப்பவை. தமிழர்தம் தொன்மையான நாகரிகமோ இன்றறியப்படும் நிலையில் பெரும்பகுதி அகநிலை சார்ந்தது; உள்ளுணர்வால் மட்டுமே உணரக் கூடியது. இதனால் தான் தமிழர்தம் நாகரிகத்தை விளக்கும் புற உலகச் சின்னங்கள் மிகக் குறைவாகவும் அக நாகரிக விளக்கமான இலக்கியங்கள் அதிகமாகவும் உள்ளன. அகஸ்டஸ் மன்னன் வாழ்ந்திருந்த அரண்மனையின் அழிபாடுகளைக் கொண்டு, அந்நாளைய உரோம நாகரிகத்தை வியக்க முடிகிறது. அவன் பட்டத்தரசியரின் அணிகலன்களையோ, அவர்கள் பயன்படுத்திய கலங்களையோ புதைபொருளாய்க் கண்டெடுத்து வியக்கின்றது இவ்வுலகம். ஆனால் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் சிறப்பையோ, அந்நாளைய நாகரிகப் பெருமையையோ, கணிசமாக எடுத்துரைக்கவல்ல பருப்பொருட்காட்டுக்கள் நமக்குக் கிடைத்தில. அகநானூற்றையும் புறநானூற்றையும் வைத்துக்கொண்டுதான் நமது அற்றைச் சிறப்பை இற்றைக்கு எடுத்துரைக்க வேண்டியிருக்கிறது! இவ் இலக்கியங்களை நமக்குப் படைத்துத் தந்தவர்கள் புலவர் பெருமக்கள். அப் புலவர்களின் வரலாற்றையும் நாம் முற்ற முடிய அறிந்தோமில்லை. அவர்களின் பண்பும் திறனும் பற்றி, அவர்கள் படைத்த இலக்கியங்களே பறைசாற்றுகின்றன.

நமது மன்னர்கள் இமயம் வரை படையெடுத்துச் சென்றார்கள்; வட புலத்தையும் பிற புலங்களையும் வென்று அடிப்படுத்தினார்கள்; நமது நாகரிகத்தை உலகெங்கும்

பரப்பினார்கள்! கடல் கடந்து கடாரத்தை வென்றார்கள்; இன்றைய ஜாவா, சுமத்திரா அனைய கிழக்கிந்தியத் தீவுகளிலும் இலங்கையிலும் தங்கள் ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்தினார்கள். யவனரும் உரோமரும் சீனரும் நம் பழந்தமிழகத்துடன் வாணிகத் தொடர்பு மட்டுமல்லாமல் நாகரிகத் தொடர்பும் உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். கடல் வாணிகம், போர் வெற்றி, தொழிற்சிறப்பு, கலைநுணுக்கம், சமயஒட்பம் அனைத்தும் படைத்துத் திகழ்ந்தார்கள் தமிழர்கள். இத்துணைச் சிறப்பையும் இன்று நமக்கு எடுத்துக்காட்டும் கருவிகள் யாவை? உலகினர்க்கு நாம் இதனை மெய்ப்பிக்கக் காட்டும் சான்றுகள் யாவை? சுருக்கமாகக் கூறின் புறச் சான்றுகள், புறக் கருவிகள் நமக்கு மிகக் குறைவு. எடுத்துக்காட்டாக, அசோகனது ஆட்சிப் பரப்பை, அவன் தனது அருட்கருத்துக்களைப் பொறித்துவைத்த கல்வெட்டுக்களாலும் கற்றூண்களாலும் இன்றும் நாம் அறிகிறோம். ஆனால் நெடுஞ்சேரலாதன் 'இமயவரம்பன்' எனச் சிறப்புற்றதற்கும், கரிகாற் பெருவளத்தான் இமயத்தில் புலி இலச்சினையைப் பொறித்ததற்கும், சேரன் செங்குட்டுவன் கண்ணகித் தெய்வத்திற்கு இமயத்திற் கல்லெடுத்துக் கனகவிசயர் தலைமீது ஏற்றிவந்ததற்கும் நாம் இன்று காட்டக்கூடிய புறச்சான்றுகள் எவையும் இல. சோழர் குன்றுகள் (Chola-Range) என்று பெயர் குறிக்கப்படும் இமயமலைத் தொடர்கள் சில உளவென்றும், அவையே கரிகாலன் புலி பொறித்த இமயத்தொடர்கள் எனவும் ஒன்றிரண்டு வரலாற்றுப் பேராசிரியர்கள் அரிதாகக் கூறிப் போயுள்ளனர். ஆயினும், இத்தகைய சான்றுகளை ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக மட்டும் காட்டுவதாற் பயன் என்ன? இவ்வாறு தமிழக வரலாறும் நாகரிகமும் இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டே பெரும்பான்மையும் திகழ்கின்றன. பழமைச் சின்னமான காசுகள், கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், அழிபாடுகள், புதைபொருள்கள் போல்வன இடைக்காலத்திற்கேனும் ஓரளவு கிட்டுகின்றன. சங்க காலத்திற்கோ முதுமக்கள் தாழிகளையும்,

உரோமானியக் காசுகளையும் பற்றியே திரும்பத்திரும்பக் கூறவேண்டியிருக்கிறது? ஆயினும் வேறு எச்சான்றையும்விட இலக்கியச் சான்றுகள் நமக்கு மிகுதியாகக் கிடைத்துள்ளன. கிரேக்க உரோமானியர்களுக்குக் கிடைத்துள்ள அளவு அல்லது அதற்கு மேலாக நமக்கு இலக்கியச் சான்றுகள் கிடைத்துள்ளன எனலாம். வரலாற்றுச் சான்றுகள் அனைத்திலும் இலக்கியச் சான்றுகளையே மேனாட்டு வரலாற்றுப் பேராசிரியர்கள் முதன்மைப்படுத்தியுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். எனவே பருப்பொருட்சான்றுகளை நாம் மிகுதியாகப் பெற்றிலோமாயினும், இவ் இலக்கியச் சான்றுகளைக் கொண்டு, நம் பண்பாட்டையும் நாகரிகத்தையும் நன்கு கணித்தறிய முடிகிறது.

## தமிழ்ப் புலவர்கள்

பழந் தமிழகத்தைக் திரும்பிப் பார்க்கும் நாம் தமிழ்ப் புலவர்க்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க் கணக்கும் ஐம்பெருங்காப்பியங்களும் முற்கால இலக்கியப் பட்டியலில் சேர்வன. இதிகாசங்களும் புராணங்களும் பக்திப் பாசுரங்களும் சிற்றிலக்கியங்களும் போல்வன இடைக்காலத்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி மரபுவழியில், இன்றளவும் வளர்ந்துள்ள - வளர்ந்து வருகின்ற -இலக்கியங்கள் இக்கால மறுமலர்ச்சி இலக்கியங்களாகும். இவை அனைத்தையும் உருவாக்கியவர்கள் தமிழ்ப் புலவர்கள். கால வெள்ளத்திலே நமது நாகரிகம் அழிந்து போகாமல் காப்பாற்றியவர்கள் அவர்கள். செல்வத்தில் திளைத்தபோது இறுமாந்து அவர்கள் தமிழை மறந்ததும் இல்லை; வறுமையில் வாடியபோது மனந்தளர்ந்து தமிழைத் துறந்ததுமில்லை. அவர்களிலே பலர் தமிழால் வாழ்ந்திருக்கிறார்கள்; தமிழால் சிறப்படைந்திருக்கிறார்கள். அதுபோலவே அவர்கள் தமிழுக்காகத் தங்கள் உயிரையும் கொடுத்திருக்கிறார்கள்;

பிறர்கூறும் இழிவுரைகளைப் பொறுத்திருக்கிறார்கள்; அவர்களால் தமிழ் வளர்ந்தது; தமிழ் இலக்கியம் சிறப்புற்றது. தமிழால், தமிழ் இலக்கியத்தால் அவர்களும் இன்றளவும் நம்முடன் வாழ்கின்றார்கள்; இனியும் வாழ்வார்கள்!

**சங்க காலம்**

நமது இலக்கியத்தின் தலையாய பொற்காலம் சங்க காலமே என்ற கருத்து நெடுநாட்களாக நிலவி வருகிறது. அன்று, தமிழ்ப்புலவர்கள் சுதந்திரமாகச் சிந்தனை செய்யும் உரிமையுடனும் தாங்கள் சிந்தித்தவற்றை எவர்க்கும் அஞ்சாது எடுத்துரைக்கும் ஆற்றலுடனும், முடியுடை அரசர்களும் தங்கள் அறிவுரையை நாடி, ஏற்று நடக்கும் படியான அறிவுவன்மையுடனும் வாழ்ந்தார்கள். இதனால் மேனாட்டார் போற்றும் தொன்மைமிக்க கிரேக்க நாட்டில் வெவ்வேறு துறைச் சிந்தனையாளர்கள் வாழ்ந்தது போலவே, தமிழகத்தும் அத் தொன்மைமிக்க சங்ககாலத்திலேயே, பல்வேறு துறைவழிப்பட்ட சிந்தனையாளர்கள், அறிஞர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். சிலர் அகத்துறை வல்லவர்களாகவும் சிலர் புறத்துறை வல்லவர்களாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். உலகியல் விளக்கம், அரசியல் அறிவு, இறையியல் சிறப்பு, அறிவியல் அருமை அனைய பலவற்றை உருவாக்கி, வளர்த்த சிந்தனையாளர்களையும் தமிழகத்தில் காண்கிறோம். தொழிற்பயிற்சி, கலைவன்மை இவற்றை உருவாக்கி, அவர்கள் தமிழகத்தைச் செல்வமும் இன்பமும் கொழிக்கும் நாடாக வளர்க்கத் தூண்டுகோலாக விளங்கினார்கள். பின்னைய தமிழகத்திற்குப் பெரிதும் வழிகாட்டிகளாகத் திகழ்ந்தவர்கள் இப் பழம் புலவர்களே எனலாம்.

பழம் புலவர்களிலே பலர் பல்வேறு தொழில்களிலும் கலைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். மருத்துவன் தாமோ தரனார் என்ற புலவர் தலைசிறந்த மருத்துவராகத் திகழ்ந்தார்.

மணிமேகலைக் காப்பியத்தைத் தந்த சீத்தலைச் சாத்தனார் மதுரையில் கூலவாணிகம் செய்து வந்தார். மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் நெசவுத் தொழில் வல்லவராக இருந்தார். மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் என்ற புலவர் கொற்றொழிலில் வல்லவராக வாழ்ந்தார். அப் பழம்புலவர்களிலே பலர் இசையறிவும் நாடகப் புலமையும் மிக்கவர்கள். இவ்வாறு வாழ்வின் பல கூறுகளிலும் ஈடுபட்டு அனுபவம் பெற்ற அவர்கள் புலமைச் செல்வத்திலும் தன்னிகரற்று விளங்கினார்கள். இதனால், அவர்களின் இலக்கியப் படைப்புக்கள் வாழ்வின் பிரதிபலிப்பாகத் திகழ்கின்றன.

சங்க இலக்கியம் நூற்றுக்குத் தொண்ணூறு பகுதி தனிப்பாடல்களால் ஆனது. எட்டுத் தொகை நூல்கள் அனைத்தும் பல்வேறு புலவர்களின் பாடல்களைத் தொகுத்தவையேயாம். பத்துப்பாட்டு நீண்ட பாடல்களின் தொகுப்பாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தலையாய திருக்குறள் தனியொரு அறநூல் ஆகும். சிலம்பும் மேகலையும் அக்காலத்தைச் சார்ந்த காப்பியங்கள் ஆகும். இவ்வாறு பெரும்பகுதி உதிரிச் செய்யுள்களையும் சிறுபான்மை தொடர்நிலைச் செய்யுள்களையும் கொண்ட சங்க இலக்கியம், நமது வரலாற்று விளக்கமாகவும் வாழ்வியல் குறிப்பேடாகவும் திகழ்கிறது. இதன் சாரத்தை அக்கால இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் வலியுறுத்துகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தை நம் கண்முன் காட்டும் தொலைக்காட்சிக் கண்ணாடி என்று நாம் அவற்றைக் குறிப்பி டலாம். காலத்திற்கு அமைத்த பாலம்போல் விளங்கி நம்மைப் பண்டைத் தமிழகத்திற்குக் கொண்டு சேர்க்கும் அவ்இலக்கிய இலக்கணங்களை நாம் ஆழ்ந்து கற்றுப் பயிலுதல் வேண்டும்.

பழந்தமிழ்ப் பேரரசர்களும், சிற்றரசர்களும் புலவர்கள்பால் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். அவர்களை

வரவேற்று உபசரித்து ஒப்புரவு செய்தலையே தங்கள் வாழ்வின் கடமையாகக் கருதினர். அக்காலப் புலவர் புரவலர் தொடர்பு அறிந்து போற்றுதற்குரியதாகும். புலவர்கள் வெறுமனே பாடிவிட்டு, ஏதேனும் பரிசிலைப் பெற்று, 'வயிறு கழுவும்' வாழ்க்கையுடையவர்களாக இருக்கவில்லை. அவ்வாறு பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டுப் பொய்பல கூறிப் பாடித் திரிவதை அவர்கள் வெறுத்திருக்கிறார்கள். அரசனின் அறநெறி தவறா ஆட்சியும், மக்களின் குற்றமற்ற இன்பமும், நாட்டின் இடையறா நலமுமே அவர்களின் 'பரிசில் வாழ்க்கை'க் குறிக்கோள்களாகும். இதனால் அந்நாட் புலவர்கள் அரசர்களின் அமைச்சர்கள் போலச் சமயமறிந்து, அவர்கட்கு இன்மொழியாலும் கடுமொழியாலும் அறிவுரை கூறியிருக்கிறார்கள். மன்னர்களிடையே வளர்ந்திருந்த பகையை ஒழிக்கவும் நட்பை வளர்க்கவும் உதவிய தூதுவர்களாகவும் அவர்கள் திகழ்ந்திருக்கிறார்கள். மன்னர்களுடன் சமமாகத் தோழமையுணர்ச்சியோடு பழகி, அன்பால் கட்டுண்ட நண்பர்களாகவும் அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். மக்களுடைய குறைகளை அரசவைகளில் எடுத்துச்சொல்லி, அரசர்கள் அக்குறை களைந்து, நல்லாட்சி நடத்த உதவும் மக்கள் சார்பாளர்களாகவும் புலவர்கள் விளங்கியுள்ளார்கள். உடன் வாழ்ந்த புலவர்களின் உயிரைப் பாதுகாத்தும், பலம் குறைந்த மன்னர்களின் பக்கம் நின்று வாதாடிப் படைவலி மிக்க பகைமன்னர்களின் சினத்தைத் தணித்தும் எல்லா உயிரினங்களிடத்தும் அன்பு செலுத்தியும் சிறந்த அருளாளர்களாக அவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். உலகத் தத்துவங்களின் அடிப்படைகளைத் தெளிவுபடுத்தித் தொகுத்தும் வகுத்தும் கூறிய சிந்தனையாளர்களாகவும் அவர்கள் காட்சி தருகிறார்கள். எனவே வறுமைக்கும் அவ் வறுமையிலும் அவர்கள் காட்டிய செம்மைக்கும் அப்பால் அவர்களுடைய வாழ்வின் பயன்களாக நாம் அறிவன பல அவ் வாழ்வின் விளைவே சங்க இலக்கியம் என நாம் துணிந்து கூறலாம்.

பழங்காலத்தில் மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தமைக்குப் பல எடுத்துக் காட்டுக்கள் கூறலாம். பாரி கபிலரை எப்பொழுதும் தன் அருகில் துணையாகக் கொண்டிருந்தான். கபிலர் பாரியின் அமைச்சர் போலவும் தானைத் தலைவர் போலவும் நண்பராகவும் விளங்கினார். கோப்பெருஞ்சோழன் பொத்தியார் என்னும் புலவரை எப்போதும் தன்னருகில் வைத்திருந்தான். அதியமான் நெடுமானஞ்சி ஔவையாரைப் பிரியமனமின்றிப் பல தந்திரங்களைக் கையாண்டு, அவரை எப்பொழுதும் தன் அருகிலேயே கொண்டிருந்தான். குமணனிடம் பெருஞ்சித்திரனார் என்ற புலவர் கொண்டிருந்த உயிர்நட்பு மிக உயர்ந்ததாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனிடம் மாங்குடிமருதனார் தலைமைப் புலவராய் விளங்கினார். எனவே பழந்தமிழ்ப் புலவர்களின் பரிசில் வாழ்க்கையையும் அவ்வாழ்வின் குறிக்கோள், பயன், நடைமுறைகளையும் நாம் ஆய்ந்தறியக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## இடைக்காலம்

தமிழ் இலக்கியத்தின் இடைக்காலம்-அஃதாவது கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை இருளும் ஒளியும் கலந்த பகுதியாகும். இக்காலத்தில் களப்பிரர் ஆட்சி முதற்கொண்டு பல்வேறு வேற்று இனத்தவர்களின் ஆட்சியும், பல்வேறு சமயங்களின் ஆட்சியும் நடைபெற்று வந்துள்ளன. இடையிடையே தமிழர்தம் உரிமை ஆட்சி தலையெடுத்த பகுதிகளும் இக்கால கட்டங்களில் உண்டு. எனவே தமிழ்ப் புலவர்களின் வாழ்வும் பல்வேறு விதமாக மாறியது; சீர்கெட்டுச் சிதைந்தது. தமிழ் இலக்கியமும் மொழியும் வளர்ச்சி இடையீடுபட்டதும் தடைப்பட்டதும் உண்டு. தமிழ்ப்புலவர் என்றால் பெருமிதமான எண்ணம் போய், வயிற்றுப் பிழைப்பே குறிக்கோளாகக்கொண்டு, பொய்

புனைசுருட்டுப் பாடித் திரிபவர் என்ற கெட்ட பெயரும் ஏற்பட்டது.

இவ்விடத்தில் ஒருண்மையை நாம் நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். சங்ககாலத்தில் மன்னர்கள் அனைவருமே வள்ளல்களாக, நற்பண்பினராக இருந்தார்களா? புலவர்கள் எல்லோருமே சிறுமை சிறிதுமறியாப் பெருமிதவாழ்வே வாழ்ந்தார்களா? இவ்வாறு சிந்தித்தால் அவர்களிலே பண்பற்ற மன்னர்களும் பெருமிதமற்ற புலவர்களும் இருந்திருப்பார்கள் என்பது உறுதி. அவர்களிலே ஒருசில புலவர்களைப்பற்றிப்' போற்றினும் போற்றுவர் பொருள்கொடா விடில் தூற்றினும் தூற்றுவர்' என்று கூறவும் தலைப்பட்டனர். ஆனால் அச்சிறுமையாளர்களின் பெயர்கள் பெரும்பாலும் மறைந்தொழிந்தன. பெருந்தகைமையாளர்களே பெரும்பான்மையினராக அக்காலத்து விளங்கியமையால் அவர்கள் பெயரும் புகழும் நிலைத்து நிற்கின்றன.

இடைக்காலத்திலோ தமிழ்ப் புலவர்களிலே பலர் 'வயிற்றுப் பெருமான் பொருட்டுப் பயிற்றிப் பயிற்றிப் பல உரைப்போரா'யினர். அவர்கள் பணத்திற்காகப் பொருளற்றவற்றைப் பாடிப் பிழைப்போராகிவிட்டனர். ஆனால், பரம்பரைப் பண்புடன் பெருமிதமாக வாழ்ந்த புலவர்களே இடைக்காலத்தில் இல்லை எனல் தவறு. காலம் வளர வளர, தமிழ்ப் புலவர் வரலாற்றில் பெருமிதமிக்க புலவர் பரம்பரை குறைந்துகொண்டும், வயிற்றுப், பிழைப்பையே கருதும் சிறுமைமிக்க புலவர் தொகை வளர்ந்துகொண்டும் வரலாயின. இங்கும் பக்தி நெறியைப் போற்றிய அடியார்கள் ''நாம் ஆர்க்கும் குடி அல்லோம்; நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்'' எனச் செம்மாந்த பெருமிதவுணர்வுடையோராய்த் திகழ்ந்தனர்.

**இக்காலம்**

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதி முதல் இன்று வரை வளர்ந்துவரும் மறுமலர்ச்சி இலக்கியம் நம் போற்றுதலுக்கு உரியதாகும். நம் தீவினைப் பயனாக இம் மறு மலர்ச்சிக் காலத்தில் ஒரு பெருங்குறை-பெரும்பிளவு ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம இலக்கியப் படைப்பாளியும் தமிழ்ப்புலவரும் ஒருவரே. இன்றோ இலக்கியப் படைப்பாளிகள் தனிக்குழுவாகவும் தமிழ்ப் புலவர்கள் ஒரு குழுவாகவும் பிரிந்துவிட்டனர். ஒன்று காட்டுக்கு இழுத்தால் மற்றொன்று மேட்டுக்கு இழுக்கிறது. ஒருவர் மற்றவரைத் தரக் குறைவாக நினைக்கின்றனர். தமிழ்ப்புலவர்கள் படைப்பாளிகளை மொழியறிவு முற்றிலும் இல்லாதவர்கள் என்றும், படைப்பாளிகள் தமிழ்ப் புலவர்களை வெறும் இலக்கணக் கத்துக்குட்டிகளே தவிரப் படைப்புக் கலை அறியாதவர்கள் என்றும் கருதும் முரணும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை விரைவிலே மாறி படைப்புக்கலையில் ஒவ்வொரு தமிழாசிரியரும் ஈடுபட்டால்தான் இப்பிளவு நீங்கும், படைப்பாளிகளையும் மொழிப்புலவர்கள் என்ற எல்லைக்குள் ஏற்க வேண்டும்.

சங்கப் புலவர்களின் உயர்ந்த குறிக்கோள்களும் அஞ்சாமையும் அறிவு வன்மையும் இன்று மீண்டும் வளரக் காண்கிறோம். அன்று அரசர்கள் இருந்த இடத்தில் இன்று மக்களும் மக்களரசியலாரும் இருந்து புலவர்களை ஆதரிக்கின்றனர். அரசியலாரை இடித்துரைக்கும் அஞ்சாமையும் மக்கள் கருத்தை எடுத்துரைக்கும் தலைமையும் தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரிடம் திகழ்ந்தன. பாவேந்தர் பாரதிதாசன் தமிழரைத் தலைநிமிர்த்தும், பெருமிதத்துடன், அஞ்சாத நெஞ்சினராய்ச் சங்கப் புலவர் போலவே திகழ்ந்தார். அரசியலில் முன்னோடியாகவும் தொழிலாளர் தலைவராகவும் இலக்கியச் சிந்தனையாளராகவும் திரு.வி.க.திகழ்ந்தார். இவ்வாறு

மக்களுக்காக வாழும் உயர்ந்த குறிக்கோள்களுடைய கவிஞர்களையும் புலவர்களையும் இன்று பெரும்பான்மையாகக் காண்கிறோம். இது மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாகும்.

நமது நாட்டு நாகரிகத்தின் சிறப்பும் அந் நாகரிகத்தை அழியாமல் காக்கும் இலக்கியங்களைப் படைத்த புலவர்களின் பெருமையும் மனப்பண்பாடும் அறிந்து போற்றுதற்குரியன. சங்காலப் புலவர்களின் பெருமித வாழ்வையும் அவர்களுக்கும் அரசர்களுக்கும் இருந்த நெருங்கிய தொடர்புகளையும் உணர்தல் வேண்டும். பழந்தமிழர் நாகரிகத்தை அறிந்து போற்ற விரும்பும் இந்நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும், பழந்தமிழ்ப் புலவர்களின் வரலாறு, வாழ்க்கை முறை, குறிக்கோள்களைக் கற்றுத் தெளிய வேண்டும். அப்போதுதான் இலக்கியமும் மொழியும் நாகரிகமும் பண்பாடும் மக்களின் இன்பவாழ்வும் செழித்தோங்கும்.

# 2 பரிசில் வாழ்க்கை

பழந்தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கையைப் 'பரிசில் வாழ்க்கை' எனக் குறிப்பிட்ட திறம் பாராட்டுக்குரியது. அப்புலமை வாழ்க்கையைப் பிறிதொரு பொருத்தமான பெயரால் குறிப்பிடுதல் இயலுமா என்பது ஐயமே. பாணர்கள் அல்லது புலவர்கள் வள்ளல்களை நாடிச் சென்று, தங்கள் கலைத்திறமைகளைக் காட்டியும் பாடல்களைப் பாடியும் மகிழ்வுறுத்துவர். மன்னர்களும் வள்ளல்களும் அவற்றைக் கண்டு மனம் உவந்து அளிக்கும் பரிசில்களைப் பெற்று வாழ்வர். இதுவே 'பரிசில் வாழ்க்கை' எனப்படும்.

புலவர்கள் தங்கள் கல்வியிலேயே நாட்டம் செலுத்திப் புலமையின்பம் பெற்று வாழ்பவர்களாதலால், அவர்கள் தாம் வாழ்வதற்கேற்ற பொருள் சேர்க்கும் ஆற்றலுடையராயினும் அம் முயற்சியில் நாட்டம் செலுத்தாது புறக்கணிக்கும் மனப்பான்மை உடையவராவர்.

*''தாம்இன் புறுவது உலகின்புறக் கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்''* (திருக்குறள் 399)

என்றார் திருவள்ளுவர். தாம் இன்பமுற்றுவதற்குக் காரணமான கல்வியினால் உலகமும் இன்புறுதலைக் காணும் இப் புலமை வேட்கையினர் மேன்மேலும் அதனையே காமுற்று விரும்புவர் என்பதாம். எனவே புலமை நாட்டம் கூடுந்தோறும் பொருள் நாட்டம் குறைதலும், பொருள் நாட்டம் கூடுந்தோறும் புலமை நாட்டம் குறைதலும் கண்கூடு. தன்னியல்பாக நிகழும் இந்நாட்டக் குறைவால் அவர்தம் தேட்டம் குறையும். அவர்களை என்றும் வறுமை நாடி வந்துகொண்டிருக்கும். அளவு கடந்த செல்வத்தை அள்ளிக் கொடுத்தாலும் மறுநாளே அனைத்தையும்

விட்டு விட்டு வறுமையை நோக்கியே அவர்கள் வாழ்வு நடைபோடும். இதனால் புலமை வாழ்வு வறுமையோடு தொடர்புடையது எனவும் நினைக்கப்படுவதாயிற்று. பொதுநலம் போற்றும் கலைகளையும் இலக்கியத்தையும் வளர்க்கும் அன்னார்தம் வாழ்வு நாட்டின் பொதுவுடைமையாகும். ஆதலால் அக்கால அரசர்கள் வரிசையறிந்து பரிசில் நல்கி அவர்களை வாழ்வித்தனர். கலைகளை வளர்த்தல் புலவர்தம் கடமையாயினாற்போல, அவர்களைப் பேணிக் காத்தல் அரசர்தம் கடமையாயிற்று.

*'பாண் கடன் ஆற்றிய' (புறம் : 201)*
*'பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்' (புறம் : 203)*

இவ்வாறு வள்ளல்களின் கடமையாகப் புலவர்களையும் பாணர்களையும் போற்றும் செய்தி பலவிடத்தும் குறிக்கப்படுதல் காண்க. எனவே, பாட்டும் கலையும் அவை பெறும் பரிசும் பண்டமாற்றுப் பொருள்களல்ல என நாம் உணர வேண்டும். வணிகத்துறையில் ஒரு பொருளைக் கொடுத்துப் பிறிதொரு பொருளை அதற்கு மாறாக வாங்குவது பண்டமாற்றாகும். அதுபோலப் புலவர் பாட்டைப் பாடி அதற்கு மாற்றாகப் பரிசில் பெறுகிறார் எனவும், இஃதோர் 'பரிசில் வாணிகம்' எனவும் நாம் கருதுதல் கூடாது. அவ்வாறு யாரும் கருதினால், அது கலைத்துறைக்கே இழுக்குத்தேடுவதாகும். முன்பு பாணர்களும் புலவர்களும் நாட்டிற்கு இன்றியமையாதனவும் நாகரிகத்தின் சின்னமும் ஆன கலைகளையும் மொழியையும் இலக்கியத்தையும் வளர்த்தார்கள். அத் தொண்டினை அறிந்து, போற்றி, அரசு தனது காணிக்கையாக அன்னார்க்குப் பரிசில்களைச் செலுத்தியது என்பதே பரிசில் வாழ்க்கையின் பொருளாகும். 'வரி இறுத்தல்' மக்கள் கடன் ஆனாற்போலப் 'பாண் கடன் இறுத்தல்' அரசர் கடன் ஆனமைக்கு அதுவே காரணமாகும். (இறுத்தல் - செலுத்துதல்)

## ஈதலும் ஏற்றலும்

பரிசில் வாழ்க்கையைப் பற்றி மற்றுமொரு தவறான எண்ணம் சிலரிடையே உண்டு. அஃது 'ஏற்பது இகழ்ச்சி என்றும், 'பசுவிற்கு நீர் வேண்டும் என்று இரந்தாலும் அதைப்போன்று நாவிற்கு இழிவு தருவது பிறிதொன்றில்லை' என்றும் 'ஈயென இரத்தல் இழிந்தன்று' என்றும் பாடிய புலவர்களே, இவ்வாறு வள்ளல்களையும் செல்வர்களையும் நிலக்கிழார்களையும் நாடிச் சென்று, இரந்துண்டு வாழ்ந்திருக்கின்றனரே என்பதாகும்.

யாசிப்பது இழிவுதான் எனவே ''எவ்வளவு தாழினும் யாசித்து வாழ நினையாதே'' என அறவுரை பகர்ந்தனர் நம் முன்னோர். 'இரந்து எளிதாக வாழலாம்' என்று எண்ணுபவர்களை அவர்கள் இடித்துரைத்திருக்கின்றனர். ஆனால் எவ்வித முயற்சியும் பயனற்றுப்போக, ஊழ்வினையால் வறுமையுற்று வாடும் ஒருவனைக் காப்பாற்ற வேண்டாமா? அதனால்தான் 'குறிப்பறிந்து' கொடுக்கவேண்டும் என்பதை நம் முன்னோர் வற்புறுத்தினர். ஒருவர் தன் வறுமையை இல்லை என்ற சொல்லால், வாய் விட்டுச் சொல்லும் எல்லையளவும் காத்திருக்கக்கூடாது என அவர்கள் அறம் போதித்துச் சென்றனர். ஒருவன் முயற்சியுடையவனாக இருந்து, அவனது ஊழ்வினை வயத்தாலும் சூழ்நிலைக் காரணங்களாலும் அம் முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போகின்றன என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவன் நிலைமை என்னாவது? தற்கொலை புரிந்து கொள்வதோ தவறு. ஒருவன் தன்னளவில் எங்ஙனமும் பொறுத்துக்கொண்டு போகலாமாயினும், தன் கண்ணெதிரில் தன்னுடைய மனைவி, மக்கள் வறுமையால் வாடும்போது, அதனைப் பார்த்துக் கொண்டிருத்தல் பாவமன்றோ? எனவேதான், இத்தகைய வாழ்க்கைச் சிக்கலுக்குத் தீர்வுகாணும் மருந்தாக 'ஐயம் இட்டுண்' என்றும் நம் முன்னோர் சொல்லி வைத்தனர். இரவு, இரவச்சம் பாடிய திருவள்ளுவர் ஈகையை முன் வைத்த காரணம் இது

கருதியேயாகும். 'ஏற்பதிகழ்ச்சி' என இடித்துரைத்த ஔவையார், அடுத்து 'ஐயம் இட்டுஉண்' என அறிவுரை கூறியதன் உட்பொருளும் இதுவேயாகும். வாழ்க்கை பல நிலைகளையுடையது. பெருமிதவாழ்வு நோக்கி மேன் மேல் உயர்தலே கருதத்தக்கதாகும். இதனை உணர்ந்த கழைதின்யானையார்,

*''ஈஎன இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்*
*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;*
*கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்*
*கொள்ளேன்என்றல் அதனினும் உயர்ந்தன்று''*

*(புறம், 204)*

எனக் கூறினார். புலவர்கள் ஏற்போராக மட்டுமிருந்திலர்; ஈவோராகவும் திகழ்ந்துள்ளனர். பொருளைச் சேமிக்க வேண்டும்; பிற்காலத்துக்காகப் பதுக்கி வைக்க வேண்டும் என்ற எண்ணங்கள் அவர்பால் இருந்ததில்லை.

பெருஞ்சித்திரனார் குமணனைப் பாடிப் பெரும்பரிசில் பெற்று வீட்டுக்குக் கொணர்ந்தார். அவற்றைக் காட்டி, மனைவியிடம், ''இவற்றைப் பத்திரப் படுத்து; சேமித்துவை'' என்று அவர் கூறவில்லை. ''உன்னை விரும்புபவர்களுக்கும் நீ யார்யாரை விரும்புகிறாயோ அவர்களுக்கும் உன் சுற்றத்தவர் முதலானவர்களுக்கும், உனக்குக் 'குறியெதிர்ப்பை' நல்கியவர்களுக்கும், இப் பரிசிற்பொருள்களை வரையாது கொடுப்பாயாக! இன்னார்க்கு மட்டும் என்ற வரையறை வேண்டா, என்னைக் கேட்டுக் கொடுக்க வேண்டும் என்பதுமில்லை. போற்றிக் காத்து, வல்லமைப்பட வாழலாம் என்றும் கருதவேண்டாம். நானும் கொடுக்கிறேன்; நீயும் கொடு. முதிரமலைத் தலைவனாகிய குமணன் நல்கிய செல்வத்தை வரையாது வழங்கு'' என்று தம் மனைவியிடம் பெருஞ்சித்திரனார் மொழிகின்றார். இதிலிருந்து அக்காலப் புலவர்களின் மனநிலையை நன்குணரலாம்.

*''நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்*
*பல்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர யாழ!நின்*
*நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கும்*
*இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!*
*பழம்தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்துவேல் குமணன் நல்கிய வளனே''*

*(புறம் : 163)*

**பாட்டும் பரிசிலும்**

பாடிப் பரிசில் பெற்று வாழ்கின்ற புலவர்களது வாழ்வை, முழுவதுமாக 'இரத்தலும் ஏற்றலும்' என்ற மேற்கண்ட சாதாரண மக்களின் வாழ்வுடன் ஒப்பிட்டு எண்ணுதல் கூடாது. உலகத்தில் இருவேறு வாழ்வுகள் உள்ளன. திருவள்ளுவர் இதனை நன்கு தெளிவுபடுத்தினார்:

*''இருவேறு உலகத் தியற்கை ; ,திருவேறு*
*தெள்ளியர் ஆதலும் வேறு'' (374)*

உலகத்தில் செல்வத்தையே கருதி, அதனையே சேர்க்கும் ஆற்றல் உடையராதல் வேறு; தெளிந்த புலமை நலமும் கலைத்திறமும் உடையராதல் வேறு. இவ்விரண்டும் ஒன்றினொன்று இயல்பாகச் சார்வதில்லை. செல்வத்தையே நாடுவோன் கல்விநலம் மிகுதியாக வாய்க்கப் பெறுவதில்லை. கல்வி நலம் உடையோன் அதிலேயே இன்பம் கண்டு மூழ்குதலன்றிச் செல்வம் சேர்க்க விழைவதில்லை. இவையிரண்டும் மிக அருமையாக, ஆயிரத்தில் ஒருவரிடம் ஒன்றுசேர்தல் கூடும். எனவே கல்வியாளராதலையும் செல்வராதலையும் உலகத்தின் இருவேறு இயற்கைகள் எனத்திருவற்ளுவர் வகுத்துரைத்தார். உலகியலிலும்

சாதாரணமாக இவ் இருவேறு நிலைகளையே நாம் கண்கூடாகக் காண்கிறோம். இவைஇரண்டிற்கும் அடிப்படையான 'ஊழ்வினைகளே' வேறு வேறென்று அறிஞர்கள் விளக்கம் கூறுவர். எனவே, புலவர்களிடமும் பாணர்களிடமும் வறுமை குடிகொண்டதில் வியப்பில்லை. அவர்கள் சிந்தனையெல்லாம், நினைவெல்லாம் கனவுகளும் கூட நாட்டின் நலத்தையும், கல்வி கலைவளர்ச்சியையுமே நாடி நின்றன. தங்கள் வயிற்றுக் கவலையை உணர்ந்து அவர்கள் வருந்தினால்-தங்கள் கவனத்தைப் பொருளீட்டச் செலவிட்டால் இழப்பு யாருக்கு? நாட்டிற்கன்றோ! இதனை உணர்ந்த பண்டைய மன்னர்கள், 'வரிசையறிந்து பரிசில்கள்' நல்கினர்; பாண்கடன் இறுத்தனர். இறுத்தல் என்பது குடிமக்கள் வரிகட்டுவதைக் குறிக்கும். 'இறு' என்ற சொல்லிலிருந்துதான் 'இறை' என்ற சொல் வந்தது. 'வரி' என்பது அதன் பொருள். மன்னர்களும் அதுபோலப் பாணர்களுக்குத் தம் கடமையைச் செலுத்துவதாகக் கொண்டு, 'பாண்கடன் இறுத்தல்' என்ற சொல்லாட்சியைச் சான்றோர்கள் பயன்படுத்தியுள்ளனர். எனவே, பரிசில் வாழ்வின் புறத்தோற்றம் இரத்தலும் ஏற்றலும் போலத் தோன்றினும், அதன் அகத் தோற்றம்-உட்பொருள்-பரிசிலும் பெருமிதமுமே எனக் கொள்ள வேண்டும். நாட்டின் நலன் கருதிப் பாடுபடும் இலக்கியத் தலைவர்களுக்கு, அக்கால அரசர்கள் முறையாகக் காணிக்கை நல்கிப் போற்றியமையாலன்றோ, இன்றளவும் அவ் அரசர்கள் அவ் இலக்கியத்தின் வாயிலாக நினைவு கூர்ந்து பாராட்டப்படுகின்றனர்!

### கோவூர்கிழார் விளக்கம்

சங்க இலக்கியத்தில் 'பரிசில் வாழ்க்கை' என்ற அரிய தொடர் ஆளப்படும் இடங்கள் சில. சிறுபாணாற்றுப் படையில், இடைக்கழிநாட்டு நல்லூர்நத்தத்தனார் இதனைச் சுட்டிச் சென்றுள்ளார். ஓய்மானாட்டு நல்லியக் கோடன் அரண்மனையில், நாளோலக்கத்தில் அமர்ந்திருக்கும்

காட்சியைப் புனைந்துசொல்லும் அவர், 'மன்னன் வரிசையறிந்து பரிசில் நல்குதலையும், பரிசிலர் ஏத்திப் புகழப் பன்மீன் நடுவண் பால்மதி போல வீற்றிருத்தலையும்' விளக்குகின்றார்.

*''பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்தப்*
*பன்மீன் நடுவண் பால்மதி போல*
*இன்நகை ஆயமொடு இருந்தோன்...''*

*(அடி : 218-220)*

என்பது அவர் வாக்கு. கோவூர் கிழார் இத் தொடரை மட்டுமன்றி, இவ் வாழ்வு எத்தகையது என்பதைப் பற்றியும் நன்கு விளக்கிப் பாடியுள்ளார்.

இளந்தத்தனார் என்பவர் ஒரு பழந்தமிழ்ப் புலவர். அவர் ஒரு சமயம் உறையூருக்குச் சென்றார். அப்போது உறையூரை 'நெடுங்கிள்ளி' என்ற சோழமன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய பங்காளியாகிய நலங்கிள்ளிக்கும் அவனுக்கும் மனவேறுபாடு தோன்றிப் பகையாகி அது முற்றியிருந்த நேரம் அது. புலவர் இளந்தத்தனார் சோழன் நலங்கிள்ளிக்கு மிகவும் வேண்டியவர் என்பதையும், அவனிடமிருந்துதான் உறையூருக்கு வந்துள்ளார் என்பதையும் நெடுங்கிள்ளி கேள்விப்பட்டான். அவனுக்கு ஓர் ஐயம் எழுந்தது. 'ஒருவேளை இப் புலவர் இளந்தத்தனார் சோழன் நலங்கிள்ளியின் ஒற்றனாக, நம் நிலைமைகளை உளவறிய வந்துள்ளாரோ? என்று அவன் மனம் தவறாக எண்ணியது. உடனே, நலங்கிள்ளி மீதிருந்த சீற்றமெல்லாம் ஒருங்கு குவிந்து அப் புலவர் மீது பாய்ந்தது. அதனால் அப் புலவரைக் கொல்லத் துணிந்தான் நெடுங்கிள்ளி. நெடுங்கிள்ளி கொடுங்கிள்ளி ஆயினான்!

கோவூர்கிழார் அச்செய்தியைக் கேள்விப்பட்டார். அன்று சோழநாட்டில் வாழ்ந்த பெரும்புலவர்களில் அவர் புகழ்மிக்கவர்; மக்கள் அனைவராலும் அறியப்பட்டவர். இரக்கவுள்ளம் மிக்க அவர் இளந்தத்தனாரைக் காப்பாற்றத் துடித்தார். சோழமன்னன்

நெடுங்கிள்ளியிடம் விரைந்து சென்றார். அவனிடம் புலவர்களின் பரிசில் வாழ்க்கையினது இயல்பையும் சிறப்பையும் உயர்வையும் பற்றிய உண்மைகளை எல்லாம் எடுத்துரைத்தார். உண்மை உணர்ந்த நெடுங்கிள்ளி, பெரும்புலவரின் வாக்கிற்கு மதிப்புக் கொடுத்தான்; இளந்தத்தனாரை உடனே விடுவித்தான். தீய கொலைத் துன்பத்தினின்றும் ஒரு புலவரின் உயிர் காப்பாற்றப்பட்டது. அப்போது கோவூர்கிழார் எங்ஙனம் புலவர்களின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார் என்பதை இங்குக் காண்போம். பரிசில் வாழ்க்கையின் விளக்கமே அவர் பாடலில் ஓவியம் போலத் தீட்டப்பட்டுள்ளது.

''பரிசில் வாழ்க்கை எத்தகையது? அது பிறருக்குத் தீமை செய்யக்கூடியதா? ஒற்றுரைத்து உயிர்வாழ்வதா? அரசியல் சார்பு உடையதாய், நடுநிலை பிறழ்வதா? வஞ்சகம், பொய் இவற்றைத் துணையாகக் கொண்டாதா? அல்ல, அல்ல''-இக் கருத்துக்களை அலசி ஆராய்ந்து உணர்த்தத்தொடங்கியகோவூர்கிழார் நெடுங்கிள்ளியைப் பார்த்துக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார் :

''பழுத்த மரங்களை நாடிப் பறவைகள் செல்லுவது போல வள்ளன்மையுடைய அரசர்களை நாடிப் புலவர்கள் செல்லுவர். அவ்வள்ளவ்கள் வாழும் இடங்கள் இடையிட்ட நெடிய தூரங்களை யுடையனவாயினும், சுரம்பல கடந்து செல்வார்கள். அவ்வள்ளல்களைக் கண்டு தமது திருந்தாநாவினல் இயன்றவரை முயன்று பாடுவார்கள். அவர்கள் கொடுப்பதை மனம் மகிழ்ந்து ஏற்றுக் கொள்வார்கள். அவ்வாறு பெற்றதைத் தாமே அருந்தாமல் தம் சுற்றத்தார்க்கெல்லாம் பகிர்ந்து கொடுப்பார்கள். மற்றையவர்களுக்கும் மனம் சுருங்காமல் அள்ளிக் கொடுப்பார்கள். தங்கள் புலமைத் தகுதியை உயர்த்திக்கொண்டு அதற்கேற்ப மேலும் மேலும் உயர்வாகப் பரிசில் பெற்றுச்சிறக்கவேண்டும் என்பதே அவர்களின்

தலையாய முயற்சியாகும். இத்தகைய பண்புகளெல்லாம் அமையப் பெற்றதே பரிசில் வாழ்க்கை.

எனவே, இத்தகைய பரிசில் வாழ்க்கை பிறர்க்குத் தீமை செய்ய நினைப்பதன்று. பகைவர்களும் நாணுமாறு, பெருமிதத்துடன் திறமைபொருந்த இனிதாக வாழும் அஃதொன்றே இவ் வாழ்வின் வளர்ச்சியாகும். மேலும் உயர்ந்த புகழ்ச் சிறப்பினையும் மண்ணுலகை ஆளும் செல்வச் சிறப்பினையுமுடைய நும்போன்ற பேரரசர்களின் தலைமைப்பாட்டையும் அப்பரிசில் வாழ்க்கை உடையதாகும்''. இவ்வாறு கோவூர்கிழார் பரிசில் வாழ்க்கையின் தீதறியா இயல்பினை விளக்கி இளந்தத்தனாரைக் காப்பாற்றினார். அப்பாடல் வருமாறு:

*''வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி*
*நெடிய என்னாது சுரம்பல கடந்து*
*வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்*
*பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி*
*ஓம்பாது உண்டு கூம்பாது வீசி*
*வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை*
*பிறர்க்குத் தீதறிந் தன்றோ இன்றே,*
*திறப்பட*
*நண்ணார் நாண அண்ணாந் தேகி*
*ஆங்கினிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்*
*மண் ஆள் செல்வம் எய்திய*
*நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே''*

*(புறம்: 47)*

''சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்' என்ற முறையில் மிக அருமையாகவும், இனிமையாகவும், கூர்மையாகவும் 'பரிசில் வாழ்க்கை'யின் சிறப்பு இதில் விளக்கப்பட்டுள்ளது. மூவேந்தருள் ஒரு குடியினனாகிய சோழ மன்னனைப் பார்த்து

''நும்மைப் போன்ற பெருமையும் தலைமையும் கொண்டதே புலவர் வாழ்க்கை'' என அவர் அறிவுறுத்தும் திறம் எண்ணு தற்குரியது.

**மன்னரும் புலவரும்**

ஒரு நாட்டு மன்னன் அந்நாட்டு மக்களின் வேறல்லன்; அவன் அந்நாட்டுத் தலைமைக் குடிமகன்' என்பது நம் முன்னையோர் கருத்து. இன்றும் நாம் நம் குடியரசுத் தலைவரை, நம் நாட்டின் முதற்குடிமகனாகவே (First Citizen of the nation) கருதுகிறோம். ''பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த, ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்'' *(1: 31-32)* என்று சிலப்பதிகாரத்தில் சோழ மன்னன் தலைமைக் குடிமகனாகக் கூறப்பட்டுள்ள செய்தி கருதற்பாலது. 'மண் ஆள் செல்வம் எய்திய நும்மோரன்ன செல்வம்' என்ற விடத்து, ''யாமும் ஒரு செல்வம் உடையேம்'' என்ற 'நிகர் உணர்வு' காணப்படுகிறது. மனிதனுக்குத்தாழ்வுணர்வும் (Inferiority complex) தவறு; மீயுணர்வும் (Superiority complex) குற்றம். நிகருணர்வே நேர்மையான பெருமிதஉணர்வாகும். உரிமையுணர்வும் அஃதேயாகும். பழந்தமிழ்ப் புலவர்களிடம் இவ் உணர்வு தலை தூக்கி நின்றமையைப் பற்பல சான்றுகளால் நாம் நிறுவலாம். அப் புலவர்கள் அக்கால மன்னர்களுக்கு நண்பர்களாய், வழிகாட்டிகளாய், தத்துவப் பேரறிஞர்களாய் (Friend, guide and philosopher) விளங்கினர் எனச் சுருக்கமாகக் கூறலாம். புறநானூற்றில் வரும் கொளுக்குறிப்புக்களில். மன்னனைப் பாடிய புலவர்களை 'அவனை அவர் பாடியது' என்ற தொடராற் சுட்டுதல் கருதுதற்குரியது. மன்னர்களினும் புலவர்களுக்கே மிகுமதிப்பு இருந்ததை இது காட்டுகிறது. மன்னர்களின் அகவாழ்விலும் புறவாழ்விலும் புலவர்களுக்குத் தொடர்பிருந்தது. 'செவியறிவுறூஉ','வாயுறை' என்ற துறைகள், மன்னர்ளை இடித்துக் கூறித் திருத்திய புலவர்களின் பெருமித வாழ்விற்

பிறந்தவைகளேயாம். செவியறிவுறூஉ பணிவுடையனாக வேண்டும் என்பதை வற்புறுத்துவது. வாயுறை 'வேம்பும் கடுவும்' போலச் செவிகைப்பச் சொற்பெய்து திருத்த முயல்வது. இன்னும் நிலையான உண்மைகளைக் கூறும் 'பொருள்மொழிக் காஞ்சி' போன்ற துறைகளும் புலவர்களின் ஆளுமையையும் சான்றாண்மையையும் காட்டுவன. 'நும்மோரன்ன செம்மலுமுடைத்தே' என்ற செம்மாந்த உள்ளத்தேதான், இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும் உயிர்வாழக் கூடிய இலக்கியங்களைப் படைக்கும் திறம் துளிர்விடும். நாள்தோறும் செத்துப் பிறக்கும் கோழைகளாகவும், காக்கை பிடிப்பதே தொழிலாகவும் பொருள் சேர்ப்பதே குறிக்கோளாகவும் வாழ்பவர்களிடம் இலக்கியம் முகிழ்க்குமா? குறுக்கு வழிகளில் பதவிகளைப் பற்றிக் கொண்டுவிடலாம்; செல்வத்தையும், செல்வாக்கையும் வைத்துப் பட்டங்களை 'வாங்கி' விடலாம்; விளம்பரம் தேடிக்கொண்டுவிடலாம். ஆனாலும் ஒரு புலவனை, கவிஞனை, கலைஞனை மட்டும் யாராலும் உண்டாக்கிவிட முடியாது.

### புலவரும் புலவரும்

அன்று புலவர்களிடையே 'புலமைக் காய்ச்சலை' விடப் 'புலமைப் போட்டி' யே மேலோங்கி நின்றது. ஒரு புலவர் தாம் எவ்வளவு உயர்ந்தநிலையை எய்தியவராய் இருந்தாலும் பிற புலவர்களை நன்கு மதிக்கக்கூடியவராய் இருந்தார் என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. இளந்தத்தனை விடுவிக்க முயன்ற கோவூர்கிழாரே முதற் சான்றாக அமைகின்றாரன்றோ?

மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன், தன் வெற்றிச் சிறப்பைப் பாடக் கபிலர் இல்லையே என்று வருந்தியபொழுது, பொருந்தில் இளங்கீரனார் என்ற புலவர், ''மிக்க பொருட்செறிவு, சொற்செறிவுடைய செய்யுளைப் பாடுகிற நாவினையும், கேள்வியறிவினையும், விளங்கும்

புகழ்நலத்தையும் உடைய கபிலனைப் போல யானும் பாட முயல்வேன்'' என்று அடக்க உணர்வோடு கூறுகிறார்.

*''தாழாது*
*செறுத்த செய்யுட் செய்நெந் நாவின்*
*வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்*
*இன்றுளன் ஆயின் நன்றுமன் என்றநின்*
*ஆடுகொள் வரிசைக்கு ஏற்பப்*
*பாடுவல்மன்னால் பகைவரைக் கடப்பே''*

*(புறம் : 53)*

இங்கு புலவரின் பொறாமையுணர்ச்சியைத் தூண்டும் அளவு 'கபிலனில்லையே' என வருந்திய மன்னனிடம், 'அவன் இல்லாவிட்டால் என்ன? என்னைவிட அவன் பாடி விடுவானோ?' என்று திருப்பிக் கேட்காமல், அப் பெரும்புலவரை மதித்துக்கூறிய இளங்கீரனாரது சொற்கள் குறிப்பிடத்தக்கவை.

பெருஞ்சித்திரனார் குமணனிடம் பரிசில் பெறச் சென்றபோது, பாரி, பேகன் போன்ற வள்ளல்கள் எழுவரைக் குறிப்பிட்டு, அவர்கள் எல்லாம் மாய்ந்தபிறகு, 'நின்னை நினைத்து வந்தேன்' என்றார், அப்போது அவர் அவ் எழுவர்க்கும் ஒவ்வொரு சிறப்புக் கூறினார். அவர்களுள் ஆயைக் குறிப்படும் பொழுது, 'திருந்து மொழி மோசி பாடிய ஆயும்' என்றார் (புறம் : 158). உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் ஆய் மன்னனைப் பாடிய பத்துப் பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. ஆய் மன்னனின் அவைக்களப் புலவர் போல இம் மோசியார் விளங்கியுள்ளார். அதியமான் நெடுமான் அஞ்சி கோவலூரை வெற்றி கொண்ட பொழுது ஔவையார் அவனை மிகவும் பாராட்டினார்: ''நீ பாடுநர்க்கு அரியையாய் மேன்மேலும் சிறப்புற்றுத் திகழ்கின்றாய்! பரணன் தன் ஆற்றலால் நின்னைப் புகழ்ந்து பாடியுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது'' எனப்

பரணரால் பாடப்பட்டுள்ள சிறப்பை ஔவையார் தம் பாடலில் கூறியுள்ளார்.

*அன்றும் பாடுநர்க்கு அரியை; இன்றும்*
*பரணன் பாடினன் மற்கொல்'' (புறம் : 99)*

மாறோக்கத்து நப்பசலையார், மலையனையும் அவனது முள்ளூர் மலையையும் கபிலர் பாடியிருப்பதைச் சுட்டுமிடமும் உண்டு.

*'மல்லல் நன்னாட்டு அல்லல் தீரப்*
*பொய்யா நாவின் கபிலன் பாடிய*
*மையணி நெடுவரை' (புறம்:174)*

புலவர்கள் பாடுவதால் அல்லல் தீர்ந்து, வளம்பெருகி வாழும் சிறப்புண்டாகும் என்ற இப்பாடற் கருத்து எண்ணுதற்குரியது. பதிற்றுப்பத்தில்,

*''அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய*
*மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்*
*உவலை கூராக் கவலையில் நெஞ்சின்*
*நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்'' (பதிற்:85)*

எனப் பெருங்குன்றூர்கிழார் குறிப்பிடுகிறார். இதில் புலவர்களின் பேராற்றலும் கீழ்மையறியாப் பண்பும் கவலையற்ற பெருமிதவாழ்வும் போல்வன நன்கு விளக்கப்படுகின்றன. திருப்பரங்குன்றத்தை நல்லந்துவனார் தம் பரிபாடல்களில் சிறப்பித்துப் பாடியுள்ளமையை நாம் பரிபாடல் தொகுப்பில் காண்கிறோம். இதனை மதுரை மருதன் இளநாகனார் சிறப்பிக்கும் வகையில்,

*சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்*
*சினம்மிகு முருகன் தண்பரங் குன்றத்து*
*அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை''*
*(புறம் : 59)*

என்று காட்டுதலும் காண்க. இவற்றிலிருந்து அக்காலப் புலவர்களிடையே ஒருவரது புலமையை மற்றவர் அறிந்து போற்றும் பெருந்தன்மை இருந்தமையை அறியலாம். இருங்கோவேள் பாரிமகளிரை மணந்து கொள்ள மறுத்தபோது, சினமுற்ற கபிலர், புலவரை இகழ்வதால் வரும் கேட்டினை எடுத்துக் கூறுகிறார். இருங்கோவேளின் முன்னோருள் ஒருவன் கழாத்தலையார் என்ற புலவரை இகழ்ந்ததனால், அவனுடைய அரையம் என்ற பெருநகரமே அழிவுற்றதாம். அதைக் கூறி அவனைக் கடிந்துரைக்கிறார் கபிலர்.

*''கோடிபல அடுக்கிய பொருள்நுமக்கு உதவிய*
*நீடுநிலை அரையத்துக் கேடும் கேள் இனி;*
*நுந்தை தாயம் நிறைவுற எய்திய*
*ஒலியற் கண்ணிப் புலிகடி மா அல்!*
*நும்போல அறிவின் நுமருள் ஒருவன்*
*புகழ்ந்த செய்யுள் கழாஅத் தலையை*
*இகழ்ந்ததன் பயனே!''* *(புறம் : 203)*

இவ்வாறு அக்காலப் புலவர்கள் தங்கள் ஆற்றலை உணர்ந்தவர்களாய், ஒருவரை ஒருவர் அறிந்து, போற்றி வாழ்ந்தனர். 'புலம் மிக்கவரைப் புலமை தெரிதல் புலம்மிக்கவர்க்கே புலனாம்' என்ற பழமொழிக் கருத்து இவர்கள் வாழ்வினின்றும் எடுத்துரைக்கப்பட்டதேயாகும்.

**பரிசில் வேட்கை**

பழம்புலவர்கள் வறுமையால் பரிசில் கேட்டுச் சென்றதும் உண்டு. தங்கள் 'வரிசையறிந்து பரிசில் நல்கப்படவேண்டும்' என்று பரிசில் கேட்டுச் சென்றதும் உண்டு. புலமையில் ஒருவரின் ஒருவர் விஞ்சவேண்டும் என்று போட்டியிட்டனர். இதனால் தமிழும் தமிழ் இலக்கியமும் செழிப்புற்றன. ஏழ்மையைக் களைதற்பொருட்டுமானத்தை விற்றுப் பிழைப்பதை அவர்கள் வெறுத்தனர். பெருஞ்சித்திரனார் வாழ்வு அதற்கு ஓர்

எடுத்துக்காட்டு. தம் தாயும் மனைவியும் வறுமையால் வாடுவதைச் சுட்டிக் காட்டி, அவர் குமணனிடம் பரிசு கேட்டதுண்டு. குப்பைக் கீரை உப்பின்றி வெந்ததை வைத்துச் சாப்பிடும் நிலையை அவர் விளக்குகிறார். ஆயினும் மனம் மகிழ்ந்து சிறு குன்றிமணியளவு பரிசில் தந்தனுப்பினும் பெற்றுச் செல்வதாகவும், முகம் மாறுபட்டு யானைப் பரிசிலே நல்கினாலும் வேண்டா என்றும் அவர் அறிவுறுத்துகிறார். தம் வறுமையை அடிப்படையாகவைத்துத் தாம் தாழ்வாக நடத்தப்படுவதை அவர் விரும்பவில்லை.

*''உயர்ந்து ஏந்து மருப்பின் கொல்களிறு பெறினும்*
*தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென்; உவந்துநீ*
*இன்புற விடுதியாயின் சிறிது*
*குன்றியும் கொள்வல் கூர்வேல் குமண!''*

*(புறம் : 159)*

பிறகு ஒருமுறை அவர் வெளிமான் என்ற மன்னனிடம் சென்றார். அவன் உறங்கிக் கொண்டிருந்தவன், தன் தம்பியை அனுப்பிப் பரிசில் கொடுக்கக் கூறினான். இளவெளிமானோ 'ஏதோ கொஞ்சம் கொடுத்து, இவரை அனுப்பிவிடுவோம்' என்ற முறையில் நடந்துகொண்டான். அதைக் கண்டு சினமுற்ற பெருஞ்சித்திரனார்.

*''பருகு அன்ன வேட்கை இல்வழி*
*அருகில் கண்டும் அறியார் போல*
*அகம்நக வாரா முகன்அழி பரிசில்''* *(புறம் : 207)*

வேண்டா என வெறுத்துப் பாடினார். 'பெரிதே உலகம் பெறுநர் பலரே' என்ற நெஞ்சழுத்தத்தால், 'வாயா வன்கனிக்கு உலமருவோர் யாரோ' என நகையாடினார். தானே பழுக்காத கனியைத் தடிகொண்டடித்தால் பழுக்குமா என்பது உலகப் பழமொழி. இதனை எடுத்துக்காட்டி, பரிசிலை மறுத்துவிட்டுச் சென்ற அவர் குமணனிடம் சென்று, 'யானைப் பரிசில்

வேண்டும்' எனச் சொல்லிக் கேட்கிறார். ''நீ தரும் யானைப்பரிசிலால், அதன் மீதமர்ந்து நான் வீடு செல்லுகையில், அதனைக் கண்டு என் மனைவி நின் செல்வத்தை வியக்கவேண்டும்' என்று அவர் வேண்டுகோள் விடுக்கிறார்.

*''அருந்துயர் உழக்கும்என் பெருந்துன்புறுவிநின்*
*தாள்படு செல்வம் காண்தொறும் மருள*
*பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய*
*உயர்மருப்பு ஏந்திய வரைமருள் நோன்பகடு*
*ஒளிதிகழ் ஓடை பொலிய, மருங்கில்*
*படுமணி இரட்ட, ஏறிச் செம்மாந்து*
*செலல் நசைஇ உற்றனென் விறல்மிகு*
*குரிசில்!''* *(புறம் : 161)*

இங்ஙனம் பெற்றுச்சென்ற பரிசிலையும் அவர் தாமே வைத்துக்கொள்ளவில்லை. வெளிமான் ஊருக்குச் சென்று அவனுடைய காவல்மரத்தில் அதைக் கட்டி வைத்துவிட்டு, பிறகு அவனிடமே சென்று, 'நீ எமக்கு நன்முறையில் பரிசு நல்கவில்லையாயினும், யாம் நினக்கு யானைப் பரிசில் நல்கியுள்ளேம். பெற்றுக் கொள்க!''என்று அவனது புத்தியில் படுமாறு இடித்துரைத்தார்.

*''இரவலர் புரவலை நீயும் அல்லை;*
*புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர் ;*
*இரவலர் உண்மையும் காண் இனி; இரவலர்க்கு*
*ஈவோர் உண்மையும் காண் இனி; நின்ஊர்*
*கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த*
*நெடுநல் யானை எம்பரிசில்!*
*கடுமான் தோன்றல் செல்வல் யானே!''* *(புறம் : 162)*

தம்மை மதியாமல் தரப்படும் பரிசில்களை அவர்கள் விழைந்ததில்லை. பிழைப்புக் கருதி அவர்கள் பிழைபட

வாழவில்லை. அதியமான் நெடுமான் அஞ்சி, பெருஞ்சித்திரனார் தன்னைப் பாடி வந்தபொழுது, அவரைக் காணாமலே ஆள் மூலம் பரிசு கொடுத்தனுப்பினான். அதனை மறுத்து,

> *"காணாது ஈத்தஇப் பொருட்கு யான்ஓர்*
> *வாணிகப் பரிசிலன் அல்லென்; பேணித்*
> *தினை அனைத்து ஆயினும் இனிது-அவர்*
> *துணை அளவு அறிந்து நல்கினர் விடினே"*
>
> *(புறம் : 208)*

என்று பெருஞ்சித்திரனார் புலவர் உள்ளத்தை வெளிப்படுத்தினார். இன்றும் புலமை வாழ்க்கையுடையாரும், கலைத்துறையினரும் ஆகிய பலர் தத்தமது துறைகளில் வாணிகநோக்கமொடு வாழ்ந்து பெருஞ்செல்வம் ஈட்டக் காண்கிறோம். பலசரக்குத் கடை வைத்துப் பணம் சேர்ப்பதற்குப் பதிலாகக் கல்விகலைத்துறைக்கு இவர்கள் வந்துவிட்டவர்களாவர். இவர்களால் கல்வியோ, கலையோ ஒரு சிறிதும் வளராவிட்டாலும், இவர்களின் சொந்தவளர்ச்சி பெரிதாயிருக்கும். சங்ககாலத்தும் இத்தகையார் இருந்திருக்கக்கூடும். ஆனால் குறிக்கோளுடன் வாழ்ந்த உயர்ந்த புலவர்களை இன்றும் நாம் பாராட்டி மகிழ்கிறோம். அவர்களை நினைவுகூர்ந்து போற்றுகிறோம். பெருஞ்சித்திரனாரின் வாழ்க்கைச்சித்திரத்தில் இங்ஙனம் நாம் தெரிந்து கொள்ளக்கூடிய பல செய்திகள் உள்ளன.

## பரிசில் வகைகள்

அரிசி முதல் யானை வரை எத்தனையோ பரிசில்களை நல்கிப் புலவர்களை வள்ளல்கள் போற்றினார்கள். நாடுகளையும் ஊர்களையும் கூடப் புலவர்களுக்குப் பரிசிலாக அன்று மன்னர்கள் அளித்தனர். பொன் அணிகலன்களையும் பொற்றாமரைப் பூக்களையும் முறையே மகளிர்க்கும் பாணர்க்கும் வழங்கும் மரபு அன்றிருந்தது.

*''மறம்பாடிய பாடினியும்மே*
*ஏர்உடைய விழுக்கழஞ்சின்*
*சீருடைய இழைபெற்றிசினே;*
*இழைபெற்ற பாடினிக்குக்*
*குரல்புணர்சீர்க் கொளைவல் பாண்மகனும்மே*
*ஒள்ளழல் புரிந்த தாமரை*
*வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே''*

*(புறம் : 11)*

பாணர்களுக்கு இத்தகைய பரிசில்கள் நல்கப்பட்டன. இசையும் கூத்தும் இவ்வாறு வளர்க்கப்பட்டன. புலவர்களுக்கோ யானையும் தேரும் பரிசிலாக நல்குவதே, அவர் தம் புலமைச் சிறப்புக்குப் பொருத்தமென்று கருதப் பட்டது.

*''பாணர் தாமரை மலையவும் புலவர்*
*பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்''*

*(புறம் : 12)*

என்ற அடிகளைக் காண்க. மேலும் புலவர்கள் தத்தமது வரிசையறிந்து பரிசில் தரப்பட வேண்டும் என்று விரும்பினர். எல்லோர்க்கும் ஒரு மாதிரியாகப் பரிசில் நல்குவதை அவர்கள் வெறுத்தனர். இப்புலமைப் போட்டியேஅற்றை இலக்கியத்தை வளப்படுத்தியது; புலவர்களின் தனித்திறமையைத் தூண்டியது; தத்தமது புலமைச் செல்வத்தில் மேலும் ஒரு நுட்பத்தை, ஓங்கும் ஒட்பத்தைப் புகுத்திப் புலவர்கள் தம் 'பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்து' வாழ்ந்தனர். 'இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர்' எனப் போற்றுமளவு இலக்கியத் துறையில் மேன்மேலும் வளர்ச்சி கண்டனர்; முன்னேற்றம் படைத்தனர். இதனை உலகம் அறிந்து போற்றுவதற்கு அடையாளமே 'பரிசில்' என நினைந்ததால், பிறரினும் மேம்பட்ட பரிசில்களைப் பெறவே ஒவ்வொருவரும் விழைந்தனர். பெற்ற பரிசில்களைப் பேணிக் காக்கவேண்டும் என்று இவர்கள் சாமர்த்தியமாக

வாழவில்லை. நாளைக்கு வேண்டும் என்று சேமிக்கவில்லை. தாமும் ஓம்பாது உண்டனர். பிறருக்கும் ஓம்பாது வீசினர்! பெற்றது கொண்டு தம் சுற்றம் அருத்தினர். ஆயினும் தம் தகுதிக்கேற்ப, மேன்மேலும் சிறந்த பரிசுகளைப்பெற வேண்டும் என்று அப்புலவர்கள் 'பரிசில் வேட்கை' உடையராயிலங்கினர். 'எத்தனை பரிசு பெற்றோம்? எத்துணை பரிசு பெற்றோம்?' என்று அளவிலும் தகுதியிலும் பிறரினும் மேலான பரிசுகளைப் பெற்றுத் தம் புலமைச் சிறப்பை நிலைநாட்டுவதிலேயே குறிக்கோளாக இலங்கினர். 'வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை' எனக் கோவூரார் சுட்டிய காரணம் அதுவே.

புலவர்களை எவ்வாறு போற்றவேண்டும் என்பதற்குக் கபிலர் இலக்கணமே வகுக்கிறார். ''ஒரு மன்னனைக் காண நான்கு திசைகளிலிருந்தும் பரிசில்மாக்கள் வரத்தான் செய்வர். அவர்களின் வறுமைதீரக் கொடுப்பது எளிது; ஆனால் அவர் களின் தரத்தை அறிந்து அதற்கொப்பக் கொடுப்பதுதான் மிக அரிய செயல். எனவே, அதனை நன்கு அறிவாயாயின், வரிசை கருதாது புலவர்கள் எல்லோரையும் ஒரே தரத்தில் வைத்துப் பார்க்கும் பொது நோக்கினைத் தவிர்வாயாக!' என்று அவர் மலையமான் திருமுடிக்காரிக்கு அறிவுரை கூறுகிறார்.

*''ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்*
*பலரும் வருவர் பரிசின் மாக்கள்*
*வரிசை அறிதலோ அரிதே! பெரிதும்*
*ஈதல் எளிதே மாவண் தோன்றல்!*
*அதுநற்கு அறிந்தனை யாயின்*
*பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே''* (புறம் : 121)

வரிசைக்கு வருந்தும் இவ் வாழ்க்கை பெருமித நோக்குடையது. 'பிறரினும் சிறந்த புலமையாளர் இவர்; பிறர் எவருமேபெறாத பரிசில்பெற்றவர் இவர்' என்பனவே புலவர்க்குப் பெருமையும் புகழுமாக இருந்தன.

வயிற்றுப்பசியை நீக்கமட்டுமன்று; வானார்ந்த புகழ்ப்பசியைத் தணித்துக்கொள்ளவும் அவர்கள் பாடினர். தங்கள் பாடல் தலைசிறந்தது; தங்கள் புலமை ஒப்பற்றது எனப் பாராட்டப் பெறும் வண்ணம் அவர்கள் தங்கள் புலமைச் செல்வத்தையும் கலைக் கருவூலத்தையும் பெருக்கினர்: போற்றினர்; வளர்த்தனர். இவ்வரிசை பெற விழையும் போட்டி மனப்பான்மையே அக்காலப் புலவர்களின் வளர்ச்சிக்குத் தோன்றாத் துணையாய் இருந்தது. இஃதின்றேல், புலமை ஆர்வமற்றுப் போயிருக்கும்: வளர்ச்சி தடையுற்றுச் சிதைந்திருக்கும்.

### பழுத்தமரம் நாடும் பறவைகள்

பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப் போல, வள்ளல்களையே நாடிச் செல்வர் புலவர். இவ் உவமை அறிந்து மகிழுதற்குரிய ஒன்றாகும். புலவர் வாழ்வு பறவைகளின் வாழ்வு போன்றதே! சுதந்திரமானது; தன்னை மறந்தது; கற்பனை வானிலே உலவுவது! பழுத்த மரங்களையே நாடிச் செல்வது! ஆம், பெருஞ் செல்வர்கள் ஈயாத கருமிகளாய்த் தம் அருகிலேயே இருப்பாராயினும் அவரை நாடிப் புலவர்கள் செல்வதில்லை. காடுகளையும் பாலைவனங்களையும் கடந்து செல்ல வேண்டியிருப்பினும், ஈர மனம் படைத்த வள்ளல்களையே நாடிச் செல்வர்!

'வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி' (புறம்:47) என்று கோவூரார் கூறுவதற்கொப்பப் பெரும்பாணாற்றுப் படையில் 'பழுமரம் தேரும் பறவை போல' என்ற இக் கருத்து இடம் பெறுகிறது. 'பழுமரம் உள்ளிய பறவை போல, (புறம் : 370) வள்ளலை நாடி வந்ததாகப் பிறிதொரு புலவரும் சுட்டுகிறார். பறவைகளை நுனித்தறிந்து பாடிய பழந்தமிழ்ப் புலவர்கள் அப்பறவைகளைப் போலவே வாழ்ந்ததில் வியப்பில்லை அல்லவா?

## பொய்யாச் செந்நா

தாமும் தம் குடும்பமும் வாழவேண்டும் என்பது கருதி, முற்காலப் புலவர்கள் இலக்கியம் படைத்திலர்.

மொழியும் இலக்கியமும் முன்னேறவேண்டும் என்பதே அவர்கள் குறிக்கோளாகும். அத்தகைய உயர்ந்த நோக்கமற்ற புலவர்கள் ஒருசிலர்கூட அன்று வாழ்ந்திருக்க மாட்டார்களோ என வினவலாம். அத்தகைய வாழ்வுகள் தமிழ் இலக்கியத்தில் தாமிருந்த சுவடுதானும் இன்றி மறைந்தொழிந்தமை ஒன்றே, இங்கு அத்தகையவை கால்கொள்ளவில்லை என்பதைக் காட்டும்.

அக்காலப் புலவர்கள் வள்ளல்களின் பண்புகளை நிரல்பட, அழகாகக் கற்பனை நயப்படுத்திப் புனைந்தார்களே தவிர, இல்லாதவற்றைக் கூறினார்கள் அல்லர். இவ்வாறு பொய்யே கூறாது, உண்மையையே கூறும் பழக்கமுடைய நாவே ‘பொய்யாச் செந்தா’ எனப்படும். வன்பரணர் இதனை நன்கு விளக்குகிறார் : ‘‘பெருமையற்ற மன்னர்களைப் புகழ வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களிடம் இல்லாத பண்புகளையும் அவர்கள் செய்யாத அருஞ்செயல்களையும் அவர்கள் மீது ஏற்றிப் புகழ்ந்து பாட எம்முடைய சிறிய, செவ்விய நாவிற்கு இயன்றிலது என்று அவர் கூறுகிறார்.

*‘‘பீடுஇல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி*
*செய்யா கூறிக் கிளத்தல்*
*எய்யா தாகின்று எம்சிறு செந்நாவே’’* (புறம் : 148)

*‘‘வாழ்தல் வேண்டிப்*
*பொய்கூறேன்; மெய்கூறுவல்!’’* (புறம் : 139)

என்பது மருதன் இளநாகனார் கூற்று. ‘சிறுசெந்நா’ என்றும், ‘வடியா நா’ என்றும், ‘திருந்தா நா’ என்றும் அப் புலவர்கள் அடக்கமாகச் சொல்லிக் கொள்வதும் உண்டு. ஆயினும் ‘உள்ளது

புனைதலல்லது, இல்லது புனைந்தறியாத' தமது நாவினை, அவர்கள் 'பொய்யாத நா' என்று கூறிக் கொள்வதே, நம் உள்ளத்தை ஈர்க்கும் செய்தியாகும். அவர்கள் பாடல்களிலே 'இயன்மொழி' என்பதற்கொப்ப மன்னர்களின் இயல்பைக் கூறி வாழ்த்தும் முறை காணப்படுகிறதேயன்றிப் பொய்யும் வழுவும், அடிப்படையில்லாக் கற்பனையும் காணப்படுதல் இல்லை.

பரிசில் வாழ்க்கை இங்ஙனம் பல கூறுகளிலும் சிறந்து விளங்கியதை, ஒரு பாடலில் தொகுத்துக் கூறிய கோவூர் கிழாருக்கு நம் நன்றி உரியதன்றோ?

# 3 அமைச்சரின் அறிவுரை

பழங்கால அரசியலில் அமைச்சர்கள் முக்கியமான அங்கமாகத் திகழ்ந்தனர். அரசர்களுக்கு உடனிருந்து ஆட்சியில் உதவுபவர்கள் அவர்களே. இக்கால அரசியல் முறைப்படி அமைச்சர்கள் மக்களின் பிரதிநிதிகளாக, மக்களின் தலைவர்களாக, மக்கள்குரலை எதிரொலிப்பவர்களாகத் திகழ்கின்றார்கள். மக்களின் பிரதிநிதிகளிலிருந்தே அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குடியாட்சி முறைப்படி ஆளுநரும், குடியரசுத் தலைவரும் ஆள்பவர்களாகவும், அமைச்சர்கள் அவர்களுக்கு நன்முறையில் ஆலோசனை அல்லது அறிவுரை கூறுபவர்களாகவுமே திகழ வேண்டும். எனினும் நடைமுறைப்படி, இன்று அமைச்சர்களே நாட்டை ஆள்பவர்களாக உள்ளனர்.

அன்றைய நிலையில் திருவள்ளுவர் அமைச்சர்களுக்குக் கூறிய இலக்கணங்கள் இன்றும் பொருந்துவனவே. அமைச்சர்கள் கல்வி அறிவுடையவர்களாகத் திகழவேண்டும். உலகத்து இயற்கையினை ஆராய்ந்து அறிந்தும் செயலாற்ற வேண்டும்.நூற்கல்வியால் நுட்பமானவற்றையெல்லாம் பகுத்தறியக் கூடுமாயினும், அன்றன்று உலகியலையும் அறிந்து செயற்படவேண்டும். நூற்படிப்பும், உலகியல் அறிவும் இணைவது அருமை. நூலின்கண் மதிநுட்பம் மிக உடையார் உலகியலறிவு சிறிதும் இல்லாதவராக இருப்பர். உலகியலறிவில் மிகத் தேர்ந்தவர்களுக்கோ நூலறிவு சிறிதுமின்மையால் முன்னது பயன்படாதொழியும். அமைச்சராக வருபவர்க்கோ இவ் இருதிறனும் ஒருங்கமையப் பெறவேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

*"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்*
*யாவுள முன்னிற் பவை* (636)

*"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்து செயல்"* (637)

அரசன் தானும் அறிவற்றவனாய், அறிந்தார் சொல்லையும் கேளாதவனாய் இருந்தாலும், அமைச்சன் தன் கடமையில் தவறாது, அவனுக்கு உறுதிபயப்பனவற்றையே எடுத்துக்கூறவேண்டும். அரசன் சினந்து கொள்வான் என அஞ்சாமல் அவனது தவறுகளை எடுத்துக்காட்டி, இடித்துக்கூறித் திருத்துதல் வேண்டும். தன் உயிருக்கு இறுதிநேரினும், உறுதிகூறுதலில் நின்றும் தவிர்தல் கூடாது.

சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை முதலியன அவர்களுக்கு இன்றியமையாத பண்புகளாகும். கேட்டவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து கேளாதவரும் கேட்கவிழையுமாறு அவர்கள் பேச வேண்டும். இத்தகைய நாவன்மையுடையராயின், அவ் அமைச்சர்தம் அறிவுரையை அரசும் நாடும் விரைந்துகேட்டு நலமடையும். எல்லாவற்றுக்கும் மேலாக அறநெறியை நன்கறிந்து கொண்டுசெலுத்துபவனாக அவ் அமைச்சன் திகழ வேணடும்.

*"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்*
*திறனறிந்தான் தேர்ச்சித் துணை'* (635)

இவ்வாறு திருவள்ளுவரால் விளக்கப்பட்ட அமைச்சர்தம் பண்புகளில் பலவற்றைப் பழந்தமிழ்ப் புலவர்களிடத்தும் நாம் காண்கிறோம். அரசன் தவறுசெய்தவிடத்துத் திருத்தியும், தக்க சமயங்களில் நல்வழிகாட்டியும் பகையரசர்கட்குத் தம் அரசரின் பெருமையை நினைப்பூட்டியும், நாட்டின் நன்மைக்காகச் செய்யவேண்டிய செயல் முறைகளை வகுத்துக்கூறியும், அப் புலவர்கள் பணியாற்றியுள்ளனர். அவற்றுள் சிலவற்றை இவண் நினைவுகூர்தல் தகும்.

## வரிவாங்கும் முறை

குடி மக்கள் தம் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கினை வரியாகச் செலுத்தவேண்டும் என்பது அக்காலப் பொதுவிதி. ஆனால் அக்கால அரசர்கள் அனைவருமே முறைப்படி வரி வாங்கினர் எனக் கூறவியலாது. அரசனைவிட அவனுடைய அதிகாரிகளே நெறியை மறந்து, நேர்மை தவறி ஆர்ப்பரித்து அடாதன செய்வர். சில சமயங்களில் அரசர்கள் தவற்றுக்கு ஆளாவதுண்டு; அல்லது அரசர்கள் அறியாமல் அதிகாரிகள் தவறிழைப்பதும் உண்டு. பாண்டியன் அறிவுடை நம்பி எனற அரசன் சிறந்த பண்பாளன். புலவரைப் போலப் பாடும் ஆற்றல் பெற்றவன். அவன் மக்கட்செல்வத்தைப் பற்றிக் 'குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி, இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும் மயக்குறு மக்கள்' எனப் பாடிய கவிதை என்றும் நிலைபெற்று இன்புறுத்தவல்லதாகும். அவன் அறநெறி தவறாமல் ஆட்சி செய்து வந்தான். ஆயினும், எவ்வாறோ, அவனையும் அறியாமல் சில தவறுகள் அவனது ஆட்சியில் நேர்ந்தன. வரி வாங்கும் முறையில்தான் தவறு நேர்ந்திருக்கக்கூடும். தரமறிந்து, பளுவைத் கணக்கிட்டு வரிவிதித்து வாங்காத அதிகாரிகளால்தான் தவறு நேர்ந்திருக்கக்கூடும். இதனால் மக்களிடைய்யே கசப்புணர்வு அரும்பியது. மக்கள் வருந்தலாயினர். இதனை மன்னனுக்குச் சொல்லிநல்வழிப்படுத்துவது யார்?

பிசிராந்தையார் என்ற புலவர் பாண்டிய நாட்டின் 'பிசிர்' என்னும் ஊரினர். ஆதன்தந்தை ஆந்தை எனவும் பூதன் தந்தை பூந்தை எனவும் மருவிவழங்கும் என இலக்கணம் கூறும். இவ்வகையில் தொன்மைமிக்க பெயரினராகிய ஆந்தையார், சோழமன்னனின் உயிர்நண்பர் ஆவார். கோப்பெருஞ்சோழனைக் கேள்விப்பட்ட அளவிலேயே அவனிடம் ஆழ்ந்த நட்புக்கொண்ட பெருமகனார் அவர். அவர் தம்நாட்டு மன்னனாகிய பாண்டியனிடம் நேரே சென்றார். ஓர்

அழகிய பாடல் மூலம் வரிவாங்கும் முறையை விளக்கிக் கூறி அவனை நல்வழிப்படுத்தினார்.

பொதுநிதித் துறையில் 'வரிமுறை' (Taxation) சிறப்பிடம் பெறுகிறது. இதுபற்றி இன்று பொருளியற் பேரறிஞர்கள் எத்தனையோ விதிகளையும் முறைகளையும் வகுத்துள்ளனர். மேனாட்டுப் பேராசிரியர் ஒருவரின் கருத்து இவண் நினைவுகூர்தற்குரியது: ''வரி வாங்குவது என்பது வாத்தினுடைய சிறகுகளைப் பறிப்பது போலச் செயற்பட வேண்டும். எவ்வளவு குறைவான கூச்சலில் எவ்வளவு மிகுதியான சிறகுகளைப் பறிக்க முடியுமோ அவ்வளவையும் பறிப்பதுபோல, மக்கள் வருந்திக் கூக்குரல் இடாவண்ணம் வரிவாங்கவேண்டும்.'' (''Pluck the goose with as little squealing as possible''-Colbert'') வரிவாங்குவது பொதுநல வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டும். அதற்காகக் குடிமக்கள் செய்யும், தியாகம், மிகக் குறைவாக இருக்கவேண்டும். மக்களை வளப்படுத்தி, வாழவைத்துச் செல்வத்தைப் பெருக்கி அதிலிருந்து வரி வாங்கவேண்டும். அவர்களை வாழவே முடியாமல் வாடவிட்டு வரிவாங்குவது தவறு. குடிமக்கள் தாமாக விரும்பி வரி கொடுக்குமளவு, மன்னன் நாட்டுவளத்தைப் பெருக்கவேண்டும். வரி கொடுப்பதனால் மக்களின் வாழ்வும் பாதிக்காமல், அதே நேரத்தில் நாட்டுப் பொதுநலத்தைப் பன்மடங்காகப் பெருக்கும் வகையில் (Maximum social welfare) வரிமுறை அமைவதே சிறப்பு.

வரிவாங்கும் முறையில் தவறுநேர்ந்தவிடத்து, அறிவுடை நம்பிக்கு அறிவுரை கூறவிரும்பினார் பிசிராந்தையார். அவர் தமிழகத்தின் தலைசிறந்த பொருளியற் பேராசிரியராகக் காணப்படுகிறார். நயமாகவும் பயமாகவும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அவர் அறிவுரை கூறியுள்ள திறம் அறிந்து போற்றுதற்குரியதாகும்.

''யானைக்கு நாம் உணவிடுகிறோம். அரிசி முதலியவற்றைக் கலந்து கொடுக்கும் 'நெய்ம்மிதி கவளமே' யானைக்கு உணவாகும். ஒரு வேலி நிலத்தில், இருபதில் ஒரு பாகமாகிய, ஒரு மா நிலத்திற்கும் குறைந்த நிலப்பகுதியில் விளைந்த நெல்லாயினும், காய்ந்த நெல்லை அறுத்துக் கொண்டு வந்து, கவள உணவாக ஆக்கியானைக்கு ஊட்டினால், அதுபல நாட்களுக்குப் பயன்படும். ஆனால், யானை தானே தனித்து வயலிற் புகுந்து உண்ணுமானால்,நூறு காணிநிலமாக இருந்தாலும், அதில் விளைந்த நெல் அதன் வாயிற்புகுந்து உணவாவதைக் காட்டிலும், அதனுடைய கால்களில் மிதிபட்டுப் பெரிதும் அழிவுறும்.

அறிவுள்ள அரசன் அறநெறி தவறாமல் வரி வாங்குவானாயின், அவன்பால் செல்வம் கோடி கோடியாகப் பெருகுவதுடன், நாட்டுப் பொதுச் செல்வமும் தழைக்கும். கோன் உயர்வதுடன் குடிமக்களும் உயருமாறு அமையும் வரிமுறையே சிறந்தது. அவ்வாறன்றி அரசன் உறுதியும், அறிவும் அற்றவனாய் இருந்துவிட்டால், அவனுடைய அதிகாரிகள் கை மேலோங்கி, அஞ்சாமல் அடாத செயல்கள் செய்யத் தொடங்குவர். தரமறிந்து வரிவிதிக்காமல், ஆரவாரத்தினால் நாள்தோறும் அனைவரையும் ஆட்டிப் படைக்கும் அதிகாரிகளுடன் கூடி, அவர்களின் ஆலோசனையைக் கேட்டு, பரிவின்றிக் கொள்ளும் பொருள் தொகுதியை அரசன் நச்சுவானாயின், யானை புகுந்த நிலம் அழிவது போல, நிலைமை ஆகும். அவனும் உண்ணாமல் அவனால் ஆளப்படும் உலகமும் வாழாமல் எல்லாம் அழிந்துபடும்.''

*''காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே*
*மாநிறை வில்லதும் பன்னாட்காகும்*
*நூறுசெறு வாயினும், தமித்துப்புக்கு உணினே*
*வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்*
*அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே*

*கோடியாத்து நாடு பெரிது நந்தும்;*
*மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்*
*வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு*
*பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்*
*யானைபுக்க புலம் போல,*
*தானும் உண்ணான் உலகமும் கெடுமே''* *(புறம் : 184)*

பாண்டியன் அறிவுடைநம்பியிடம் அறிவுரை கூறும்போது, 'அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே, கோடியாத்து நாடு பெரிது நந்தும்' எனக் கூறியதில் எத்தனை நகையாடற் குறிப்பு இருக்கிறது என்பது சிந்தித்தற்குரியது. 'நின் பெயர்தான் அறிவுடைநம்பி என இருக்கிறதே தவிர, அதற்கேற்ற அறிவு நின்னிடமில்லையே' என்ற தொனிப்பொருள், மன்னன் மனத்தில் சுருக்கென்று தைக்கும் வண்ணம் கூறப்பட்டிருக்கிறது. வரிவாங்கும் முறையில் சிறப்புடையது எது? வரியால் அரசும் வாழவேண்டும்; நாடும் வளரவேண்டும். இவ்வாறு திட்டமிட்டுப் பெறும்வரியேசிறந்ததாகும். கல்லென் சுற்றமாகிய ஆரவாரம் மிக்க அதிகாரிகள், இன்னாரிடம் இவ்வளவு வாங்கவேண்டும் என்ற வரிசை அறியார்; மக்களிடம் சென்று அன்பும் ஈரமும் கெடப் பொருளைத் தாமே எடுத்துக்கொள்வர் என்பதைச் சுட்டவே, 'பரிவு தப எடுக்கும்' என்றார் புலவர்.

யானை புகுந்த நிலம் அதற்கும் உணவு அளிக்காமல், தானும் தழைத்துச் செழிக்காமல் அழிவுறும். அதுபோல அரசன் கண்ணை மூடிக்கொண்டு, குடிகளை வருத்தி வரிவாங்கத் தொடங்கினால், குடிகள் நலிவுற்று அழிவர். அவர்கள் வாழ்வு சிதைந்தால் அரசனின் வருமானமும் சுருங்கிவிடும். அவ்வாறன்றி வயல்நெல்லைக் கவள உண வாக்கி முறைப்படி கொடுத்தால், யானைக்குப் பல நாட்களுக்கு உணவு கிடைக்கும். அரசனும் யாரிடம் வரியை மிகுதியாக வாங்கவேண்டும் யாரிடம் குறைந்து வாங்க வேண்டும் என ஆராய்ந்து, மழைபெய்யாக்

காலத்தில் வரியைத் தள்ளுபடி செய்தும், நல்ல விளைவுக்காலத்தில் அதற்கேற்பச் சிறிது வரியைக் கூட்டியும், இவ்வாறு வரிவாங்குவானானால் அவனும்உயர்வான்; அவனால் ஆளப்படும் நாடும் உயரும். அவன் நெடுநாட்களுக்குத் தொடர்ந்து வரி வாங்கவும் அது பயன்படும். இன்றேல் ஒரு முறை அடியோடு வரிதந்ததுடன், மீண்டும் வரிதர மாட்டாமல் அக்குடிகள் அழிவுற்று விடும். இங்ஙனம் வரிமுறையைக் கவளஉணவு உவமையில் வைத்துக் காட்டிய பெருமை போற்றுதற்குரியதாகும்.

## உழவுத் தொழிலுக்கு உதவி

சிற்றூர்களையே மிகுதியாகவும் உழவுத்தொழிலையே உயிராகவும் கொண்டநாடு நம்நாடு. நம்நாட்டுப் பொருளாதாரம் இவ் உழவுத்தொழிலையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. 'உழுவாரே உலகிற்கு அச்சாணி போல்வர்' எனப் போற்றுகின்றார் திருவள்ளுவர். இந்த உழவுத் தொழிலின் பெருமையை அறிந்து, அதனை வளர்க்கும் வழிதுறைகளை நாடிச் செயலாற்றுவதே அன்றும் அரசர்களின் கடமையாகவிருந்தது; இன்றும் அரசியலாரின் கடமையாக விருக்கிறது.

வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர் சோழ நாட்டில் வெள்ளைக்குடி என்ற சிற்றூரில் வாழ்ந்தவர். அவர் உழவப்புலவர். உழவுத்தொழிலைச் செய்து அவர் தம் வாழ்வைநடாத்திவந்தனர். அக்காலத்தில் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற மன்னன் சோழநாட்டை ஆண்டுவந்தான். அவனது ஆட்சிக் காலத்தில் உழவுத் தொழில் புறக்கணிக்கப்பட்டது போலும். பல நிலங்கள் விளைவு குன்றின. சோழ நாட்டிலேயே இந்நிலையென்றால் கேட்பானேன்? நாகனாரும் தமது நிலங்களில் விளைவு பெறாமையால் வரிகட்ட இயலாதவராயினார். அவர் வாழ்ந்த வெள்ளைக்குடிச் சிற்றூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல

உழவர் பெருமக்கள் வரிகட்ட முடியாமல் திண்டாடினர். அரசியல் சுற்றத்தினரோ 'எப்படியும் தங்கட்கு வரி கட்ட வேண்டும்' என அடிக்கடி வலியுறுத்தி வந்தனர். தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகள் விளைவு குறைந்தமையால் வரிகட்டுதல் முற்றும் இயலாததாயிற்று.

இந்நிலையில், மக்களின் சார்பாக அரசரிடம் நாட்டு நிலையை எடுத்துக் கூற வேண்டிய கட்டாயம் நாகனாருக்கு ஏற்பட்டது. 'கவிஞர்கள் முறைப்படி அறிவிக்கப்படாத உலகச் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆவர் ' என்பது ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞரின் வாக்கு. (Poets are the unacknowledged legislators of the world:P.B.Shelley).அதற்கு ஏற்ப, மன்னனிடம் மக்களின் சார்பாக நாகனார் சென்றார். நிலைமையைக் குறிப்பாக விளக்கிய அவர் 'உழவுத் தொழிலின் பெருமையை' எடுத்தோதினார். அரசனும் உண்மை உணர்ந்து. 'பழஞ்செய்க் கடனை' நீக்கினான். இன்றும் விளைவற்ற காலங்களில் 'வரிவஜா' செய்வதைப் பார்க்கிறோம். இங்ஙனம் வெள்ளைக்குடிநாகனார் தம் 'பழஞ்செய்க்கடனை வீடு கொண்டது' மட்டுமன்றி, மக்களையும் வரித்துன்பத்தினின்றும் காப்பாற்றினார்.

கிள்ளிவளவனை நோக்கி நாகனார் விடுத்தவிண்ணப்பம் அழகானது; செறிவானது. முதலில் 'அரசு எனப்படுவது நினதே' எனவும், 'நாடு எனப்படுவது உன்னுடையதே' எனவும் அவனைப் பலபடப் பாராட்டி அழைத்தார். பிறகு,

*'நினவ கூறுவல்; எனவ கேண்மதி!'*

எனத் தம் விண்ணப்பத்தைத் தொடங்கினார். இங்ஙனம் வளவனிடம் கேட்கும் உணர்வைத் தூண்டிவிட்டுப் பிறகு அவனுடைய குறைகளை ஒவ்வொன்றாகக் கூறத் தொடங்கினார். முதலில் கிள்ளிவளவன் தன்னிடம் முறைவேண்டி வருபவர்களுக்குக் காட்சிக்கு எளியனாய்

இருந்திலன் என்று தெரிகிறது. எனவே நாகனார், அவனிடம் முதல் முறையீடாக, ''அறம் நிலைபெற்ற செங்கோல் நாட்டத்தினால், முறைவேண்டும் காலத்து, அம்முறை கேட்டு வரும் மக்களுக்கு மன்னன் செவ்வி எளியவனாய் இருக்கவேண்டும். மழைத்துளிவேண்டும் காலத்துப்பெருமழை பொழிந்தாற் போல இது அம்மக்களுக்கு இன்பத்தைத் தரும்'' என்றார்.

*''அறம்புரிந் தன்ன செங்கோல் நாட்டத்து*
*முறைவேண்டு பொழுதில் பதன் எளியோர்*
*உரைவேண்டு பொழுதில் பெயல் பெற்றோரே''*

அதற்கும் மேலாக அவர், அவன் நெஞ்சிற்போய்ப் பதியும் படியாகச் சில சொற்களைக் கூறினார்: ''உன் தலைக்கு மேலே வைக்கப்பட்டுள்ள வெண்கொற்றக்குடை எதற்காக என்று தெரியுமா? அது வெயிலை மறைப்பதற்காக வைக்கப்பட்டதன்று. வருத்தமுற்ற குடிகளுக்கு வாட்டம் தவிர்க்கும் நிழலாகப் பயன்டவேண்டும் என்று அறிவுறுத்தும் அடையாளமே அது. அதனை நீ மறவற்க!''

*''தண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை*
*வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே ''*

எவ்வளவு மனவுறுதி இருந்தால், மன்னன் எதிர்நின்று இச் சொற்களைக் கூறியிருக்கமுடியும் என்று எண்ணிப்பார்மின்! வருந்திய குடிகளைக் காவாதானுக்கு, வெண்கொற்றக்குடை எதற்கு? என்பார் போல் அதன் உட்பொருளை அவர் விளக்குகிறார். குடியாட்சி முறையில் சட்டப்பேரவைகளும் சட்டமன்றங்களும் இங்ஙனம் அரசினரின் தவறுகளையும் குற்றங்குறைகளையும் பற்றித்திறனாய்ந்து, இடித்துக்கூறும் இடங்களாகவே பயன்படுகின்றன. எனினும் அங்கும்கூட நடுநிலை பிறழாது, மனத்தில் சென்று தாக்கும் வண்ணம் இடித்துக்கூறும் உறுப்பினர்களையோ, அங்ஙனம்

கூறுவனவற்றைப் பொறுமையோடு கேட்கின்ற, செவிகைப்பக்கூறப்படும் சொற்பொறுக்கின்ற ஆட்சியாளர்களையோ நாம் காண்கின்றோமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

மேலும் வெள்ளைக்குடி நாகனார், கிள்ளிவளவனிடம் உழவின் இன்றியமையாமையை விளக்கி, உழவர்களைப் போற்றிக் காக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கின்றார்: 'உன் படை வீரர்கள் போர்க்களத்தில் எதிர்த்து வரும் பகைவர்களைத் தாக்கி அழித்து, அவர்கள் தோல்வியுற்று ஓடுவதைக் கண்டு ஆரவாரம் செய்யும்படியான வெற்றி மகிழ்ச்சி உனக்கு எவ்வாறு வாய்த்தது? அவ் வெற்றிகளனைத்தும் நின் நாட்டு உழவர்கள் விளைத்துத் தந்த விளைவின் பயனேயாகும் என நீ உணரல் வேண்டும். பொய்யும் குறளையும் பேசுவாரது உள்ளீடற்ற சொற்களை நம்பிவிடாது, நீ பகடு புறந்தருவோராம் உழவர்களைப் பாதுகாக்க வேண்டும். அக் குடிகளைப் பாதுகாப்பாய் ஆயின், நின் பகைவர்கள் நின் அடிவணங்கிப் பணிகுவர்,'' என்றிவ்வாறு அவர் அறிவுரை கூறினார்.

*''வருபடை தாங்கி பெயர் புறத்து ஆர்த்துப்*
*பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை*
*ஊன்றுகால் மருங்கின் ஈன்றதன் பயனே;*
*மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்*
*இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்*
*காவலர்ப் பழிக்கும்இக் கண் அகல் ஞாலம்*
*அதுநற்கு அறிந்தனை ஆயின் நீயும்*
*நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது*
*பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பி*
*குடிபுறந் தருகுவை யாயின்நின்*

*அடிபுறந் தருகுவர் அடங்காதோரே''* *(புறம் : 35)*

இங்ஙனம் கிள்ளிவளவனுக்கு நன்முறையில் அறிவுரை கூறும் வெள்ளைக்குடி நாகனாரின் நாவன்மை போற்றுதற்குரியதாகும். மாரி பொய்த்தாலும் வளம் குறைந்தாலும் இயற்கையில் எம்மாறுபாடு தோன்றினாலும் அரசனையே உலகம் பழிக்கும்.எனவே, 'மழைபெய்யாததற்கு யான் என்ன செய்வேன்?' என்று எம் மன்னனும் தப்பித்துக் கொள்ள வியலாது.

சேரன் செங்குட்டுவன் பாண்டிய மன்னனுக்கு நேர்ந்த தீவினைப் பயனைக் கேள்விப்பட்ட பொழுது,

*''மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்*
*பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்*
*குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி*
*மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
*துன்ப மல்லது தொழுதகவுஇல்'' என ...*

*(சிலம்பு 25: 101-105)*

கூறி வருந்துகின்றமை இவண் ஒப்பிடற்பாலது. எனவே 'பழியஞ்சி, நேரிய ஆட்சி புரிக' என்னும் அறிவுரை வளவனது வாழ்வில் வளம் சேர்க்க வல்லதாய் அமைந்தமையில் வியப்பெதுவுமில்லை.

**இடித்துரைத்தல்**

சோழநாட்டில் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவர்க்கும் தாயச்சண்டை பெரிதாயிற்று. ஒருவருடன் ஒருவர் மாறுகொண்டு பொருவாராயினர். இந்நிலையில் ஆவூர் என்ற ஊரினுள் புகுந்து நெடுங்கிள்ளி அடைத்துக் கொண்டான். நலங்கிள்ளி அதனை முற்றுகையிட்டு, அவனை வெளியே போருக்கு வருமாறு அழைத்தான். நாட்கள் பல உருண்டோடியும் அவனும் வெளிவருவதாயில்லை; இவனும் விடுவதாயில்லை;

இதனால் மக்களும் பிறவுயிர்களும் பெருந் துன்பத்திற்கு ஆளாயினர். அடைத்த கதவால் போக்குவரவு தடைப்பட்டது. மக்கள் வெளி உலகத் தொடர்பை இழந்தனர். உணவுப் பொருள் சுருங்கலாயிற்று. மக்கள் தண்ணீரும் கிடைக்கப் பெறாமல் வாடலாயினர். இத்தீராத போரைத் தீர்த்துவைப்பது யார்?

கோவூர் கிழார் என்ற புலவர் பெருமகனாரே மக்கள் துயரைத் தீர்க்க முன்வந்தார்.

கோவூர்கிழார் இவ் இருவரின் செயல்களையும் நன்கு சிந்தித்தார். 'யார்மீது தவறு?' என ஆராய்ந்தார். இருவரும் ஒரு குடியைச் சேர்ந்தவர்களே. இருவருக்கும் ஆட்சியில் ஆசையிருக்கிறது. இதனை அக்கால முறைப்படி அவரவர் ஆற்றலை வைத்துத்தான் முடிவு செய்யவேண்டும். நெடுங்கிள்ளி ஆற்றலுடையவனாயின் போர்செய்ய முன்வர வேண்டும்; அஃதின்றேல் நலங்கிள்ளியிடம்ஊரை ஒப்படைத்துவிட்டுச் சரண் புக வேண்டும். இவ்இரண்டில் ஒன்றும் செய்யாமல், கதவை அடைத்துக்கொண்டு.தான் இனிதாகவிருந்து, மக்கள் வருந்துமாறு செய்வது தவறன்றோ! எனவே நெடுங்கிள்ளியிடம் சென்று, அவன் மனத்தில் படுமாறு கோவூர்கிழார் இடித்துரைத்தார். "நெடுங்கிள்ளியே! நீ ஆவூரின் மதிற்கதவை அடைத்து விட்டு அமைதியாக உள்ளே இருக்கிறாய்! வெளியே வந்து விலங்கினங்களும் மக்களும் படும் துயரத்தைப் பார்! யானைகள் குளங்களிற் படிந்து மகிழ்வதற்கு இயலாமையாலும், கவள உணவைப் பெறாமையாலும் பிளிறுகின்றன. கட்டுத்தறிகளில் கட்டப்பட்டுள்ளபடியே துதிக்கையைப் புரட்டி, வெய்துயிர்த்து, இடியோசை போல முழங்கி வருந்துகின்றன.

"குழந்தைகள் பாலின்றி அழுகின்றன; மகளிர் பூ இன்றி வறிதே கூந்தலை முடித்துக் கொள்கின்றனர்; தொழில் நுட்பமுடைய வீடுகளில் குடிப்பதற்கு நீரும் இன்றி அழும் குரல் கேட்கின்றது. வேந்தே! நெருங்குதற்கரிய வலிமையுடையவர்

வழிவந்த பெருமகனே ! இவை அனைத்தையும் கேளாமல் நீ இங்கேயே இனிதாக இருப்பது மிகவும் கொடுமையாகும். நீ அறனெறி போற்றுவையாயின் ஊரினை உன் எதிரியிடம் ஒப்படைத்துத் திறப்பாயாக; மறநெறியை விழையின் போருடற்றத் திறப்பாயாக! இவ் இரண்டு நெறியும் போற்றாமல், வலிய கதவினை அடைத்துவிட்டு, நீண்ட மதிலாற் சூழப்பட்ட ஊரின் ஒரு புறத்தே ஒடுங்கியிருத்தல், காணுங்கால் நாணத்தக்கதாகும்!'' என்பது அவர் வாக்கு.

*'அறவை யாயின் நினதெனத் திறத்தல்,*
*மறவை யாயின் போரொடு திறத்தல்,*
*அறவையும் மறவையும் அல்லை யாக*
*திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்*
*நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்*
*நாணுத்தக வுடைத்திது காணுங்காலே'* (புறம் : 44)

'நாணுத் தகவுடைத்து' என்று நேரில் கூறி, ஒரு மன்னனைத் திருத்தியதிறம் சிறப்பிற்குரியது. அவன் நினைத்தால், புலவரின் உயிர் கணப்பொழுதில் போய்விடும். ஆனால் அக்கால மன்னர்கள், புலமைச் சான்றோர்களின் அறிவுரைகளை, மிகப் பொறுமையோடு ஏற்றுப் போற்றினர். மேற்குறித்த பிசிராந்தையார், வெள்ளைக்குடி நாகனார், கோவூர்கிழார் மூவரும் வழிகாட்டி அறிவுரை கூறியமை எதற்காக? மக்களின் பொது நலன் பற்றியேயாம். மக்களின் நல்வாழ்வே புலவர்களுக்குக் கருத்தாயிருந்தமை இவற்றால் உறுதிப்படுகின்றது. இங்ஙனம் பழைய கோனாட்சி முறையில், குடியாட்சிப் பண்புகள் தழைத்தமைக்குப் புலவர்களே காரணமாவர் எனலாம்.

# 4 தூதரின் தொண்டு

ஓர்அரசனுக்கும் மற்றொரு மன்னனுக்குமிடையே தொடர்புண்டாக்குதலும் பகைமை தவிர்த்து நட்புண்டாக்குதலும் தூதர்களின் இன்றியமையாச் செயல்களாம். பண்டைப் பெரும் புலவர்களிடம் இத் தூதுவர்களின் தொண்டு மனப்பான்மையும் அமைந்திருக்கக் காண்கிறோம். புலவர்கள் பல்வேறு அரசர்களை நாடிச் சென்று, கண்டு மகிழும் வாழ்க்கையினராதலின், அவர்களுக்கு இத்தொண்டு எளிதாயிற்று. மேலும் தூதுவர்க்கு உரியன எனக் குறிப்பிட்ட பண்புகள் பலவும் இப் புலவர் பெருமக்களிடம் நிறைந்திருந்தன.

தூதுவர்கள் அன்புடையவர்களாய், நல்ல குடியிலே பிறந்தவர்களாய், வேந்தர்களால் விரும்பப்படும் பண்பாளர்களாய்த் திகழவேண்டும். அன்புடன் கூடிய அறிவும் தம் அறிவுக்கு எட்டியவற்றைத் திறம்பட ஆராய்ந்து எடுத்துரைக்கும் சொல்வன்மையும் அவர்களுக்குவேண்டும். அறிவுடன் கூடிய அழகிய தோற்றப்பொலிவும் ஆராய்ச்சி மிக்க கல்வியறிவும் உடையவர்களையே தூதர்களாக அனுப்புவர். சிலபோது அன்பு இருக்குமிடத்தில் அறிவிருக்காது; அறிவிருக்குமிடத்தில் அன்பிருக்காது. அதுபோலவே அறிவு இருக்குமிடத்தில் உரு (Personality) அமைவதில்லை; உரு இருக்குமிடத்தில் அறிவு அமைவதில்லை. அன்பு, அறிவு, உரு என்பன மூன்றும் ஒரு சேர அமைவதுடன் சொல் வன்மையும் தூதுவர்க்கு வேண்டுமென்பதைத் திருவள்ளுவர் நிரல்படத் திரும்பத்திரும்ப வற்புறுத்துகிறார்.

'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்

*பண்புடைமை தூதுரைப்பான் பண்பு'* (681)

*'அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு*
*இன்றி யமையாத மூன்று'* (682)

*'அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்*
*செறிவுடையான் செல்க வினைக்கு'* (684)

தூதுவர்கள் எத்தகைய சொல்வன்மையுடையராக இருக்கவேண்டும் என்பதையும் திருக்குறள் விளக்குகிறது. தூதுவன் 'நூலாருள் நூல் வல்லன்' ஆக வேண்டும்; 'வாய் சோரா வன்கண்மையுடையவன்' ஆகவேண்டும்: 'மனத்தூய்மை, மன்னனுக்குத் துணைமை, துணிவுடைமை ஆகிய மூன்றும் அமையப் பெறவேண்டும் என்றெல்லாம் குறள் விரித்துரைக்கும். எவ்வளவு கற்றறிந்தோராயினும் மாற்றார் அவைக்களம் கண்டதும் மனச்சோர்வும் அதனால் வாய்சோர்தலும் கூடும். ஒன்று கிடக்க ஒன்று உளறிவிடக் கூடும். சொல்ல வேண்டாததைச் சொல்லிச் சொல்ல வேண்டியதை விட்டு விடக் கூடும். எனவே கருத்தைத் தொகுத்துச் சுருக்கமாகச் சொல்லத் தெரியவேண்டும். பயனற்றவைகளை விட்டுவிடவேண்டும். எதனையும் உறுதியோடும், திண்மையோடும் நயமாகவும், பயனை விளைவிக்கும் பாங்குடனும் கூறத் தெரிந்திருக்கவேண்டும். கேட்பவர் மனம் மகிழுமாறு சொல்லி, நன்மை விளையுமாறு பேசத் தெரிய வேண்டும். அஞ்சாமை மிக இன்றியமையாதது. கேட்பவர் மனத்தில் போய்ப் பதியும் வண்ணம் சொல்வதைச் 'செலச்சொல்லுதல்' என்பார் திருவள்ளுவர், காலத்தால் தக்கதறிந்து (Presence of mind) பேசும் அரியதிறனும் அமைதல் வேண்டும். காலமும் இடமும் அறிந்து அதற்கேற்பவும் தன் கடமைக்கு மாறுபடாமலும் எண்ணி உரைக்க வேண்டும். மேடைப் பேச்சாளனைவிடத் தூதுவன் திறமைமிக்க சொல்லாற்றலுடையனாதல் வேண்டும்.

*'தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி*

*நன்றி பயப்பதாம் தூது'* *(685)*

*'கற்றுக் கண்அஞ்சான் செலச்சொல்லிக்காலத்தால்*
*தக்க தறிவதாம் தூது'* *(686)*

*'கடனறிந்து காலம் கருதி இடனறிந்து*
*எண்ணி உரைப்பான் தலை'.* *(687)*

தன் உயிர்க்கே இறுதி நேர்வதாயினும் அதனால் தளர்வுறாது தன் மன்னனுக்கு உறுதி பயக்குமாறு தூதுரைப்பவனே மிகச் சிறந்தவன் ஆவான்.

*'இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு*
*உறுதி பயப்பதாம் தூது'* *(690)*

இவ் விலக்கணங்களிற் பல, சங்ககாலப் புலவர்களுக்குப் பொருந்துவனவே. அவர்கள் அக்கால மன்னர்களிடையே இடைத்தொடர்பாளர்களாக விளங்கினார்கள். அவைக்களம் விட்டு அவைக்களம் பெயர்தலும், நாடு விட்டு நாடும் ஊர்விட்டு ஊரும் அலைந்து, பழுத்தமரம் நாடும் பறவைகள் போலச் சென்று தம் கலைத் திறமையைக் காட்டி மகிழுதலும் அவர்கள் வாழ்வாகும். எனவே தூதுரைக்கும் பண்பு அவர்கள்பால் இயல்பாக அமைந்திருந்ததில் வியப்பில்லை.

**கோவூர்கிழார்**

கோவூர்கிழார் சிறந்த புலமையாளர்; அருட்செல்வர். அரசியலில் பங்குகொண்ட புலவர் வரிசையில் இவர் தலைமையானவராகக் காணப்படுகிறார். நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் ஏற்பட்ட பகையால் சோழநாடே அல்லற்பட்டது. ஆவூரில் சென்று, கதவை அடைத்துக் கொண்டிருந்த நெடுங்கிள்ளியின் செயலால், மக்கள் அவதிப்படக்கண்டு, அவனிடம் சென்று அமைச்சர் போல அறிவுரை சொல்லியதை முன்னர்க் கண்டோம். உறையூரிலும்

இதுபோல நிகழ்ந்தது. உறையூர் என்பது சோழர்குடியின் பழம்பெரும் தலைநகரமாகும். 'அறங்கூர் அவைய'த்தினால் அது புகழ்பெற்றது. சோணாட்டை ஆண்ட மனுநீதிச் சோழன் கதையை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இவ் உறையூரினுள்ளும் புகுந்து நெடுங்கிள்ளி அடைத்துக்கொள்ள, நலங்கிள்ளி அதனை முற்றுகையிட, இங்ஙனம் 'போர்வெறி' தாண்டவமாடியது. இருதிறத்தும் கடும்போர் நிகழ்த்துதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்முறை போரைத் தவிர்க்கும் எண்ணத்துடன் கோவூர்கிழார் சென்றார். இருவருக்கும் அறிவுரை கூறினார். முற்றியிருந்த நலங்கிள்ளியிடம் சென்று, திறமையாக விளக்கிப், 'போரைத் தவிர்க' என்றார். பின்னர் அடைத்திருந்த நெடுங்கிள்ளியிடமும் சென்று, அதே அறிவுரையைக் கூறினார். ஒருவர் அனுப்பி மற்றவரிடம் தூதுவராக அவர் செல்லவில்லையென்றாலும், இருவரிடமும் தாமே விரும்பித் தூது சென்றார். மக்கள் நலம் பேணுதற் பொருட்டு, அவர்களின் தூதுவராக மன்னர்களிடம் சென்றார். அவரது அறிவுரையால் போர் தவிர்ந்தது; மக்கள் மகிழ்ச்சியுற்றனர். கோவூர்கிழார் மன்னர் இருவரிடமும் மனங்கொள்ளுமாறு கூறிய செய்தி, உன்னுதற்குரியதாகும். அவர்கள் இருவரையும் தனித்தனியே கண்டு, அவர் விடுத்த செய்தி இதுதான். :''வேந்தே! உன்னுடன் பகைத்து நிற்பவன் யார்? அவன் பனம்பூ மாலையை அணிந்த சேரமன்னன் அல்லன்; வேப்பம்பூ மாலையை அணிந்த பாண்டியனும் அல்லன்; உன்னுடைய கண்ணி எவ்வாறு ஆத்திப்பூ மாலையோ அதுவே உன் பகைவனாக நீ கருதுகின்றவனுடையதுமாகும். நீவிர் இருவரும் சோழர் குடியிலேயே பிறந்தவர்கள். எனவே உங்களில் யார் தோற்றாலும் அது சோழர்குடியே தோற்றதாக ஆகும். இருவீரும் வெல்லுதல் என்பதும் இயலாது. உமது செயல் எவ்விதத்திலும் உங்கள் குடிக்கு இழுக்குத் தருமே அல்லாமல் பெருமை தராது. நீவிர் ஒருவரையொருவர் பொருவதென்பது,

நும்மைப் போன்ற கொடிகட்டிய தேர்ப்படையையுடைய ஏனைய மன்னர்களுக்கு உடம்பு பூரிக்கும்படியான பெருமகிழ்ச்சியைத் தரும். ஆகவே, நும் குடியின் பெருமைக்குத்தக்கது செய்வதாயின் போரைத் தவிருங்கள்!''

''இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே, நின்னோடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே,
ஒருவீர் தோற்பினும் தோற்பது நுங்குடியே!
இருவீர் வேறல் இயற்கையு மன்றே; அதனால்
குடிப்பொருள் அன்றுநும் செய்தி; கொடித்தேர்
நும்ஓர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ் இகலே''

(புறம் : 45)

இருவரையும் திருத்துவதற்கு என்ன வழி என்று ஆராய்ந்தார் கோவூர்கிழார். அவர்கள் இருவருமே தாம் தாம் சோழர்குடியில் பிறந்தவர்கள் எனப் பெருமை அடித்துக் கொள்பவர்கள். அக்குடிப் பெருமையை மையமாக வைத்துப் பேசினால், இருவரது கவனமும் ஈர்க்கப்படும் என எண்ணி, அவர் காலம் கருதி, இடனறிந்து பேசினார். காலத்தால் தக்கது அறிந்து, இருவர் மனத்தும் செலச்சொல்லினார். தொகுத்துச் சொன்னதோடு, அவர்தம் குடிப்பெருமையை மிகவுயர்த்திப் பேசியமையால் அவர்களின் ஆழ்மனம் மகிழச் சொன்னார். அவரது மனத் தூய்மை, மக்களுக்குத் துணைமை, மன்னர் முன் அஞ்சாதுரைக்கும் துணிவுடைமை இவற்றால் அவர் தூது வென்றது; பகைமை தணிந்தது. நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் போர் தவிர்ந்தனர். நாடும் மக்களும் காப்பாற்றப்பட்டனர். அன்று மன்னர்களிடம் பொறாமையும் போரும் பூசலும் மிக்குக் காணப்பட்டன. 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவதன்று உலகத்தியற்கை' என்பது

அவர்கள் இயல்பாயிற்று. குழுக்களாக இயங்கிய புலவர்களிடையே ஒற்றுமையுணர்ச்சி தலை தூக்கி நின்றது. இதனால் பெரும்புலவர்கள் மன்னர்களை ஒற்றுமைப்படுத்தவே முயன்றனர். அம்முயற்சியின் பயனாகவே பழந்தமிழகம் பெரிதும் சிதைவுறாமல் ஓரளவேனும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் காத்தற்கு இயன்றது எனலாம்

**ஔவையார்**

சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் தலைசிறந்து விளங்கியவர் ஔவையார். அவரது புலமையும் சொல்லாற்றலும் உலகம் உள்ள அளவும் நிலைத்து நிற்கத்தக்க புகழை அவருக்குத் தந்துள்ளன. அவரது வாழ்வில் நாம் காண்கின்ற அரியபெரிய செயல்கள் பல. அவர் பால் பெரும் பற்றுக் கொண்டவன் அதியமான்நெடுமான் அஞ்சி. இவன் மழவர் என்ற வீரப் பெருங்குடிக்குத் தலைவன். இக் காலத்தில் உடல்வலிமை மிக்கவர்களாக நாம் 'கூர்க்கர்'களைக் கருதுவது போல, அன்று மழவர்கள் திகழ்ந்தனர். மூவேந்தரும் தம்முள் போர் நேருங்கால், இம் மழவர் படைத்துணையை நாடுவார்களாம். இத்தகைய வலிமை மிக்க குடிக்குத் தலைவன் அஞ்சி. அவனது வலிமையறியாது தொண்டைமான் போர்புரிய ஆயத்தமானான். தன்னிட மிருந்த செல்வவளமும் படைநலமும் அவனைப் போர் செய்யத் தூண்டின. ஆனால் அஞ்சியோ போர்ப்பயிற்சி மிக்கவன். அவனுடைய படை வீரர்கள் பகைவர் எவராயினும் வீழ்த்தவல்ல திறமையும் ஆற்றலும் உடையவர்கள். ஆழமறியாது காலை விடுபவன் போலத் தொண்டைமான். போருக்குப் புறப்பட்டான். இதனையறிந்து அஞ்சி, ஔவையைத் தூதனுப்பினான். ஔவையும் அவ் இருவருக்கும் நிகழவிருந்த பெரும்போரைத் தடுப்பதற்காகத் தூது சென்றார்!.

தொண்டைமான் ஔவையாரை அன்புடன் வரவேற்றான். அன்று புலவர்கள் எங்கும், யாரிடமும் செல்ல முழு உரிமை

பெற்றிருந்தார்கள். ஒரு மன்னருக்கு வேண்டியவர் என்பதற்காக மற்ற மன்னர்கள் அவரை வெறுப்பதில்லை; தம் அவைக்கு வரவிடாமல் தடுப்பதில்லை. தொண்டைமானுக்கு ஔவையார் அஞ்சியின் நெருங்கிய நண்பர் என்பது நன்கு தெரியும். எனவே, ஔவையார் விளக்கிக் கூறினால் அவன் அஞ்சி நடுங்குவான் எனத் தொண்டைமான் உள்ளூற எதிர்பார்த்திருக்க வேண்டும். தொண்டைமானுக்குத் தான் செல்வன் என்ற செருக்கு இருந்தது. தன்னிடம் படைக்கலங்கள் மிகுதி என அவன் தலை நிமிர்ந்து காணப்பட்டான். ஔவையார் சமயமறிந்து, தமது திறமையனைத்தையும் பயன்படுத்தி, தொண்டைமானைப் புகழ்வதுபோலப் பேசி, அவன் மனத்தில் உண்மை பதியுமாறு இடித்துரைத்தார். ஔவையாரின் சொல்லாற்றல் இவ்விடத்தில் வியக்கத்தக்கது!

ஔவையார் தொண்டைமானை நோக்கி, ''அரசே! உனது படைக்கலங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! திரண்ட அடிப்பாகம் நன்கு திருத்தப்பட்டு, நெய் பூசப்பட்டு, பீலி அணியப்பட்டு, மாலைசூட்டப்பட்டு, பள பளவென்று உள்ளன. காவலையுடைய அரண்மனைக்குள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன!

செல்வமிருந்தால் விருந்துணவு கொடுத்து, இல்லையென்றால் இருப்பதைப் பகிர்ந்து உடனிருந்துண்ணும் இல்லோர் சுற்றத்தலைனாகிய எம் கோமான் அஞ்சியின் வேற்படைகளோ, பகைவரைக் குத்திக் கொன்றதனால் கங்கும் முனையும் சிதைந்துபோயின; எப்பொழுதும் கொல்லனது உலைக்களத்தின்கண்ணேயுள்ளன;'' என்று கூறினார். ஔவையார் உட்பொருளோடுபேசுகிறார். அங்கதமாகப் பேசி. உள்ளூற நகையாடுகிறார். அஞ்சாமற் பேசி உண்மையை விளக்குகிறார். இக்கால அரசதந்திரிகள் கூட எதனையும் மறைமுகமாகவே பேசுவதையும் எதிரிகளை நகையாடுவதையும் காண்கிறோம். அரசியல் விளையாட்டில் வெற்றியடைய

இவ்இராசதந்திரம் மிகவும் உதவுகிறது. ஔவையார் தலைசிறந்த இராசதந்திரியாகக் காட்சி தருகிறார். அவர் பேச்சு வெளிப்படையாகத் தொண்டைமானைப் புகழ்வதுபோல இருக்கிறது. ஆனால் அவர் அரிய உண்மைளை வெளிப்படுத்துகிறார். அதியமான் அடிக்கடி போர் செய்து பயிற்சி யுடையவன். அவனுக்குப் போருடற்றுவது என்பது அன்றாட வாழ்வு. கருவிகளை இயக்கி இயக்கி, வெற்றி பல கண்டவன் அவன். தொண்டைமான் படைவீரர்கள் அடிக்கடி போர்செய்து பழக்கமுடையவர்கள் அல்லர். அவர்களின் படைக்கலன்கள் நெய்பூசப்பட்டு அழகாக வைக்கப்பட்டுள்ளன. எனவே தொண்டைமானிடம் பணபலமும் பிறபலமும் இருந்தாலும், அதியமானின் படைவலிமைக்கு முன் அவை ஆற்றா என்பதை அறிவுறுத்திப் போரைத் தவிர்தலால் தொண்டைமானுக்கே நன்மை என்பதை அழுத்தம்திருத்தமாகப் பதியும் வண்ணம், ஆணி அறைந்தாற்போலக் கூறுகிறார். நேர்முகமாகச் சொல்வதை விட மறைமுகமாகச் சொல்வதிலேதான் அதிக அழுத்தம் கிடைக்கும் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டு.

*''இவ்வே,*
*பீலி யணிந்து மாலை சூட்டி*
*கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்அணிந்து*
*கடியுடை வியல்நக ரவ்வே!*
*அவ்வே,*
*பகைவர்க் குத்திக் கோடு நுதி சிதைந்து*
*கொல்துறைக் குற்றில மாதோ!*
*என்றும்*
*உண்டாயின் பதம் கொடுத்து*
*இல்லாயின் உடன் உண்ணும்*
*இல்லோர் ஒக்கல் தலைவன்*
*அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே''*

இவ்வாறு நம் நாட்டுப் பழம்புலவர்கள் ஆற்றிய தொண்டுகள் மிகப்பலவாகும். ஒரு நாட்டின் அமைச்சர்களாகவும் தூதுவர்களாகவும் இருப்பதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமோ, அத்தனை தகுதிகளும் அவர்களிடம் அமைந்திருந்தன. சங்கப் புலவர்களைச் சான்றோர் என அழைக்கும் மரபு தொன்மை மிக்கதாகும். அச்சொல்லுக்கு எல்லா நற்பண்புகளும் அமையப் பெற்றோர் என்பதே பொருளாகும். அவர்களின் வாழ்வு நெறிகளில் குறிப்பிடத்தக்க பலவற்றைச் சங்கத் தொகை நூல்கள் அனைத்திலும் பொதுவாகவும், புறநானூற்றில் சிறப்பாகவும் காண்கிறோம். ஓர் அரசனை முகமனுக்காக இல்லாதன கூறிப் புகழுதல், வயிற்றுப்பாட்டை நினைத்துப் பொய்யாகப் புகழ்ந்துரைத்தல், முன்னே புகழ்ந்துவிட்டுப் பின்னே இகழ்ந்து பேசுதல், தகுதியற்றவரையும் மிகுதியாகப் புகழ்ந்து போற்றுதல். ஒரு மன்னனைப் பற்றிப் பகை மன்னனிடம் தாழ்வாகப் பேசிப் பரிசில் பெற எண்ணுதல் போன்றவற்றில் பிற்காலப் புலவர்களுக்கு விருப்பம் இருந்தமையை நம்மால் உய்த்தறிய முடிகிறது. 'கொடுத்தோரைப் புகழ்ந்து, கொடாதாரை இகழ்தல் 'சங்க காலத்தும் இருந்தது. எனினும், அறநெறி தவறாமை காரணமாக, அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கள் அளவிற்குட்பட்டிருந்தன.

இந்நாளிலும் தமிழ்ப்புலவர்கள் 'கட்சி சாராத அரசியற் சான்றோர்களாக' நடுவுநிலைமையுடன் வாழ்ந்து, ஆள்பவர்கள் தம் சொற்கேட்குமளவு ஆளுமையுடையவர்களாக வேண்டும். அதற்குச் சங்கச் சான்றோர்களின் வரலாறு நல்லதொரு வழிகாட்டியாகும்.

# 5 நண்பரின் பண்பு

தமிழ்நாட்டு மன்னர்களும் புலவர்களும் நண்பர்களாகத் திகழ்ந்தார்கள். நட்பு என்றால் ஏதோ தொடர்பு மட்டும் அன்று; அன்புகாட்டி வாழ்ந்தமை மட்டுமன்று. அரசர்கள் புலவர்களைத் தங்களுக்குச் சமமாகவும், ஒருபடி மேலாகவும் கருதிப்போற்றி நட்புப்பூண்டிருந்த காட்சி தமிழகம் கண்ட சிறப்புகளில் ஒன்றாகும். ஒரு நாட்டின் செல்வத்திற்கெல்லாம் உரிமை பூண்ட மன்னன், ஒன்று மற்றுக் கலையொன்றே துணையாய் உலவும் புலவரைத் தனக்குச் சமமாகவும் தன்னைவிட உயர்வாகவும் நினைத்தது விந்தையினும் விந்தையே! தமிழ் நெஞ்சம் அவ்வளவு பண்பட்டிருந்தது. அதனால்தான், நமது நாகரிகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். நன்கு பண்பட்ட நிலத்திலல்லவா நல்ல நெல் விளைதல் கூடும். நம்நாடும் மரபு வழி நல்வாழ்வு காரணமாகக் கருத்தளவில் நன்கு பண்பட்டிருந்தது. அதில் புலமைப் பயிர் செழித்து வளர்ந்தது! நாகரிகம் உயர்ந்து சிறந்தது!.

## நட்பின் இலக்கணம்

நட்பு என்பது ஒன்றிய மனவுணர்ச்சியால் உருவாவது. அடுத்தடுத்த வீடுகளில் வசிப்பதாலோ, அடிக்கடி சந்திப்பதாலோ நட்பு உருவாவதில்லை. சிறந்த இலக்கிய நூல்கள் படிக்குந்தோறும் இன்பம் பயக்கின்றன. நல்லவர் பழக்கமும் அத்தகையதுதான்.

*புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்.* (735)

*நவில்தொறும் நூல்நயம் போலும்பயில்தொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு. (783)*

காலத்தைக் கடந்தும் தூரத்தைப் பொருட்படுத்தாமலும் நட்புத் தோன்றி வளரும். முகநட்பு வேறு; அகநட்பு வேறு. முகம் நக நட்பதுமட்டுமேயெனில் அது நிலைக்காது. அகம்நக நட்பதே நட்பாகும். வெறும் வெளிவேடம் போடாமல், உயிரோடு உயிர்பிணையுமாறு அன்பால் இணைவதே உண்மை நட்பாகும். நல்லவர்கள் நட்பு வளர்பிறைபோல் வளரும். தீயாருடன் நட்புக் கொண்டால் தீமையாய் முடியும். உண்மை நண்பர்கள் 'அழச்சொல்லியும்', 'இடித்துக்கூறியும்' நல்வழிப்படுத்துபவர்களாக இருக்கவேண்டும். சிரித்து மகிழ்தற்கு மட்டுமே நட்பெனில் அது வேண்டற்பாலதன்று. குற்றங் கண்டவிடத்து நெருங்கிச் சென்று உரிமையோடு இடித்துக்கூறித் திருத்துவதே நண்பரின் கடமையாகும். சிரித்துக்கூறி உடனிருந்தே கொல்லும் நட்பைக் கனவிலும் கொள்ளுதல் கூடாது. அழிவை நீக்கவேண்டும்; நன்னெறியில் உய்க்கவேண்டும். அதனையும் மீறி அல்லல் ஏற்பட்டால் நட்புக்காகத் தாமும் அல்லலில் உழக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆடை நெகிழ்ந்ததும் கை எவ்வளவு விரைந்துதவுகிறதோ அஃதே போன்று துன்பம் வந்ததும் உடனே உதவ முற்படுவதுதான் சிறந்த நட்பாகும்.

*நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென்று இடித்தற் பொருட்டு (784)*

*அழிவினவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண்*
*அல்லல் உழப்பதாம் நட்பு (787)*

*உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு (788)*

**பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும்**

பாண்டிய நாட்டுப் பிசிராந்தையாரும் சோழநாட்டு மன்னன் கோப்பெருஞ்சோழனும் ஒருவரை ஒருவர் காணாமலே

நட்புப் பூண்டிருந்தனர். ஒன்றிய உணர்ச்சியிருந்ததால் ஒருவரை ஒருவர் கேள்விப்பட்டுக் கேள்விப்பட்டே மிகப் பழகிய கேண்மையர் போல் ஆயினர். தன் நாட்டுப் புலவராகிய பொத்தியார் என்ற புலவருடனும் நட்புரிமையுடையான் இக் கோப்பெருஞ்சோழன் என்பதைச் சிறிதும் பொறாமையின்றிப் 'பொத்து இல் நண்பின் பொத்தியொடு கெழீஇ' எனப் பிசிராந்தையார் விளக்கிக் கூறுகிறார். கோப்பெருஞ்சோழனின் மக்கள் தந்தையையே பகைத்துக்கொண்டு போர் செய்தற்பொருட்டுப் படையெடுத்து வந்தனர். இது கண்டு சோழவேந்தனும் போருக்குப் புறப்படலானான். இதனைக் கண்ட புல்லாற்றூர் எயிற்றியனார் என்ற புலவர், கோப்பெருஞ்சோழனுக்கு அறிவுரை கூறிப் போரை விலக்கினார். 'நீ வென்றாலும் உனக்குப் பிறகு நின் தாயம் நின் மக்களுக்குத் தானே சென்று சேரப்போகிறது. அவர்கள் தோற்றால், பிறகு உன் நாட்டுச் செல்வத்தை யாருக்கு அளிக்கப்போகிறாய்? மேலும், நீதோற்கநேர்ந்தால் உலகம் இகழும்' என்றிவ்வாறு அவர் சொன்னவற்றைக் கேட்டுக் கோப்பெருஞ்சோழன் மனம் மாறித் தன் மக்களிடம் நாட்டை விட்டுவிட்டு, தான் 'வடக்கிருந்து' உயிர்நீக்கத் துணிந்தான். காந்தியடிகள் கைக்கொண்ட சத்தியாக்கிரகமாகிய அறப்போராட்டங்களில் உண்ணாநோன்பும் ஒன்று. தென்னாப்பிரிக்காவில் அவர் தொடங்கிய அறப்போராட்டங்களில் உறுதுணையாய் நின்றவர்கள் தமிழர்கள். இத்தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே இவ் அறமுறைகளை அறிந்திருந்தனர் என்பதற்கு 'வடக்கிருத்தல்' என்பது ஒரு சான்று,. ஆற்றிடைக்குறை போலும் தனியிடத்தில், வடக்குநோக்கி உணவுண்ணாதிருந்து அறச்சிந்தையராய் உயிர்விடுதலே வடக்கிருத்தலாகும். இவ்வாறு வடக்கிருக்கத் தொடங்கிய காலத்தில் கோப்பெருஞ்சோழன் ''பாண்டிய நாட்டிலிருந்து என் நண்பர் பிசிராந்தையார் வருவார்;

அவருக்கும் ஓரிடம் ஒதுக்கிவையுங்கள்'' என்று தன் அருகில் இருந்த புலவர்களிடம் குறிப்பிட்டான்.

*''பிசிரோன் என்பஎன்உயிர் ஓம்புநனே:*
*செல்வக் காலை நிற்பினும்*
*அல்லற் காலை நில்லலன் மன்னே''* (புறம் : 215)

பிசிராந்தையார் இச்சோழன்பால் பேரன்புடையவர். ஒருவரை ஒருவர் காணாமலே, கேள்வி வாயிலாக ஒருவரது நற்பண்புகளை ஒருவர் கேட்டு நட்புப் பூண்டவர்கள் இவர்கள். இந் நாளையப் 'பேனா நட்புப் பூண்டவர்கள்' இவர்களுக்கு நிகராக மாட்டார்கள். யாரேனும் சென்று அப் புலவரிடம் அவரது பெயரை வினவினால், 'என் பெயர் கோப்பெருஞ்சோழன்' என்றே கூறுவாராம். அந்த அளவு தாம் வேறு, மன்னன் வேறு அல்ல' எனப் பழகிய மனத்தினர் பிசிராந்தையார். இதை நன்குணர்ந்த கோப்பெருஞ்சோழன், தன் அருகிலிருந்த நண்பர்களிடம், 'பிசிராந்தையார் இதுவரையும் என்னைப்பற்றிக் கேட்டறிந்து பழகியவரேயல்லாமல் கண்டுபழகியவர் அல்லர். எனவே, இப்போது அவர் இங்கு வருதல் அரிதென்று எண்ணாதீர்கள். பிசிராந்தையார் எதனையும் சிறிதும் அலட்சியம் செய்யாதவர்; இனியவர்; ஒன்றிப் பிணைந்த நட்புணர்வினர்; புகழ் கெட வரும் பொய்யைச் சிறிதும் விழையாதவர். அத்தகையவர் யான் அரசச்செல்வத்தோடு வாழ்ந்திருந்த காலத்து வாராதிருந்தாலும், இன்னலுற்ற இக் காலத்து என்னிடம் வாராதிரார்'' என்று உறுதியாகக் கூறினான்.

*''கேட்டல் மாத்திரை அல்லது யாவதும்*
*காண்டல் இல்லாது யாண்டுபல கழிய*
*வழுஇன்று பழகிய கிழமையர் ஆயினும்*
*அரிதே தோன்றல்! அதற்பட ஒழுகல்', என்று*
*ஐயங் கொள்ளன்மின், ஆர் அறிவாளீர்!*
*இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;*

*புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே;*
*தன்பெயர் கிளக்கும் காலை என்பெயர்*
*'பேதைச் சோழன்' என்னும் சிறந்த*
*காதற் கிழமையும் உடையன்; அதன்தலை*
*இன்னேதோர் காலை நில்லலன்!*
*இன்னே வருகுவன்; ஒழிக்க அவற்கு இடமே''*

*(புறம் : 216)*

இவ்வாறு கோப்பெருஞ்சோழன் கூறியதற்கு ஏற்பப் பிசிராந்தையாரும், நெடுஞ்சேய்மையிலிருந்த தம் ஊரிலிருந்து அங்கு வந்து சேர்ந்தார். மன்னனுடன் சேர்ந்து வடக்கிருந்தார். இதுகண்ட சான்றோர்கள் வியப்புற்றனர்.

கோப்பெருஞ்சோழன் உயிர் நீத்தான். பிசிராந்தையார் தாமும் உயிர்நீக்க வடக்கிருந்தார். மனம் உருகும் படியான இக்காட்சியைக்கண்ட பொத்தியார், ''இத்தகைய நட்பாளரை நாம் இதுவரை கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. கண்ணாற் கண்டு பழகாமலே நட்புக்கொண்டு, அந் நட்பே பற்றுக் கோடாக, இத்தகைய நேரத்தில் இங்கு வருதல் குறிப்பிடத்தக்கது'' என்றார். மேலும் அவர்,

*''வருவன் என்ற கோனது பெருமையும்*
*அதுபழு தின்றி வந்தவன் அறிவும்*
*வியத்தொறும் வியப்பிறந்தன்றே;*

அதனால்

*''தன்கோல் இயங்காத் தேயத்து உறையும்*
*சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்றிசை*
*அன்னோனை இழந்தஇவ் வுலகம்*
*என்னா வதுகொல்? அளியதுதானே''*

*(புறம் :217)*

என்று கையற்று வருந்தினார். கோப்பெருஞ்சோழனுடன் பலர் வடக்கிருந்தனர். அம்மன்னனின் அவைக்களப் புலவர்போல விளங்கிய பொத்தியாரும், அச்சோழன் உயிருடன் இருக்கும்போதே வடக்கிருக்க விரும்பினார். ஆனால் அப்புலவரது மனைவியார் கருக்கொண்டிருந்ததால், 'அவள் மகப்பெற்ற பிற்பாடு' நீ வரலாம் எனச் சோழன் மறுத்து விட்டான். அவ்வாறே மகன் பிறந்த பிற்பாடு, அவர் சென்று. கல்லாகி நின்ற சோழனிடம் 'என் இடம் யாது?' என்று கேட்டார். அக்கல்லும் சிறிதே அகன்று அவருக்கு இடம் கொடுத்ததாம்! ஆங்கமர்ந்து பொத்தியாரும் வடக்கிருந்து உயிர்விட்டார். தமக்குக் கல்லாகியும் இடம் கொடுத்த சோழனை, அவர் பின்வருமாறு வியந்து பாடினார்:

*''பலர்க்கு நிழல் ஆகி' உலகம்மீக் கூறி*
*தலைப்போ கன்மையின் சிறுவழி மடங்கி*
*நிலைபெறு நடுகல் ஆகியக் கண்ணும்*
*இடங்கொடுத் தளிப்ப மன்ற உடம்போடு*
*இன்னுயிர் விரும்புங் கிழமைத்*
*தொல்நட் புடையார் தம்முழைச் செலினே''*

*(புறம் : 223)*

**ஔவையாரும் அதியமானும்**

உயிருடன் பிணைந்த உயர்ந்த நட்புக்கு இவர்களிலும் சிறந்த எடுத்துக்காட்டாக யாரைக்கூற முடியும்? உயிருடன் இருக்கும் போதே மாறிமாறி அலையும் இவ் உலகத்தில், இறந்தபிற்பாடும் 'தம்உயிர் கொண்டு அவன் உயிர் தேடிச் செல்லும்' பண்புடையாளரைப் பழந்தமிழகத்தில் காண்கிறோம்.

அதியமான் நெடுமான் அஞ்சி ஔவையாரிடம் பெரும்பற்றுக் கொண்டிருந்தான். அவரைப் பிரிய மனமில்லாமல் அவன் பரிசில் நல்கக் காலம் தாழ்த்ததும் உண்டு. அப்போது அவர் சினந்து தம்முடைய பொருள்களைச்

சுருட்டிக்கொண்டு புறப்பட்டு, 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' எனக் கழறியதும் உண்டு.

நீண்ட வாழ்வைத் தரும் நெல்லிக்கனியைப் பெற்ற அதியமான், அதனை ஔவைக்குக் கொடுத்து, அழியாவரம் பெற்ற பாடலொன்றை அவரிடமிருந்து பெற்றான். ஆதல் நின் அகத்து அடக்கிச் சாதல் நீங்க எமக்கீத்தனையே! அதனால் நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும நீயே!' என ஔவையாரால் வாழ்த்தப் பெற்றான்.

இத்தகைய பெரும்பண்பு நலன் வாய்ந்த அஞ்சி ஏழு வள்ளல்களுள் ஒருவன். இவனது தலைநகர் தகடூர் என்பது. அவ்வூரைத் தலைநகராகக் கொண்ட இவனது நாட்டில் குதிரைமலை என்பது சிறப்புடைய மலை. இவ் அஞ்சி அதியமான், அதியன் என்றெல்லாம் தன் குடிப்பெயரால் அழைக்கப்படுவதுண்டு. இவனுடைய, மகனது பெயர் பொகுட்டெழினி.

ஔவையார் இவனுடைய ஆற்றல், வண்மை பெருமை அனைத்தையும் புகழ்ந்து பாடியுள்ளார். ''ஒரு நாளல்ல, இருநாளல்ல, பலநாள், பலருடன் சென்றாலும் தலைநாள் போல மனமுவந்து நல்கும் கொடையாளன்'' என, அவர் அஞ்சியைக் கூறியுள்ளார். யானை தன் கொம்புகட்கு இடையே வைத்த கவளவுணவு தப்பாமல் அதற்கு இரையாவது போல, அஞ்சியைப் பாடிச்செல்லும் புலவர்கள் பரிசில் பெறுவதற்குக் காலம் தாழ்த்தாலும் அவர்கள் பரிசில் பெறுவது தப்பாது என அவர் சிறப்பித்துள்ளார். அதியமானுக்காகத் தொண்டைமானிடம் அவர் ஒருமுறை தூதுசென்றார். அதியமானுடைய போர்த்திறத்தையும் வலிமையையும் ஔவையார் பலவிதமாகப் பல்வேறு இடங்களில் நுட்மான இலக்கியத் திறனுடன் வியந்து பாராட்டிப் பாடியுள்ளார்.

ஒருமுறை பகைவர்களைப் பார்த்து, அவர் அஞ்சியின் வலிமையை அளவிட்டுக் கூறிய திறம் வியத்தற்குரியது. ''பகை மன்னர்களே! ஒரு தச்சன் ஒரே நாளில் எட்டுத் தேர் செய்யக் கூடியவன். அவன் ஒரு மாதம் முழுவதும் முயன்று ஒரே ஒரு சக்கரத்தைச் செய்தானாயின், அது எவ்வளவு வலிமையும் உறுதியும் உடையதாக இருக்குமோ, அவ்வளவு வலிமையுடையவன் அதியமான். ஆகவே அவனோடு பகைகொண்டு போர்செய்தலைத் தவிருங்கள்!'' என்று அவர்தம் மன்னர்களுக்கு அறிவுரை கூறினார்.

*''களம்புகல் ஓம்புமின் தெவ்விர்! போர் எதிர்ந்து*
*எம்முளும் உளன்ஒரு பொருநன்! வைகல்*
*எண்தேர் செய்யும் தச்சன்*
*திங்கள் வலித்த கால்அன் னோனே!''* (புறம் :87)

தம் வாழ்நாள் எல்லாம் அமைச்சர் போலவும் தூதராகவும் நண்பரெனவும் அஞ்சியுடன் உயிரொன்றிய கேண்மையராய் வாழ்ந்த ஔவையார், அவன் இறந்த காலத்துப் பெருந்துயரத்திற்கு ஆளானார். இணைபிரியா உயிர் நண்பரை இழந்தார்க்குப் பிறக்கும் இரக்கத்தின் உச்சநிலையை, அவர் அப்போது பாடிய கையறுநிலைப் பாடலில் காண்கிறோம்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை அதியமானை வென்று தகடூரை அழித்தனன். இப்போரில் சோழ, பாண்டிய மன்னர்களும் அதியமானுக்குத் துணையாக வந்து போரில் தோற்றனர் என்று கருதப்படுகிறது. அதியமான் மார்பில் வேற்படையைத் தாங்கி வீரனாக உயிர் நீத்தான். இக்காட்சி ஔவையார் மனக்கண்களை விட்டு அகலவில்லை. அவர், ''அதியமானுடைய மார்பில்தைத்த வேல் பாணர்தம் கையிலுள்ள பிச்சைப் பாத்திரங்களைத் துளைத்துச் சென்றது; இரப்போர்தம் கைகளையும் ஊடுருவியது; காப்பாற்றப்படுவோரின் கண்பாவை மறையுமாறு அழவைத்தது; இறுதியில், அழகிய சொற்களை

ஆராய்ந்து பாடும் புலவர்களின் நாவிலே சென்று தைத்தது! இனிப் பாடுவாருமில்லை; பாடுகின்றவர்களுக்கு ஒன்றை ஈவாருமில்லை;'' என வருந்தினார்.

*''அருந்தலை இரும்பாணர் அகல்மண்டைத்*
*துளைஉறீஇ,*
*இரப்போர் கையுளும் போகி,*
*புரப்போர் புன்கண் பாவை சோர,*
*அம்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்*
*சென்று வீழ்ந்தன்று, அவன்*
*அருநிறத்து இயங்கிய வேலே''* *(புறம் : 235)*

பழங்கால மன்னர்களும் புலவர்களும் கொண்டிருந்த கேண்மை நிகரற்றது. இன்பத்தில் மட்டுமன்றித் துன்பத்திலும் ஒன்றுபட்டு, உயர்வு தாழ்வு கருதாமல் அவர்கள் பின்பற்றிய நட்புரிமை சாலச் சிறந்ததாகும்.

**கபிலரும் பாரியும்**

வேள்பாரியும் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். பறம்புமலை உள்ளிட்ட பறம்புநாட்டை ஆண்டவன். இப் பறம்புமலை இக் காலத்துப் 'பிரான்மலை' என மருவி வழங்குகின்றது. இஃது இன்று சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர்க் கூற்றத்தில் (தாலுகா) உள்ளது. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் ஐந்து தேவத் தானங்களில் பிரான்மலையும் ஒன்றாகும். இன்றும் அங்குப் பாரிவிழாக் கொண்டாடி வருகின்றனர்.

முற்காலத்தில் இப் பறம்புமலை மிகுந்த வளமுடையதாகத் திகழ்ந்தது. அங்கு மக்களின் முயற்சியின்றியே, பெரும் பயன் அடையும் வண்ணம் மலை வளம் நல்கியது. அம் மலை தானாகவே வளம் தந்து மக்களை வாழ்வித்தது. பாரியின் கொடைத்திறம் போலவே மலையும் வளம் பல வழங்கியமை சிறப்பன்றோ? பறம்பு மலை சுனைநீரும் பாரியின் கொடைபோல

வற்றாதது; வளம் சுரப்பது. பறம்பு மலையை நீலநிற வானத்திற்கும் அதில் திகழும் சுனைகளை வானத்து மீன்களுக்கும் ஒப்பிட்டுப் பாடியுள்ளமை குறிக்கத் தக்கது. அச்சுனை நீரின் குளிர்ச்சியும் இனிமையும் பலபடப் பாராட்டி உரைக்கப்பட்டுள்ளன. புலவர்கள் பாரியின் கொடைத் திறத்தால் உளம் மகிழ்ந்து, அச்சுனை நீரைப் பருகியதால், அது இனிமை மிகுந்ததாக அவர்களுக்குச் சுவை நல்கியிருக்கிறது என்று நாம் கருதலாம்.

பறம்புபற்றிப் பாடிய கபிலர்,

*உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே;*
*ஒன்றே.*
*சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே;*
*இரண்டே,*
*தீம்சுளைப் பலவின் பழம்ஊழ்க்கும்மே;*
*மூன்றே,*
*கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க்கும்மே;*
*நான்கே,*
*அணிநிற ஓரி பாய்தலின், மீதழிந்து*
*திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே;*
*வான்கண் அற்றுஅவன் மலையே; வானத்து*
*மீன்கண் அற்று அதன் சுனையே!''*

*(புறம் : 109)*

அதன் வளத்தை இவ்வாறு விரித்துரைக்கிறார். பாரியைப் புகழ்ந்து பாடியது போலவே பறம்புமலையையும் கபிலர் போற்றிப் பாடியுள்ளமையை ஒரு சில பாடல்களால் உணர்கிறோம். அப்பறம்பு மலையில் மயில்கள் ஆடும், குரங்குகள் மலையுச்சியில் தாவிவிளையாடும், குயில்கள் இசைபாடும். இங்ஙனம் இயற்கை அழகு பொலிய அம் மலைக் காட்சி இனியதாய் இருக்கும். நிலவளமும் மழைவளமும் மிக்கது

அந்நாடு. புன்செய்ப் பயிர்களாகிய வரகு, தினை, எள், அவரை முதலிய பொருள்கள் அங்கு மிகுதியாக விளையும். இத்தகைய வளமான நாட்டுக்குரிய பாரி மன்னன் கொடைப்பண்பில் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்தான்.

## முல்லைக்குத் தேர்

பாரியின் வள்ளன்மைக்கு எல்லை காட்டுவது, அவன் கொழுகொம்பின்றித் தவித்த முல்லைக்கொடிக்குத் தன் பொற்றேரை ஈந்த காட்சியேயாகும். பாடுவார்க்குப் பரிசில் நல்கும் பழக்கமுடைய உலகத்தில் பாடாத முல்லைக்கு வாடாத தேரைக் கொடுத்தான் பாரிவள்ளல். அதனைக் குறிப்பிட வந்த கபிலர்,

*''இவரே,*
*பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை*
*நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்*
*'கறங்குமணி நெடுந்தேர் கொள்க' எனக் கொடுத்த*
*பரந்தோங்கு சிறப்பின் பாரிமகளிர்''*

*(புறம் : 200)*

என்று சுட்டியமை,அந்நாளில் பாரியின் தனிச்சிறப்புப் பிறரினும் மேம்பட்ட பாங்கை நினைவூட்டுகிறது. வழியில் படர்வதற்கேற்ற கொழுகொம்பின்றிக் கிடந்த முல்லைக் கொடியைக் கண்டதும் அவன் மனம் இரக்கம் கொண்டது. 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிடும் உள்ளங் கொண்டோரின்' பண்பு அவனிடமிருந்து வழி வழியே வந்ததன்றோ? 'காக்கை குருவி எங்கள் சாதி' என்ற அருள் உள்ளம் அன்றிலிருந்து கால்கொண்டு கிளைத்ததன்றோ? உலகத்து உயிரினமும் பயிரினமும் அப்பாரி வள்ளலுக்கு அருட்காட்சியாகவே திகழ்ந்தன. தன்னைப் போன்ற மனிதனே வண்டியிலோ, காரிலோ அடிபட்டுக்கிடந்தால்கூட, அவன் அல்லற்படுவதைக் கவனியாது விரைந்து செல்லும் இன்றைய

'அவசர மனிதன்' முல்லைக்குத் தேர்ந்த பாரியை நினைத்துச் சிரிக்கத்தான் செய்வான். இன்று நமது நாகரிகம் அனைத்தும் ஏட்டோடுதான் இருக்கின்றது. நாகரிகப் பூச்சுகள் உள்ளீடற்றவையாயின் விரைவில் சாயம் வெளுத்து விடுகின்றன. நம் நாகரிகப் பேச்சுகளை நடைமுறையில் கடைப் பிடிக்க நாம் முயல்வதில்லை. கண்மூடி வாழ்வே இன்றைக்கு ஏற்றதாகி விட்டது. இன்றைய நாகரிகம் படர்ந்துள்ள நகரங்களில் எத்தனை பிச்சைக்காரர்களை நாம் நடுத்தெருவில் காண்கிறோம். பாரியின் ஈரமனம் நம்மிடம் படிந்து விட்டால், கொடைக்குணம் நடைமுறைக்கு வருமானால், நாம் வீட்டிற்கே திரும்பமுடியாது. இற்றையுலகில்நோயும் அழுக்கும் கவலையும் பிணியும் மண்டிக்கிடக்கின்றன. அரசியல் தலைவராயினும் பெரும் செல்வராயினும் புரட்சி வீரராயினும் நாம் செய்யக் கூடியதென்ன? செய்வதென்ன? அந்த நேரத்தில் கண்ணை மூடிக்கொண்டு காலத்தையும் இடத்தையும் கடந்து நாம் நடந்து கொண்டிருக்கிறோம். அவை நம்மை அடையாத வரையில், நாம் அவற்றை அசட்டை செய்து புறக்கணித்துவிடுகிறோம். பிறகு ஏழைகளுக்காக அழகிய பளிங்கு மாளிகைகளில், மின்சாரக் கருவிகள் பணியாற்ற, மெத்தைமேல் இருந்துகொண்டு திட்டங்கள் தீட்டுகிறோம்; கட்டுரைகள் எழுதுகிறோம்; கதைகள் புனைகிறோம். கவிதைகள், காவியங்கள் உருவாக்குகிறோம். இவையெல்லாம், நாம் மேற்கொள்வது, உலகத்து நோயைப் போக்குவதற்காக! துன்பத்தைத் துடைப்பதற்காக!

பேச்சொன்று செயலொன்றாக, உள்ளமொன்று நடைமுறையொன்றாக வாழும் இக்காலச் சமுதாயச் சூழலில் சிக்கிக் கிடக்கும் நமக்குப் புத்தரின் அருள் புரியாது; பாரியின் கொடை விளங்காது; பேகனின் வண்மை தவறாகவும் படும்! தாய் தன் குழந்தையிடம் காட்டும் பரிவுபோல மக்களின் துயரைக் களையும் பேரரசர்கள் கனிவுடன் விளங்கியகாலம் அது! அதனால் முல்லைக்குத் தேர்ந்ததும் மயிலுக்குப்

போர்வையீந்ததுமான கொடைமடங்கள் அன்று நன்கு மதிக்கப்பட்டன.

## மூவேந்தருடன் போர்

யாரும் கொடைக்குணம் மிக்காராயின் அவரைப் 'பாரி' எனப் புகழ்தல் வழக்காறாயிற்று. முடியுடைவேந்தார் கொடிகட்டி ஆண்ட இத்தமிழகத்தில், ஒரு குறுநில மன்னன் கொடைத்திறத்தால் பெரும்புகழ் பெற்றான். பிற்காலத்தில் சுந்தரரும் தமது தேவாரப் பாடலில், ''கொடுக்கிலா தானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை' என்று கூறிச் சென்றார். பாரி முல்லைக்குத் தேரீந்ததோடு நின்றிருந்தால், அது அவன்தன் புகழுக்காகச் செய்தது என நாம் புறக்கணித்து விடலாம். ஆனால், அவனோ தன் பறம்புமலையைச் சார்ந்த முந்நூறு ஊர்களையுமே பரிசிலர்க்கு வழங்கிவிட்டான்! அவன்நாடு இயற்கை வளம் சிறந்தது. கார்காலத்தில், மழைபொழிந்த காலை நேரத்தில், இயற்கைக்காட்சி கண்ணுக்கினியதாய் இருக்கும். எங்கு பார்த்தாலும் தெறுழின் மலர்கள், யானை முகத்தில் உள்ள புள்ளிகளைப் போலப் பூத்துக் குலுங்கும். செந்நிறப் புற்றுக்களிலே ஈயல்கள் மண்டிப் பறக்கும். அவற்றை மோரொடு கூட்டிச் செய்யும் புளிக்கறி மிக இனிமையாய் இருக்கும். அதனுடன் மெல்லிய தினையாகிய புதியவருவாயும் மிகுதியாகக் கிடைக்கும். 'அப்படிப்பட்ட நாடு அழியுமோ?' எனக் கபிலர் வருந்துகிறார். ''நிழல் தருவதற்கு மரங்களேயில்லாத நீண்டதொரு வழியில், தனியொரு பெருமரம் நின்று, போவார் வருவார்க்கெல்லாம் நிழல் தருவதுபோல, பாரி வறியவர்க்கு வரையாது ஈந்து வாழ்ந்தான். அக்காலத்து வாழ்ந்த மூவேந்தர்களையும் மிஞ்சிப் பரிசிலர்க்கு வழங்கினான் அவ்வள்ளியோன்,'' என்று பொய்யா நாவிற் கபிலர்மனம் மகிழ்ந்து பாராட்டுகிறார்.

*'கார்ப்பெயல் தலைஇய காண்பின் காலைக்*
*களிற்றுமுக வரியில் தெறுழ்வீ பூப்பச்*

*செம்புற்று'ஈயலின் இன்னளைப் புளித்து*
*மென்திளை யாணர்த்து நந்துங்கொல்லோ*
*நிழல்இல் நீளிடைத் தனிமரம் போலப்*
*பணைகெழு வேந்தரை இறந்தும்*
*இரவலர்க் கீயும் வள்ளியோன் நாடே'* (புறம் : 119)

பாரி இவ்வாறு மூவேந்தரைவிடவும் புகழ்பெற்றதால், அவர்களின் பொறாமைக்கு ஆளாயினான். 'பேரரசர்களாகிய தாம் இருக்க. ஒரு குறுநில மன்னன் இவ்வளவு புகழ் பெறுவதா?' என அவர்கள் நெஞ்சம் துடித்தது. 'இதனால் மூவேந்தரும் பாரி மீது போர் தொடுத்தனர். இந்நிலையில் வலிமை வாய்ந்த மூவேந்தர் பக்கம்சென்று சார்ந்துவிடாமல், இறுதிவரை பாரியுடனேயே இருந்து, பாரிக்காக அவர்களை எதிர்த்து வழக்காடி' அப்பெருவேந்தர் பகையையும் பொருட்படுத்தாத கபிலரின் பண்பும் நட்புத் திறமும், உலகம் உள்ள அளவும் நினைந்து நினைந்து போற்றத்தக்கனவாகும்.

பொதுவாக நண்பருலகில் ஒரு நிகழ்ச்சி உண்டு ஒருவனிடம் செல்வம் இருக்கும்போது பலரும் அவனிடம் நட்பாளர்களாக இருப்பார்கள். செல்வம் கரையக் கரைய நட்பும் கரையும்; செல்வம் மறையும்முன்னே நண்பர்களும் மறைந்துவிடுவார்கள். பிறகு எவனிடம் செல்வம் சேருகிறதோ அவனிடம் நட்புப் பிடிப்பார்கள். 'அற்றகுளத்தின் அறுநீர்ப்பறவைபோல்' வாழ்வதுதான் பெரும்பாலும் உலக வழக்கமாக இருக்கிறது. இவர்களுக்கு இடையே ஒன்றிரண்டு நல்லநண்பர்களையும் காண்கிறோம். அவர்களுள்ளும் புலவர்களின் நட்பு என்றும் எடுத்துகாட்டாக விளங்க வல்லதாகும். கோப்பெருஞ்சோழன் நன்றாக வாழும் பொழுது பிசிராந்தையார் சென்றிருந்தால் எவ்வளவோ பரிசில்கள் கிடைத்திருக்கும். ஆனால் அவன் மனமுடைந்து வடக்கிருக்கும்போது அவர் சென்றார். 'செல்வம் பொருந்திய காலத்தில் என்னைக் காணாவிட்டாலும், அல்லற்படும் காலத்தில்

என் நண்பர் வாராதிரார்' எனச் சோழன் கூறியதைப் பிசிராந்தையார் மெய்ப்பித்தது கண்டோம்.

அதியமான் நெடுமானஞ்சியுடனிருந்து, அவன் பகைவரிடத்து அவனது பெருமையை எடுத்துரைத்து, அவன் இறந்த பிறகும் அவனை நினைத்து மனமுருகிப் பாடினார் ஔவையார்.

கபிலர் பாரிவள்ளல் செல்வம் கொழித்து வாழ்ந்த நாளில் அவனிடம் நட்புப்பூண்டார். ஆனால், பிறகு மூவேந்தர் பகையும் துன்பங்களும் பாரிக்கு அடுத்தடுத்து வந்தன. எத்துணை இடுக்கண் வரினும் பாரியைப் பிரியாமல் உடனிருந்து, பாரிக்காக அவனிறந்த பிறகும் கடமையாற்றிய கபிலரின் உண்மை நட்பை வியவாமல் இருத்தல் இயலாது.

### கபிலரின் முயற்சி

மூவேந்தர் படைபலம் மிக்கவர்; பாரியோ சிற்றரசன். இந்நிலையில் பாரிக்காகப்பரிந்து பேசுவது ஆபத்து. அதுவும் மூவேந்தரிடம் நேரில்சென்று பாரியைச் சார்ந்து பேசுவது மிகவும் அச்சந்தரத்தக்கது. அங்கும் அம் மூவேந்தரை மதியாமல் பேசுவதென்பது யாருக்கும் இயலாத ஒன்று. பாரியினிடம் தாம் கொண்ட அன்பால் மூவேந்தரும் முற்றுகையிட்ட போது, கபிலர் பாரியின் சிறப்புகளை அவர்கட்கு அஞ்சாமல் எடுத்துரைத்தார்.

''மூவேந்தர்களே! உங்களிடம் பெரிய அளவில் நால்வகைப் படைகளும் இருந்தாலும், நீங்கள் மூவரும் ஒன்று சேர்ந்தாலும் பாரியை வெல்லுதல் அரிது. பாணர்களையும் பொருநர்களையும் போல ஆடல்பாடல்களுடன், விறலியர் போல் உங்கள் மனைவியர் பின்தொடர்ந்து ஆடிக்கொண்டு வர, நீவிர் பாரியிடம் சென்றால், அவன் தன் நாட்டையும் மலையையும் ஒருங்கே உங்கட்குத் தருவான்'' என்று கபிலர் எள்ளி நகையாடினார். அஃதாவது பாணர், புலவர்கட்கு எளிதில் ஈயாத

மூவேந்தரைப் பார்த்து, நீங்கள் அப்படி வேடமிட்டுப் போனால் உங்களுக்குப் பரிசிலாகவே நீங்கள் கேட்டது கிடைக்கும் என்றார். இவ்வாறு சுருக்கென்று தைக்குமாறு பேசிய கபிலர் மிகவும் நெஞ்சழுத்தம் உடையவரே எனலாம். அன்பு எப்போதும் மென்மையானது என்பார்கள். சில சமயங்களில் அன்பைப் போல வன்மையானதும் இல்லை என்று படுகிறது. பாரியை வீரத்தால் வெல்ல முடியாது; அவன் மனஈரத்தைப் பயன்படுத்தினால், நினைத்ததைப் பெறலாம் என்பது கபிலர் கருத்து.

*'ஒப்புரவினால்வரும் கேடெனின் அ:தொருவன்*
*விற்றுக்கோட் தக்க துடைத்து'* *(220)*

என்பது திருக்குறள். ஒருவன் பிறருக்கு உபகாரம் செய்து வாழ்வதனால் கேடு வருமென்றால், அக்கேடு தன்னை விற்றாவது ஒருவன் அடையத்தக்கதாகும்; பாரியின் வாழ்வில் இப் பண்பைக் காண்கிறோம்.

*பாரியும் பரிசிலர் இரப்பின்*
*வாரேன் என்னான் அவர்வரை யன்னே'* *(புறம் : 108)*

*'நாடும் குன்றும் ஒருங்கீயும்மே'* *(புறம் : 106)*

*'முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு*
*முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்*
*யாமும் பாரியும் உளமே*
*குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே'* *(புறம் : 110)*

இவற்றால் 'தன்னையே கொடுக்கும்' ஈகை புலப்படும்.

மூவேந்தர்களால் எளிதில் பாரியை வெல்ல முடியவில்லை. முற்றுகைக் காலம் ஆண்டுக் கணக்கில் நீடித்தது. இதனால் வளங்குன்றாத மலையிலும் வளம் சுருங்கிற்று. அந் நிலையிலும் கபிலர் விடாமுயற்சியுடனிருந்தார். கிளிகளையும்

அவை போன்ற பறவைகளையும் பழக்கி, அவற்றைப் பறக்கவிட்டு நெற்கதிர், தினைக்கதிர்களைக் கொத்திக் கொண்டுவரும்படி செய்து, மலைமீதிருந்த மக்களுக்கு உதவி செய்தார். இச்செய்தியை அகநானூற்றுக் கவிதைகளில் ஔவையார், நக்கீரர் அனைய பெரும்புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். வரலாற்றில் இத்தகைய நிகழ்ச்சி மிக அருமையாகும். பறவைகளைப் பழக்கியதால் பெரும்பயன் விளைந்திருக்கும் என நாம் கருத முடியாது. மேலும் சில திங்கள் முற்றுகையைத் தாங்கியிருக்கக் கூடும். அவ் வளவே! ஆயினும் அம் முயற்சியின் அருமை மலையினும் மாணப் பெரியது.

மூவேந்தரும் கூடி முற்றுகையிடத்தான் முடிந்தது. மலையை அணுக முடியவில்லை. மலை இயற்கை அரண் அல்லவா? பாரி தாக்குப் பிடித்தாலும் மலைமீது வாழும் மக்களால் எத்தனை நாட்கள் தாக்குப் பிடிக்க முடியும். இறுதியில் பாரி மூவேந்தருடன் போரிடுகையில் வஞ்சகமாகக் கொல்லப்பட்டானா? தன் மக்கள்படும் அவதியைக் கண்டு பொறாமல் தானே தனக்கு ஒரு முடிவு தேடிக் கொண்டானா? என்று தெரியவில்லை. பாரி மனமுடைந்து, வடக்கிருந்து, உயிர் விட்டிருக்கக் கூடும். கடைசியாக, பாரி மகளிரை மூவேந்தரும் குறுநில மன்னரும் ஏற்க மறுத்த போது, பார்ப்பாரிடம் ஒப்படைத்து விட்டுக் கபிலர் வடக்கிருந்தார். அப்போது அவர் பாரி இறந்தபோதே தாமும் உடன் உயிர் நீப்பதாகக் கூறியதாகவும், பாரி தம்மை ஒருங்கு வர விடாமல் இங்கேயே இரும் என விடுத்து ஏகியதாகவும் கூறி மிகவும் இரங்குகிறார். எனினும் ''தலைவிதியே நீ எம்மை இம்மைபோல உம்மையிலும் பாரியுடன் உறையச் செய்வாயாக!'' என வேண்டுகிறார் அவர்.

*''கலைஉணக் கிழித்த முழுவுமருள் பெரும்பழம்*
*சிலைகெழு குறவர்க்கு அல்குமிசை வாகும்*
*மலைகெழு நாட! மாவண் பாரி!*
*கலந்த கேண்மைக்கு ஒவ்வாய் நீ எற்*

*புலந்தனை ஆகுவை! புரந்த ஆண்டே*
*பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒல்லாது*
*ஒருங்குவரல் விடாது, 'ஒழிக' எனக்கூறி*
*இனையை ஆதலின் நினக்கு மற்றுயான்*
*மேயினேன் அன்மை யானே : ஆயினும்*
*இம்மை போலக் காட்டி உம்மை*
*இடையில் காட்சி நின்னோடு*
*உடனுறைவு ஆக்குக உயர்ந்த பாலே!'' (புறம் : 236)*

பொத்தியார் என்ற புலவரை ஒருங்குவர விடாது, ஒழிக 'எனக் கூறி - நீர் இங்கேயே இரும்' என்ற - கோப்பெருஞ் சோழன் போலப் பாரியும் கபிலரை 'இரும்' எனக் கூறிச் சென்றான் என்பதனால், பாரி ஒருக்கால் வடக்கிருந்து உயிர்நீத்தனனோ என்ற ஐயம் எழுகிறது. எங்ஙனமாயினும், பல ஆண்டுகள் கழித்தும் வடக்கிருந்து உயிர் நீக்க எண்ணும் கபிலர் பெருமான் பாரியை நினைவு கூர்கின்றார்.

பறம்புமலையை விட்டுக் கபிலரும் பாரிமளிரு புறப்படுகின்றனர். மூவேந்தரும் 'வென்றெறி முரசினராய்'ட பறம்பைக் கைப்பற்றி விட்டனர். வாழ்நாள் முழுவதும் பறம்பினது வளத்தால் வாழ்ந்த கபிலர், அம்மலையினது 'நட்பை' வியந்துபாடுவது குறிப்பிடத்தக்கது. பாரியின் மகளிரைக் காப்பாற்றும் கடமைக்காகவே, பாரிக்குப் பிறகும் கபிலர் உயிர் வாழ்கிறார். அம்மகளிருடன் பறம்பு விட்டுப் புறப்படும் அவர், நின்னை வாழ்த்தி நாங்கள் போய் வருகிறோம்! பெரும்பெயர்ப் பறம்பே!' என்று அஃறிணையாகிய மலையிடமும் விடை சொல்லிக்கொள்ளும் மாட்சிமை உள்ளத்தை நெகிழ்விக்கின்றது. உயிரற்ற பறம்பு தங்களோடு கொண்டிருந்த நட்புறவையும், அம்மலை பல வழிகளிலும் தங்களைப் போற்றிப் புறந்தந்ததையும் பாடும் கபிலர் பாட்டுப் புறநானூற்றில் உள்ளது.

*'மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்*
*அட்டன் றானாக் கொழுந்துவை ஊன்சோறு*
*பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி*
*நட்டனை மன்னோ முன்னே இனியே*
*பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று*
*நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்*
*சேறும்! வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!*
*கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்*
*நாறிருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே!*

*(புறம் : 112)*

இங்ஙனம் பறம்பு மலையிடமும் விடைபெற்றுப் போகும் கபிலர் நெடுந்தூரம் சென்று திரும்பிப் பார்க்கிறார். பறம்பு கண்ணைவிட்டு மறையவில்லை. இன்னும் அவர் நடந்து சென்று திரும்பிப் பார்க்கிறார். 'வெள்ளிடை மலையல்லவா?' அவர் கண்ணைவிட்டு மலை மறைவதாயில்லை. கண்ணை உறுத்தும் மலை, கருத்தை உருக்குகிறது. ''ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும் சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும் மலை'', என்று பாடிக் கண்ணீர் சிந்துகிறார்.

மனிதன் மனிதனோடு நட்புப் பூணுவதைத்தான் நாம் காண முடியும். மனிதன் இயற்கையோடும் நட்புப் பூணுவதை, பிரிய மனமின்றி வருந்துவதை, அவ் இயற்கையிடம் சொல்லிக்கொண்டு புறப்படுவதைக் கபிலரிடம் காணும் போது, நம் நெஞ்சம் நெகிழ்கிறது.

கபிலரின் நட்பிற்கு இணையான ஒன்றைக் காண்பது இயலாது. பிசிராந்தையார், ஔவையார், கபிலர் போன்ற சங்கப் புலவர்கள் இவ்வாறு நட்பிற்கே இலக்கணம் வகுத்தனர் எனில் மிகையாகாது.

# 6 அருள் உள்ளம்

தமிழ்ப் புலவர்கள் உலகைப் பற்றி எண்ணி எண்ணிப் பண்பட்ட மனம் உடையவர்களாதலால், தந்நலமற்று வாழ்ந்தார்கள்; பொதுநலம் பேணுதலே, குறிக்கோளாகக் கொண்டார்கள். 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத்' திகழ்ந்தார்கள். உலகத்தில் நடக்கும் சிறுமைக்கெல்லாம் காரணம் அறிவின்மை; உணர்வின்மையன்றோ! அவ் அறிவும் உணர்வும் கலந்த நெஞ்சத்தில் புதுமை விளைந்தவண்ணம் இருந்தது; அன்பு ஊற்றெடுத்தது; அருள் சுரந்தது! பிற சிற்றுயிர்கட்கும் தீங்கறியா வாழ்வினையே அந்நெஞ்சம் கடைப்பிடித்தது.

அருட்செல்வத்தைத் திருவள்ளுவர் மிகவும் சிறப்பித்துச் கூறியுள்ளார். பொருட்செல்வம் இழிந்தவரிடத்தும் சென்று சேரும். அருட்செல்வமோ உயர்ந்தவர்களிடமே உருவாகும். பிற உயிர்களிடத்தெல்லாம் அருள்காட்டி வாழ்கின்றவன் தன் உயிர்பற்றி அஞ்சவேண்டியதில்லை. அருள் என்பது அன்பின் வளர்ச்சி. தன் குழந்தைகளிடத்தும் மனைவியிடத்தும் சுற்றத்தாரிடத்தும் காட்டுவது அன்பு. அருள் என்பது தொடர்பில்லாதவரிடத்தும் ஏனைய உயிர்களிடத்தும் காட்டும் பரிவாகும். இந்த அருளின் செல்வராகப் புத்தர் திகழ்ந்தார்; திருவள்ளுவர் வாழ்ந்தார்; காந்தியடிகளும் நமக்கு வழிகாட்டிச் சென்றார். பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பொதுநலம் நாடும் மனப்பான்மையை வளர்த்து வாழ்ந்தவராதலின் அவர் தம் இலக்கியங்கள் அனைத்திலும் அருள் உள்ளத்தின் எதிரொலியையே கேட்கிறோம்.

வையாவிக்கோப்பெரும்பேகன் ஆவியர் குடித்தலைவன். கடையெழு வள்ளல்களில் ஒருவன். பாரி, காரி, ஆய்,

அதியமான், நள்ளி, ஓரி, பேகன் என்பவர் கடையெழுவள்ளல்கள் ஆவர். குளிரால் நடுங்கி, மயில் அகவியதைக் கேட்டு, அதன் துன்பத்தை அகற்றுதற்பொருட்டுத் தன் போர்வையை அதற்குத் தந்துவந்தான் பேகன். இவ்வாறு மயிலுக்கு அது பயன்படுமா? பயன்படாதா என்று ஆராயாது பெருங்கருணையால் கொடுப்பதற்குக் 'கொடைமடம்' என்பர் தமிழ் நூலார். இத்தகைய கொடை மடம் பட்ட பேகன் எக் காரணத்தாலோ தன் மனைவியைப் பிரிந்து, மற்றொருத்தியுடன் வாழ்ந்து வந்தான்.

பேகனின் மனைவி பெயர் கண்ணகி. கண்ணகி என்ற பெயருடைமையாற் போலும் அவளும் கணவனைப் பிரிந்து துன்புற்றாள். கோவலன் மாதவியை அடைந்து, கண்ணகியைக் கைவிட்டது போலவே, பேகனும் தன் மனைவியாம் கண்ணகியைப் பிரிந்து, மற்றொருத்தியுடன் வாழ்ந்தான். இவளும் இளமை நலமும் அழகுப் பொலிவும் உடையவளே. பெருமிதத் தோற்றமும் கற்பும் மிக்கவளே. இருந்தும் பேகனின் மனம் ஏதோ காரணத்தால் பிறழ்ந்தது. அவன் அறநெறியை மறந்து வாழ்ந்தான். கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் அனைய பெரும் புலவர்கள் தமது உள்ளம் காரணமாகப் பேகனை நெருங்கித் திருத்த முற்பட்டனர். கபிலர் என்ற புலவர் பேகனிடம் சென்றார். அவருக்கு ஓர் அச்சம் ஏற்பட்டது. எவ்வளவு பெரிய நண்பர்களாயினும் குடும்பச் சிக்கல்களில் தலையிடுதலைச் சிலர் விரும்பார். பேகனோ சாதாரண ஆள் அல்லன்; ஒரு நாட்டு மன்னன். அவனது குடும்பச் செய்தியில் தலையிட்டால், அதனால் அவனுக்குப் பெருஞ்சீற்றம் விளைதல் கூடுமல்லவா? எனவே, அவர் மிகவும் சிந்தித்துப் புதியதோர் வழியிலே அவனைத் திருத்த முற்பட்டார்.

"கொடைத் தன்மை மிக்க பேகனே! விரைந்து செல்லுங் குதிரைகளை உடையவனே! நேற்றுக் காடுகளெல்லாம் கடந்து, நடந்து வந்த என் சுற்றத்தார் பசித்து வருந்தினராக,

முரசொலிபோல் அருவி ஒலிக்கும் மலைச்சாரலிலே இருக்கின்ற நின் சிற்றூரின்கண் சென்று, நின் வாயிலில் நின்று - நீ இருப்பாய் என நினைத்து - உன்னையும் உன் மலையையும் பாடினேன். அதுகேட்டு ஒரு பெண் குழல் ஒலிப்பதுபோலப் பெரிதும் அழுது, கொட்டுகின்ற கண்ணீரினை நிறுத்த முடியாதவளாக வருந்தினாள். அவள் யாரோ? மிகவும் இரங்கத்தக்கவள்!!'' என்று கபிலர் குறிப்பிட்டார். 'உன் மனைவி அழுகின்றாள்; நீ அவளைச் சென்று சேர்க!' என்று கூறாமல், யாரோ ஒரு பெண் அழுவதைக் கண்டதாகக் கூறுவது, பேகன் அவ்வாறு துன்புறுத்தும் இயல்புடையவன் அல்லன் என்பதை நினைவுறுத்துவது. 'நின் வாயில் தோன்றி, வாழ்த்தி நின்று பாடினேன்' என்பதால், அவள் பேகனுடைய மனைவியே என்பதும் அறியப்படுகிறது. ''நீ நின் மனைவியை இவ்வாறு வருந்தச் செய்திருக்க மாட்டாய்! ஏனெனில் நீ எங்கோ காட்டில் வருந்திய மயிலுக்கே போர்வை ஈந்தவனல்லவா? இவள் யாரோ தெரியவில்லை. ஆயினும் மிகவும் இரங்கத்தக்கவளாக இருக்கிறாள்!'' என்று கபிலர் சாதுரியமாகப் பேசுகிறார். புலவர் அரசனைத் திருத்துகிற விதத்தில் தான் எத்துணை நாகரிகம், பண்பாடு!

பேகனைத் திருத்துவதற்குப் பரணர் என்ற புலவரும் முற்பட்டார். மனித வாழ்வில் பிழைகள் நேர்வது தவிர்க்க வொண்ணாதது. 'பிழை நேர்வது மனித இயல்பு, அதை மன்னிப்பது தெய்வயியல்பு' என்பதோர் ஆங்கிலப் பழமொழி உண்டு. எனவே, பிழையை உணர்ந்து திருந்துவதே வேண்டற்பாலது, பிழை என்ற உணர்வும் திருந்துகிற நோக்கமும் இருக்கும்வரை மனித சமுதாயம் அழியாது. அறநூல்களும் சான்றோர்களும் மனிதனின் மனச்சான்றை மங்காமல் காக்க வேண்டும்; அறநெறியை நினைப்பூட்டிக் கொண்டே இருக்கவேண்டும். பரணர் பேகனைத் திருத்தப் பாடியனவாக இரண்டு பாடல்கள் காணப்படுகின்றன. முதற் பாடலில் பரணர்,

''நாங்கள் உன் வீட்டின் வாயிலிலே சென்று செவ்வழிப் பண்ணையாழிலே மீட்டி இசைத்துக்கொண்டு நின்றோம். அப்போது நெய்தல் மலர்போலும் மைதீட்டிய கண்கள் நீர் சொரிய, அணிகலன்கள் நனையுமாறு ஓயாது அழுதபடி இருந்தாள் ஒரு பெண். உடனே நாங்கள் 'இளமை பொருந்திய அம்மையே! நீ எம்மால் விரும்பிப் பாடப்படுகின்ற பேகனுக்கு உறவோ!' என்று கேட்டோம். அந்த அம்மை தமது காந்தள் விரல்களால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'யாம் அவருக்கு உறவினர் அல்லேம். எம்போல வேறொருத்தியின் அழகை நச்சி' அவர் முல்லையை வேலியாகவுடைய நல்லூரில் வாழ்ந்து வருகிறாராம், என்று கூறினார். ''அவளுக்கு நீ அருள் செய்யாதிருத்தல் மிகவும் கொடியது,'' என்று எடுத்துரைத்தார். இதனை மனங் கொள்ளாத பேகன், பரணருக்குப் பொன்னும் பொருளும் கொடுத்து வழியனுப்பிவைக்க நினைத்தான் போலும். பேகனின் குடும்பத்தைச் சீர்படுத்த வந்த பரணர் அப் பரிசிலைப் பெற விரும்பாமல், மீட்டும் பேகனுக்கு அறிவுரை கூறினார்.

''மயில் குளிரால் நடுங்குமென எண்ணி அதற்குப் படாம் ஈந்து, அருள்செய்த கெடாத புகழையுடையோய்!யாம் பசியால் வருந்தி வந்தோம் அல்லேம்; பாதுகாக்க வேண்டிய பாரமும் எமக்கில்லை. கேட்போர் தலையசைத்து மகிழுமாறு யாழிசைத்துப்பாடி யாம் உன்னிடம் இரக்கும் பரிசில் ஒன்றுண்டு. மணியையுடைய தேரேறிச் சென்று, வருந்துபவளின் வாட்டத்தைத் தீர்ப்பாயாக! அருளை விரும்புபவனே! அறத்தைச் செய்வாயாக!' என்னுமிதுவே, யாம் இரக்கும் பரிசிலாகும்!'' என்று பரணர் நயம் தோன்றக் கூறினார்.

*''மடத்தகை மாமயில் பனிக்கும்என் றருளிப்*
*படாம் ஈத்த கெடாஅ நல்லிசைக்*
*கடாஅ யானைக் கலிமான் பேக !*
*... ... ... ...*

*அறம்செய் தீமோ அருள்வெய்யோய் என*
*இஃதுயாம் இரந்த பரிசில்* *(புறம் : 145)*

மயில் பனிக்கும் என உணர்ந்த நின் அருள் உள்ளம் நின் மனைவி வருந்துவதை உணராதிருக்குமோ என்று குறிப்பாய் உணர்த்தும் திறம் காண்க. பழம் புலவர்கள் அரசர்களின் குடும்ப நல்வாழ்விலும் எத்தகைய நாட்டம் உடையவராய் இருந்தனர் என்பதற்கு இத்தகைய பாடல்கள் சான்றாகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் திருமுடிக்காரியோடு பகைமை கொண்டான். மலையமான் பேரரசர்களைப் போன்ற திருவும் புகழும் உடையவன். கபிலராலும் மாறோக்கத்து நப்பசலையாராலும் சிறப்பித்துப் பாடப் பெற்றவன். இம்மலையமானைக் கிள்ளிவளவன் போரில் வென்றான். அதன்பிறகு மலையமானின் மக்களையும் யானைக்காலில் இட்டுக் கொல்ல நினைத்தான் சோழன். இதனைக் கேள்விப்பட்டுக் கோவூர்கிழார் மனம் வருந்தினார். ஒன்றுமறியாச் சிறுவர்களைக் கொல்வதால் பயனென்ன? தந்தை செய்த தீமைகளுக்கு மக்களைத் தண்டிப்பார் உலகில் உண்டா? காண்பார் மனத்தில் எளிதாக இரக்கவுணர்வைத் தூண்டிவிடும் குழந்தைகளைக் கொல்வதென்றால், அதற்கு மிக வன்மையான கொடிய மனம் வேண்டும். கிள்ளிவளவன் அவ்வளவு கொடியவனா? அவன் மனம் மலையமான்மீது பகைகொண்டதால் அதையே நினைத்து மரத்துப்போயிருந்தது. அப்பகைமையுணர்ச்சியால் காழ்ப்புண்ட நெஞ்சம் குழந்தைகளைக் கொல்லவும் துணிந்தது. எனவே, அக்கொடுமைக் குணம் கிள்ளிவளவனுக்கு இயல்பானதன்று; இடையிலேற்பட்டது. சூழ்நிலையால் உருவான செயற்கையே அது. எனவே அதனை எளிதில் மாற்றி நல்வழிப் படுத்தி விடலாம் எனக் கோவூர்கிழார் கருதினார்; கொலைக்களத்திற்குப் புறப்பட்டார். மலையமான் மக்கள் தமது நற்காலத்தால், தக்க சமயத்தில் காப்பாற்றப்பட்டனர்.

கோவூர்கிழார் கிள்ளிவளவனின் மனநிலை அறிந்து அதற்கேற்பப் பேசினார். முதலில் சோழர்குடிப் பெருமையினை அவனுக்கு நினைவுறுத்தினார். பிறகு மலையமானுடைய நற்பண்புகளையும் வள்ளல் தன்மையையும் புகழ்ந்து பேசினார். பழந்தமிழ்ப் புலவர்கள் மட்டுமே மன்னர்களை நேருக்குநேர் இடித்துக் கூறுவதுடன், அவர்களுக்குப் பகையானவர்களைப் பற்றியும், அவர்களின் முகத்தெதிரே புகழ்வதற்குத் தயங்குவதில்லை. பிறராயின் மன்னர்க்கு வேண்டாதாரைத் தமக்கும் வேண்டாதார் போலப் பேசித் தந்நலம் நாடுவாரேயன்றி, நேர்மை பேசார். கோவூர்கிழார் குழந்தைகளின் கள்ளங் கபடறியாத் தன்மையினை, கிள்ளிவளவன் உள்ளங்கொள்ளும் வண்ணம் விளக்குகிறார். இவ்வளவும் கூறிவிட்டு, 'இவர்களைக் கொல்லாதே' என அவர் எதிர்மறுத்துக் கூறவில்லை. 'நான் கூறியன அனைத்தையும் கேட்ட பிறகு, நீ விரும்பியவாறே செய்க!' என முடிவை அவனுக்கே விட்டுவிட்டார். எதனையும் வற்புறுத்துவதால் எதிருணர்வே வளரும் என்ற உளவியனால அவர் நன்கறிந்திருந்திருத்தார். கிள்ளிவளவன் தானே சிந்தித்து ஒரு முடிவுக்கு வரட்டும் என விட்டு விட்டார். புலவரின் நாவன்மை போற்றுதற்குரியது.

"வளவ! நீ புறாவின் துன்பத்தையும் பிற துன்பங்களையும் போக்கிய சோழரது மரபில் வந்தவன். இவர்கள் தம் புலமையால் உழுதுண்ணும் புலவர்களின் துன்பத்திற்கு அஞ்சித் தன் பொருளை அவர்களுடன் பங்கிட்டு உண்ட மலையமான் மக்கள் தங்களைக் கொல்லவரும் யானைகளைக் கண்டு முதலில் அழுதவர்கள், பிறகு தம் இளமையால் அதை மறந்து, அவற்றைப் பார்த்துக் கொண்டு நிற்கின்ற, புல்லியதலையையுடைய சிறுவர்கள் ஆவர்! கூடிநிற்கும் மக்கள் கூட்டத்தை மருட்சியோடு பார்த்துக் கொண்டு, முன்னறியாப் புதிய துன்பம் ஒன்றை உணர்ந்தாராய் நிற்பதைப் பார்! நான் என் மனத்திற்குப் பட்டவற்றைக் கூறினேன். இதனைக் கேட்டனையாயின், பிறகு நீ வேட்டது செய்க!" என்று அவர் நயமாகக் கூறினார்.

*''நீயே
புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே,
புலனுழு துண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்நிழல் வாழ்நர்;
களிறுகண் டழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்தின் புன்கணோ உடையர்;
கேட்டனை ஆயின்நீ வேட்டது செய்ம்மே!''*

*(புறம் : 46)*

இதனைக் கேட்டதும் கிள்ளிவளவன் கொல்லத் துணிவானோ? அவன் மனம் கரைந்தது. குழந்தைகளைக் கொல்லாது விடுத்தான் அக்கோமகன். புலவரின் அருள் உள்ளம் வெற்றி கண்டது! பாடலில் குழந்தைகள் விடுவிக்கப்பட்ட செய்தி இல்லை என்றாலும், இதற்குக் குறிப்பெழுதியவர் 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக்கிடுவுழி, கோவூர்கிழார் பாடி, உய்யக்கொண்டது' என்று எழுதினார். மன்னுயிர் போற்றித் தன்னுயிர் காக்கும் அறவாழ்வை வள்ளுவம் நமக்கு எடுத்துச் சொல்கிறது. சங்கச் சான்றோர்கள் அவ்வழியே நமக்கு வாழ்ந்து வழிகாட்டியுள்ளனர்.

# 7 பெருமித வாழ்வு

பழந்தமிழ்ப் புலவர்கள் மன்னர்களிடம் அடிக்கடி பெரும்பொருளைப் பரிசிலாகப் பெற்றார்கள், தாம் பெற்ற பரிசிலையும் அவ்வள்ளல்களைப் போலவே வரையாது வழங்கினர். இதனால் தமிழ்ப்புலவர்களின் வாழ்வில் அடிக்கடி வறுமை தலைநீட்டியது. பாணர், பொருநர்களின் வாழ்வு போலவே புலவர்களின் வாழ்வும் அன்றிருந்தது. கூட்டம் கூட்டமாக, இடம்விட்டு இடம் பெயர்ந்து, விழாக்கள் நடக்கும் இடம்தோறும் தம்கலைத் திறமையைக் காட்டிப் பொருநரும் பாணரும் மகிழ்வர். திருவிழா நடந்துமுடிந்த மறுநாளே அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டு விடுவர். அங்கு கிடைக்கும் சோற்றை நச்சித் தங்கிவிட மாட்டார்கள். வயிற்றுப் பசியைத் தீர்ப்பதைவிட, அவர்களுக்குக் கலையை வெளிப்படுத்திச் சுவையை வளர்ப்பதிலேதான் விருப்பம் அதிகம்.

*"சாறுகழி வழிநாள் சோறுநசை யுறாது*
*வேறுபுலம் முன்னிய விரகுஅறி பொருந!"*

என்பது பொருநராற்றுப் படைத்தொடக்கம். உவர்க்கடல் போன்ற ஈயாத பெருவேந்தர்களைப் புலவர்கள் நாடுவதில்லை; சிறிய ஊற்றுப் போன்ற குறுநிலமன்னர்களாயினும் ஈகைக்குணம் மிக்கவர்களையே புலவர்கள் நாடுவர். சிறிதாயினும் இருக்கும் கூழைப் பங்கிட்டுண்ணும் மனம் படைத்த வள்ளல்களையே அவர்கள் தேடிச் செல்வர்.

### வறுமையின் எல்லை

'வல்லாங்குவாழ்தும்' என்னும் சிந்தனை இன்மையால் புலவர்கள் என்றும் வறுமையிலேயே வாடினர். பெருந்தலைச்சாத்தனார் என்ற புலவர் குமணன் காட்டிலிருந்த

போதும் அவனையே நாடிச் சென்றார். கொடுப்பார் வேறு ஒருவரும் இல்லாத காரணத்தால்போலும் குமணனிடமே சென்றார். சென்று, அவர் வறுமையின் எல்லையிலே நின்று தாம் வாடுவதை எடுத்துரைத்தார். தாம் அவண் வரமனமின்றியிருந்தும் வறுமைத் துன்பம் எங்ஙனம் தம்மைப் பிடர்பிடித்துத் தள்ளியது என்பதை அவர் விளக்கினார். நெடு நாட்களாகச் சமையல் செய்யப்படாததால் அடுப்பில் காளான் பூக்கத் தொடங்கிவிட்டது. வருத்தும் பசியோ மிகுந்தது. பாலின்மையால் வற்றியுலர்ந்த மார்பகங்களைப் பற்றிக் குடிக்க முயலுந்தோறும், தன் முயற்சி பயனளிக்காமையால், குழந்தை தாய்முகம் நோக்கி அழத் தொடங்கியது. அதனால், நீர் நிறைந்த கண்களுடன் என் மனைவி என்னை நோக்கலானாள். அவள் துன்பம் கண்டு பொறாமல் மிகவும் சிந்தித்து, வேறு வழியின்றி, யான் நின்முகம் நோக்கி வந்தேன்,'' என்று குமணனிடம் பெருந்தலைச் சாத்தனார் விளக்கினார். இங்ஙனம் வறுமையின் எல்லைகளையே கண்டு வருந்தினர் பழந் தமிழ்ப் புலவர்கள் என்பதை நாம் பல பாடல்களால் அறிகிறோம்,

வறுமையினால் பழம்புலவர் வாழ்வு வாடிவிடவில்லை. மாறாக அவர்தம் புலமை ஒளிவீசித் திகழ இவ்வறுமை தூண்டுகோலாக இருந்திருக்கிறது. அவர்கள் உள்ளம் என்றுமே வறுமை அடைந்ததில்லை, செல்வம் பெற்ற போது வள்ளல்களைவிட வாரி வழங்கியவர் அவர்கள்.

### வறுமையிற் செம்மை

எவ்வளவு வறுமை நேர்ந்தாலும் தம் வாழ்விற்குறைவுறாத, செம்மை பிறழாத மனம் படைத்தவர்களாய்ப் பழம் புலவர்கள் திகழ்ந்தனர். இளங்குமணனால் நாடு கொள்ளப்பட்டுக் காட்டிலே இருந்தகுமணன், பெருந்தலைச் சாத்தனாருக்குப் பரிசுதர இயலவில்லையே என மிகவும் வருந்தினான்.

*கொன்னே*
*பாடுபெறு பரிசிலன் பெயர்தல் என்*
*நாடிழந்ததனினும் நனி இன்னாது* (புறம் :154)

என எண்ணிய குமணன், தன் தம்பி தன் தலையைக் கொண்டுவருவார்க்கு ஆயிரம் பொன் பரிசில் தருவதாக அறிவித்துள்ளான் என்பதைக் கேள்விப்பட்டிருந்ததால், பெருந்தலைச் சாத்தனாரிடம் தன்னுடைய வாளினைக் கொடுத்துத் தன்தலையைக் கொய்து கொண்டுசெல்லுமாறு கூறினான். மனிதனுக்குத் தன்னைவிடச் சிறந்தது பிறிதொன்றில்லை. குமணன் தன்னையே தர முன்வந்தது சாத்தனார் உள்ளத்தை நெகிழ்வித்தது. அவன் தந்த வாளுடன் சாத்தனார் இளங்குமணனிடம் சென்றார். அவனிடம் 'உன் தமையன் வாடிய காலத்தும் வாடாத கொடைப் பண்புடன் விளங்குவதைப் பார்த்து, மிக்க மகிழ்ச்சியோடு வருகின்றேன்' என்று அவனுடைய உள்ளமும் உருகும்படி செய்து, பகைமையை மாற்றினார்.

*''வாள் தந்தனனே, தலைஎனக்கு ஈய,*
*தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்;*
*ஆடுமலி உவகையொடு வருவல்*
*ஓடாப் பூட்கையின் கிழமையோற் கண்டே''* (புறம்: 165)

''உன் தமையனின் மனவுறுதியைப் பார்த்தாயா? கொண்ட கொள்கை பிறழாதவனைத்தமையனாகப் பெற்றது உனக்குப் பெருமையே?'' என்றார் சாத்தனார்.

தமக்குப் பரிசில் தரும் காலத்தை நீட்டித்தாலும், தம்மை நேரில் காணாமல் பரிசில் தந்தனுப்பினாலும், தம் தகுதிக்குத் குறைவுண்டாகக் கொடுத்தாலும் அவற்றைத் தம் மதிப்புக்குத் குறைவு தரும் செயல்களெனக் கருதிப் புலவர்கள் புறக்கணித்தனர். வறுமையைக் காரணம் காட்டிப் பொய்பல கூறி அவர்கள் வாழ நினைக்கவில்லை. இச்சகம் பேசி, பொய் கூறி,

அவர்கள் தம் வயிற்றை வளர்க்க எண்ணவில்லை. கோள் கூறியும், வாழ்ந்தார் பக்கமே வகையறப் பேசியும் தாழ்வுற்றாரைத் தாமும் புறக்கணித்தும், முகமன் பல மொழிந்தும் இழிவுற்று வாழ்வதை அவர்களில் யாரும் ஏற்கவில்லை. அதனால்தான் 'பிறர்க்குத் தீதறியா வாழ்வு' எனக் கோவூர்கிழார் இப் பரிசில் வாழ்க்கையைப் போற்றிப் புகழ்ந்தார்.

**சமத்துவம், சகோதரத்துவம்**

துரியோதனன் மனைவி பானுமதியுடன் கர்ணன் சொக்கட்டங்காய் ஆடிக்கொண்டிருந்தான். அவ் வமயம் அங்கு துரியோதனன் வரக் கண்டு பானுமதி எழுந்திருக்க, உண்மை அறியாத கர்ணன் அவள் தன் ஆட்டத்திற்கு அஞ்சி எழுவதாக எண்ணி, அவளுடைய முன்தானையைப் பற்றினன். அப்போது அவளது மேகலையிற் பதித்திருந்த மணிகள் சில கீழே உதிர்ந்தன. இந்நிலையில் துரியன் அருகில் வந்துவிடவே கர்ணனும் திகைப்புக்கு ஆளாயினன். துரியனோ அவ் இருவரது திகைப்பையும் போக்கும் வண்ணம், அன்புடன் 'இம் மணிகளை எடுக்கவோ, கோக்கவோ' என்றான். நட்புரிமையோடு பழகும் தோழமையுணர்வை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியாக இதனைப் பலரும் எடுத்துச் காட்டுவதை நாம் கேட்டிருக்கிறோம்.

சங்க காலப் புலவர்கள் மன்னர்களுடன் மிக்க தோழமையுணர்ச்சியோடு பழகினர். ஒரு முறை சோழன் நலங்கிள்ளி தம்பி மாவளத்தானும் தாமப்பல் கண்ணனார் என்ற அந்தணப் புலவரும் வட்டாடிக் கொண்டிருந்தனர். அப்போது புலவர் வட்டினைக் கைக்குள் மறைத்து ஆடமுயன்றார். தப்பான ஆட்டம் ஆடி வெல்ல நினைத்தார். இது மாவளத்தானுக்குத் தெரிந்துவிடவே, அவனுக்குக் கடும் சிற்றம் தோன்றியது. வெகுண்டு வட்டினை எடுத்து, அவன் புலவர்மீது எறிந்துவிட்டான். எதிர்பாராமல் மன்னன் தன்னை அவமதித்துவிட்டதை அறிந்த கண்ணனார், 'நீசோழன்

மகன்அல்லை. அப்பரம்பரையில் வந்திருந்தால், புலவரை மதியாது இங்ஙனம் வட்டுக் கொண்டு எறிந்திருக்கமாட்டாய்!' என்றார். இது கேட்ட மன்னன் நாணமுற்றுத் தலைகவிழ்ந்தான். இதைக் கண்ட புலவர் தாமும் தம் செயலுக்காக வருந்தும்படியாயிற்று. இந் நிகழ்ச்சியை அப்படியே, ஒளிவு மறைவின்றிப் பாடிவைத்த புலவர் பாராட்டுக்குரியவரே. தம் தவறென்று மறையாமல், பிறர் பிழையென்று மிகைப்படுத்தாமல் பாடிய புலவரின் நடுவுநிலைமை குறிப்பிடத்தக்கது.

*'நீர்த்தோ நினக்கு' என வெறுப்பக் கூறி*
*நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்*
*நீ பிழைத் தாய்போல் நனிநா ணினையே!*
*'தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்கும் செம்மல்*
*இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மைகாணும்' எனக்*
*காண்தகு மொய்ம்ப! காட்டினை; ஆகலின்*
*யானே பிழைத்தனென்; சிறக்கநின் ஆயுள்*
*மிக்குவரும் இன்நீர்க் காவிரி*
*எக்கர் இட்ட மணலினும் பலவே;' (புறம் :43)*

என்னும் பாடலில் புலவரின் திறந்த மனம் வெளிப்படுகிறதன்றோ?

**ஔவையார் கருத்து**

பரிசில் வாழ்க்கையின் இலக்கணத்தை ஔவையாரும் குறிப்பிட்டுள்ளார். வள்ளன்மையுடையார் செவியில் தம் சொற்களை விதைத்துத் தாம் நினைத்ததை விளைவிக்கும் ஆற்றலுடைய புலவர்களின் பரிசில் வாழ்க்கையை அவர் சிறப்பிக்கின்றார்.

*"வாயிலோயே வாயிலோயே!*
*வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்*
*உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து*

*வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்*
*பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!'' (புறம் : 206)*

முதல்நாள் தருவது போல் பேசி, மறுநாள் இல்லையென்று கூறி வழியனுப்பும் மன்னனாயினும், புலவர்கள் அதனை வருத்தத்தோடு கூறவே காண்கிறோம். மன்னர்களைப் பழிப்பதைக் காட்டிலும் தங்கள் வறுமையை பழிப்பதே பெரும்பான்மையாகும்,

*''முன் நாள்*
*கையுளதுபோல் காட்டி, வழிநாள்*
*பொய்யொடு நின்ற புறநிலை வருத்தம்*
*நாணாய் ஆயினும் நாணக் கூறிஎன்*
*நுணங்கு செந்நா அணங்க ஏத்திப்*
*பாடப்பாடப் பாடுபுகழ் கொண்டநின்*
*ஆடுகொள் வியன்மார்பு தொழுதனென் பழிச்சிச்*
*செல்வல் அத்தை யானே!'' (புறம் : 211)*

இல்லையென்று சொல்லும் மன்னனிடம் புலவர் எவ்வளவு பொறுமையாக நடந்துகொள்கிறார் என்பதற்கு, இஃது ஓர் எடுத்துக்காட்டு. பழுத்த மரத்தை நாடிப் பறவைகள் வந்தன. ஆயினும் கனிகள் தீர்ந்து விட்டதால் அவை கையற்றுத் திரும்பின. அதே போலப் பரிசில் கிடைக்காத புலவர்களும் திரும்ப வேண்டுமே தவிர யாரை நோவதால் என்ன பயன்? மூவன் என்ற குறுநில மன்னன் பரிசில் நீட்டித்தானைப் பெருந்தலைச் சாத்தனார் பாடிய புறநானூற்றுப் பாடலிலிருந்து இதை அறியலாம்.

*''பல்கனி நசைஇ, அல்குவிசும்பு உகந்து*
*பெருமலை விடரகம் சிலம்ப முன்னிப்*
*பழனுடைப் பெருமரம் தீர்ந்தெனக் கையற்றுப்*
*பெறாது பெயரும் புள்ளினம் போலநின்*
*நசைதர வந்துநின் இசைநுவல் பரிசிலென்*

*வறுவியேன் பெயர்கோ? வாள்மேம்படுந.*
*ஈயாய் ஆயினும் இரங்குவென் அல்லேன்*
*நோயிலை ஆகுமதி பெரும்'' (புறம் : 209)*

சங்க காலத்தே புலவர்களின் வாழ்வில் காணப்பட்ட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற சிறப்புக்களும் செம்மை, நேர்மை, பெருமைஅனைய பண்புகளும் என்றென்றும் யாவராலும் ஏற்றுப் போற்றத் தக்கனவாகும்.

பழந்தமிழ்ப் புலவர்களின் வாழ்வில் எத்தனையோ அரிய நிகழ்ச்சிகள் நடந்திருக்க வேண்டும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவற்றைப் புறநானூறு போன்ற நூல்களால் நாம் அறிகிறோம். இந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மிகச் சுவையானவை. இன்று நாம் வார, மாத இதழ்களில் படிக்கும் துணுக்குகளைவிட எவ்வளவோ மேலானவை; சுவையானவை! இவற்றை நாம் அறிவோமாயின் நம் அறிவும் பண்பும் கூர்மையும்சிறப்புமுறும்.

காப்பியக் கதைகளில் வரும் நிகழ்ச்சிகள் போலப் பழம்புலவர் வாழ்வின் தொகுப்புக் காணப்படுகிறது. அத்தொகுப்பினையே நாம் 'பரிசில் வாழ்க்கை'யின் பல்வேறு ஒளிக் கூறுகளாகக் காண்கிறோம். அவை இன்றும் என்றும் யாவர்க்கும் பயன்தருவன எனில் அது மிகையாகாது.

# 8 அரசரும் புலவரும்

பழங்காலப் புலவர்களின் வாழ்வை யாண்டும் தனித்துக் காணுதல் இயலாது. குடும்ப வாழ்விற்கு இருவர் இன்றியமையாதவர். கணவனும் மனைவியுமாக வாழும் முழு வாழ்வே குடும்ப வாழ்வாகும். அது போலவே இறைவணக்கத்திலும் இரு முனைகளைக் காண்கிறோம். கடவுளும் பக்தனும் அங்கே காட்சியளிக்கிறார்கள். அவ் இருவரும் இரண்டறக் கலக்குமிடத்தே தான் பக்தி பிறக்கிறது. அது போலப் பரிசில் வாழ்க்கையிலும் புரவலரும் புலவரும் பிரிக்க இயலாதபடி இணைந்து காணப்படுகின்றனர். பரிசில் பெறும் புலவர் ஒரு கூறு; அவருக்குப் பரிசில் தரும் வள்ளல் பிறிதொரு கூறு. புலவர்இன்றி வள்ளலும் இல்லை; வள்ளலின்றிப் புலவருக்கு வாழ்வும் இல்லை!

அக்கால அரசர்கள் இலக்கியத் தந்தையர்களாகத் திகழ்ந்தார்கள். இலக்கியங்களைப் படைத்து வளர்த்துத் தந்த புலவர்களைத் தாயர் எனலாம். இவ் இலக்கியக் குடும்பம் கவலையற்று வாழப் பொருள்தேடித் தந்து, புறவாழ்வைச் செம்மைப் படுத்திய அரசர்களை ஏன் இலக்கியத் தந்தையர் என்று கூறக்கூடாது?

ஔவையார் அதியமானைத் தம் தந்தைபோல் பாவித்துப் போற்றிய செய்தி இங்கு நினைவுகூரத்தக்கது. ஔவை வயதான பாட்டியாவார். வயதானகிழப்பருவத்தினரைக் குழந்தைகளுடன் ஒப்பிடலாம் அல்லவா? அது போல ஔவையாரும் தம்மைக் குழந்தையாகக் கற்பனை செய்து கொண்டு பாடுகிறார். ''அதியமான் அஞ்சி! என் வாயில்பிறக்கும் சொற்கள் குழந்தையின் பேச்சுப் போன்றவை. அவை யாழிசையோடு

பொருந்தா; காலத்தோடும் ஒத்துவருதில்லை. பொருள் அறிய முடிவதில்லை. ஆயினும் தம் புதல்வரின் மழலை கேட்டுத் தந்தையர் அருள் செய்வாரன்றோ! அதுபோல, அஞ்சியே, நீயும் எனது சொற்களைக் கேட்டு அருள் செய்கின்றமையால், அவை இனிமையுடையனவாகின்றன!'' (புறம் 92) இவ்வாறு பழங்கால மன்னர்கள் இலக்கியத்தை வளர்க்கப் பேருதவி புரிந்தமை நினைவு கூரற்பாலது.

பழங்காலத்து அரசர்கள் புலவர்களின் தகுதியறிந்து பரிசு வழங்கினார்கள். புலவர்களைப் போல அரசர்களுக்கும் அறிவும் இலக்கியப் பயிற்சியும் இருந்ததால்தான் இதுகைகூடியது. பொன்னை மாற்றுப் பார்த்து, நயம்பயம் அறிய மாட்டாதவன் பொன்வாணிகம் செய்யப் புறப்பட்டால் கடைக்கணக்கும் கைப்பொருளும் என்னாகும்? புலவர்களின் தகுதியறிந்து பரிசில் நல்கும் ஆற்றலும் திறனும் சுவையுணர்வும் அக்காலப் புரவலர்களுக்கு இருந்தன. ஒவ்வோர் அரசனும் விற்பயிற்சி, கலைப்பயிற்சி, சொற்பயிற்சி பாப்புனையும் பயிற்சி ஆகியனவும் பெற்றிருந்தான். எனவே இப்புலவர் இத்தகைய தகுதியுடையார் என அளந்தறியவும் அவரவர் தகுதிக்குக் குறை நேராமல் பரிசில் நல்கவும் அவர்களால் இயன்றன.

அக்கால அரசர்களிலே பலர் நல்ல பாவன்மை படைத்துப் புலவர்களைப் போலப் பாடியுள்ளனர். பாண்டியன் அறிவுடைநம்பி, தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், நலங்கிள்ளி, பூதப்பாண்டியன்தேவி, பாரிமகளிர் என எத்தனையோ அரசகுலப் புலவர்கள் சங்கத் தொகைப் பாடல்களைப் பாடியுள்ளனர். செல்வத்திருவுடையார் கல்வியும் பெற்றுவாழும் அருமை அறிந்து போற்றுதற்குரியதாகும். இக்காலத்தில் செல்வம் சேர்ந்தவுடன் கல்வியைப் புறக்கணிப்பதையே காண்கிறோம். கற்றறிந்த

சான்றோர்களையும் மதிக்கமறுக்கின்றனர். 'எல்லாம் பொருளால் ஆகும் என்ற எண்ணம் மிகவுயர்ந்து, செல்வம் ஒரு கருவியே என்ற நிலை மறக்கப்படுகிறது. அதனால், செல்வத்தால் விளைத்துப் பயனடைதற்குரிய கல்வி, கலை, இலக்கியம் அனையன வளர்ச்சி குன்றுகின்றன. கல்வியும், செல்வமும் ஒன்றுபடும் நாடே சிறப்புறும். புலவரும் மன்னரும் இணைந்த பழங்காலச் சமுதாயத்தில் இது எளிதாயிற்று. இன்று இவற்றிடையே பெரும் பிளவு இருப்பதற்குக் காரணம் கல்வியுடையாரும் செல்வரும் வெவ்வேறு திசைகளில் செல்வதேயாகும்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், வஞ்சினம் கூறுங்கால், ''எனது நிழலிலே வாழும் குடிமக்கள் செல்லுமிடம் அறியாமல், எம் அரசன் கொடியன் என்று கூறி அழுது அரற்றும் கொடுங்கோலாட்சி செய்தவனாக, யான் ஆகுக; மிகவுயர்ந்த கேள்வியறிவினையுடைய மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட, உலகத்தோடு நிலைபெற்ற, பலரும் புகழும் சிறப்புக்கொண்ட புலவர்கள் என் நில எல்லையைப்பாடாது நீங்குக! இரப்பவர்க்கு ஈயாத வறுமையை யான் அடைக!'' என்று கூறுகிறான் (புறம் 72). இதிலிருந்து புலவரால் பாடப்பெறுதலை மன்னர்கள் எத்துணை விரும்பினர் என உய்த்துணரலாம்.

அரசர்களுக்கு இருந்த புகழ் வேட்டையும் அக்கால இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

*'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'* *(புறம் : 165)*

என்ற நோக்கம் அன்று நிலைபெற்றிருந்தது. ''உலகத்தில் நூற்றிதழ்த் தாமரை போன்ற உயர்குடியிற் பிறந்தோர் பலராயினும் புகழும் பாட்டும் உடையோர் சிலரே; தாமரையிலை போலப் பயனின்றி அழிபவரே பலராவர். புலவர் பாடும்

புகழுடையோர், தம் செய்வினை முடித்து வானுலகெய்துவர்'', என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் கூறுவனவும் நாம் இவண் நினைவு கூர்தற்குரியன.

*''சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்*
*நூற்றிதழ் அலரின் நிரைகண் டன்ன*
*வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து*
*வீற்றிருந் தோரை எண்ணுங் காலை*
*உரையும் பாட்டும் உடையோர் சிலரே;*
*மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே;*
*புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின*
*வலவன் ஏவா வான ஊர்தி*
*எய்துப என்ப தம் செய்வினை முடித்து...''*

*(புறம் :27)*

அரசர்கள் தமது ஆட்சிச் செல்வாக்கால் புலவர்களை அடக்காமல், அவர்களுக்கு முழுஉரிமை கொடுத்தார்கள். தம்மையே கண்டிக்கவும், தமது பிழைகளை எடுத்துக் கூறவும், தம்மைப் பழித்தும் கடிந்தும்கூறவும் அவர்கள் இடம் கொடுத்தார்கள். 'வேம்பும் கடுவும் போல' வெஞ்சொல் கூறினும் செவி கைக்கும் அச்சொற்களையும் பொறுத்துக்கொள்ளப் பழகியிருந்தார்கள். புலவர்களுக்கு இவ்வளவு உரிமை நல்கியமையாலேதான் இலக்கியம் உயர்ந்தது. அன்று புலவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கருத்துரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை என்பன இன்றையக் குடியாட்சி நாடுகளில் காண முடியாத அளவு இருந்தன.

மேனாட்டில் அண்மையில் உலகப் பேரறிஞராகத் திகழ்ந்து உயிர் நீத்தவர் பெர்னாட்ஷா. அவர் மிக உரிமையோடு இங்கிலாந்தில் வாழ்ந்தார். அரசினர் தவறுகளையும் அஞ்சாது எடுத்துக்கூறி, மக்கள் போற்ற வாழ்ந்தார். அவரது வாழ்வும் பழம் புலவர்களின் வாழ்வும் ஒப்பிட்டுக் கருதத் தக்கன. உரிமை

அடைவதிலும் சரி, கடமை ஆற்றுதலிலும் சரி, பெர்னாட்ஷா நம் சங்கப் புலவர்களைப் போலவே திகழ்ந்தார். சங்க இலக்கியத்தில் ஊன்றிய பற்றுக்கொண்ட டாக்டர் மு. வரதராசனார் பேரறிஞர் பெர்னாட்ஷாவிடம் பேரன்புகொண்டமைக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்.

## கல்வித்திரு

அரசர்கள் நல்வழியில் நாட்டை ஆட்சி செய்யப் புலவர்கள் தூண்டுகோலாக இருந்தனர். இலக்கியம் வளரப் புலவர்கள் பெரும்பணியாற்றினர்.

ஒரு புலவர் ஒரு சமயம் அமைச்சர்போல அரசனுக்கு அறிவுரை கூறக் காண்கிறோம். மறுசமயம் அவரே தூதுவராகி, பகைமன்னரிடம் சென்று சந்து செய்விக்கக் காண்கிறோம். நண்பர் போல உரையாடவும், அறநெறி தவறிய வழி இடித்துரைத்துத் திருத்தவும், பிரிவுற்றவழிக் கண்ணீர் பெருக்கிக் கையறுநிலை பாடவும் காண்கிறோம். அதே புலவர் குழந்தைபோல அரசனிடம் வஞ்சகமின்றிப் பழகுவதையும் தமக்கு இன்னபொருள் பரிசு தரவேண்டும் எனக் கேட்பதையும் தருவதற்குச் சுணங்கினாலும் குறைத்துக் கொடுத்துத் தகுதியை மறந்து பேசினாலும் சினந்து' 'பரிசு வேண்டாம்' என மறுத்துச் செல்வதையும் காண்கிறோம்.

முற்றும் உரிமை தவழும் சூழலிலே அவர்கள் வாழ்ந்தனர்; உள்ளம் அருளால் கனிய, உலகின் நலமே தம்நலமாகக் கருதி வாழ்ந்தனர்; சிந்தனையின் ஆழத்தைக் கண்டு காலத்தால் அழியாத கருவூலங்களைப் படைத்துச் சென்றனர். பெருமித வாழ்விலே மகிழ்ந்து, வள்ளல்கள் போலத்தாம் பெற்ற பரிசில் பொருள்களையும் வாரி வழங்கினர்.

நமது தமிழகத்தின் வரலாறு இன்று நமக்குக் கிடைப்பதற்கும், நமது நாகரிகம் இடையறவு படாமல் நிலைத்

திருப்பதற்கும் இப்புலவர்களின் பரிசில் வாழ்க்கையே காரணம். 'உண்மையான செல்வம் கல்விச் செல்வமே' என்னும் சொற்கள், இவர்களால் மெய்யாகி விட்டன. மூவேந்தர்கள் எவ்வளவோ செல்வத்திலே திளைத்தனர். தமிழகம் உலகம் முழுவதும் வாணிகம் செய்து செல்வத்திரு நாடாக விளங்கியது. ஆனால், இன்றும் நிலைத்தது எது? இனியும் நிலைப்பது எது? கல்வி-கல்விச் செல்வமே யன்றோ.?

பறவை வட்டமிட்டு வட்டமிட்டு மேலே மேலே உயர்ந்து பறப்பதுபோலச் சங்கப் புலவர்களின் மனவளமும் உயர்ந்து சென்றது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலகளாவி நின்றது. இப்பரந்த உள்ளமும் ஆழ்ந்த அறிவும் பரிசில் வாழ்க்கையின் பரிசில்களாகும்.

*கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை* (400)

என்று கூறும் திருக்குறள் கருத்து பரிசில் வாழ்க்கையால் நிலைத்து விட்டது. இனியும் தமிழகம் வாழ வேண்டுமேல், அறிஞர் பண்பு, பழம் புலவர்கள் கொண்டிருந்த பண்பு போலத் திருந்துதல் வேண்டும். அப்புலவர்கள் கவலையற்றவர்களாய் வாழ அரசும் மக்களும் உதவ வேண்டும். உண்மையான, திறமையான புலமைச் செல்வம் இங்கே தழைக்க, அதுவே வழியாகும்.

# 9 பாடும் நெறிகள்

## இயன் மொழி

சங்கப் புலவர்கள் போற்றிய வாழ்வு நெறிகள் பல. அவை அன்றாட நடைமுறை அனுபவத்தில் பிறந்தவை. உணர்ந்து, தோய்ந்த உள்ளத்தில் உருவாகி வெளிப்பட்டவை. எனவே அவை ஆற்றலுடைய கருத்துக்கள் எனலாம். மன்னர்களின் இயல்பை உள்ளவாறு கூறி வாழ்த்தும் 'இயன் மொழி' அல்லது 'இயன்மொழி வாழ்த்து' என்ற துறை பாடாண்திணையில் உண்டு. இங்ஙனம் உள்ளதை உள்ளவாறு அழகுபடப் புனைந்து, அழியாத ஓவியங்களைப் படைக்கும் கலையைச் சங்கப் பாடல்களில் நிறையக் காண்கிறோம். புனைந்து சொல்வதுதானே இலக்கியம்; இல்லாததைக் கற்பனை செய்வதுதானே இலக்கியம் என எண்ணிப் பழிகிவிட்டவர்களுக்கு,இது வியப்பைத் தரும்.

மலையமான் திருமுடிக் காரியை கபிலர் இயன்மொழித்துறையில் இரண்டு பாடல்கள் பாடியுள்ளார். செய்தித்தாளில் வருவதுபோல், ஏதோ நடப்பாக உள்ள ஒன்றைத்தான் அவை வெளியிடுகின்றன. அக்கால மன்னனர்கள் நன்கு மது அருந்துவார்கள். அப் போதையில் தேரும் யானையும் தம்மை மறந்து ஈவார்கள் . மலையனோ கள் அருந்துபவன் அல்லன் போலும். அவன் கட்குடியாமல், இயல்பாக இருந்து வழங்கிய தேர்ப் பரிசில்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. முள்ளூரில் பெய்யும் மழைத் துளிகளினும் பலவாகிய தேர்களை அவன் வாரி வழங்கியுள்ளான். இப் பாடலில் மலையமானுக்கு ஈதல் பிறவிக்குணம் என்பது இவ்வாறு விளக்கப்படுகிறது. சங்ககாலத்திலேயே 'ஈவோர் அரிய இவ்வுலகத்து' என்று ஒரு புலவர் பாடியுள்ளார். எனவே, கிடைத்த பாடல்களை

வைத்துக்கொண்டு, அன்று அனைவருமே வள்ளன்மையுடன் வாழ்ந்ததாகக் கணக்கிடக்கூடாது. கள்ளுண்ட போதையில் மனம் மகிழ்ந்து கொடுப்பதும் ஓர் இயல்பே. ஆயினும் அதனினும் சிறப்பு தன்னியல்பாகக் கொடுப்பது. ஒருவேளை போதை தவிர்ந்திருந்த நேரங்களில் சிலர் ஈதற்கு விரும்பாதவர்களாக இருந்திருக்கக் கூடும்! அதனால் அன்றைய நடைமுறை வாழ்வைக் கபிலர் நமக்குக் கோடிட்டுக் காட்டுகிறார்.

*''நாட்கள் உண்டு, நாள் மகிழ் மகிழின்*
*யார்க்கும் எளிதே, தேர்ஈதல்லே;*
*தொலையா நல்லிசை விளங்கும் மலையன்*
*மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்*
*பயன்கெழு முள்ளூர் மீமிசைப்*
*பட்ட மாரி உறையினும் பலவே''* (புறம் : 123)

ஓசையோடு கொட்டும் அருவியினையுடைய மலையனைப் பாடிச் செல்பவர்கள் நல்லநாள் அல்லாத தீ நாளில் சென்று, சகுனம் தடைசெய்ய, செவ்வியறியாமல் புகுந்து திறமைக் குறைவாய்ப் பாடினாலும் வறிதே பெயர்குவர் அல்லர்! பரிசில் பெற்றே திரும்புவர்.

*''நாள் அன்று போகி, புள்இடை தட்ப*
*பதன்அன்று புக்கு, திறன்அன்று மொழியினும்,*
*வறிது பெயர்குநர் அல்லர்-நெறிகொளப்*
*பாடு ஆன்று இரங்கும் அருவிப்*
*பீடுகெழு மலையற் பாடியோரே''* (புறம் : 124)

இப்பாடலிலும் கபிலர் கூறியுள்ள செய்தி, மலையனின் இயல்பான தன்மையை விளக்குவதே. இவற்றில் என்ன சிறப்பிருக்கிறது என்று கேட்கலாம்? உலகத்தில் வள்ளன்மை என்பது எளிதன்று; பல வழிகளில் எதுவும் தராமல் தப்பவே முயல்வர். ஏதேனும் சொல்லி இரவலரைத் திருப்பி அனுப்புவர். பரிசில் இல்லை என்பதைத்தான் நம் முன்னோர் மங்கல

வழக்காகப் 'பரிசில் நீட்டித்தல்' என்றனர். அந்நிலையிலும் இரப்போர், ஈயாதவரைத் திட்டுதல் கூடுமோ?தம் 'நேரத்தையும் காலத்தையும் நொந்துகொண்டு திரும்புதலே அவர் செய்யற்பாலது. ஆனால் மலையனைப் பாடிச் சென்றால், அந்தத் துன்பமெல்லாம் இல்லை. 'வறிது பெயர்குநர் அல்லர்' என்ற உறுதிமொழி, பரிசின் மாக்களுக்கு உயிர் தருவதன்றோ? அதனால்தான், அனுபவத்துடன் கூட்டிப் பார்த்தால், இவ்இயன்மொழிகள் மிக்க சிறப்புடையனவாகின்றன.

கபிலர் வேள்பாரியைப் பாடிய வேறு இரு பாடல்களும் கூட 'இயன்மொழி'த் துறை சார்ந்தவை. கபிலர் போன்ற பெரும்புலவர்கள் கற்பனைவளம் மிக்கவர்கள்! அரசர்களை மிக வருணித்தும், கற்பனை செய்தும். விரிவாகப் பாடவல்லவர்கள். அத்தகைய கபிலர் சுருக்கமாக, இயன்மொழியிற் பாடுவானேன்?

கடவுள் தன்னை வழிபடுவார் சார்த்துவது எருக்கம் பூவாயினும் 'விரும்பேம்' என மறுப்பதில்லை. எருக்கம்பூ ஒன்றே ஆர்வலனிடம் இருக்கிறதென்றால், அவனுடைமையை ஏற்க இறைவன் தயங்குவதில்லை. அது போலப் பாரியும் எவ்வளவு எளியவர், திறனற்றவர் சென்றாலும் இல்லையென்று சொல்லமாட்டான். கறக்கப் பழகியவர்களுக்கே கொடுத்துப் பழகியவனல்லன் அவன்.

*''நல்லவும் தீயவும் அல்ல குவிஇணர்ப்*
*புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை*
*கடவுள் பேணேம் என்னா; ஆங்கு*
*மடவர் மெல்லியர் செல்லினும்*
*கடவன் பாரி கைவண் மையே''* *(புறம் : 106)*

மற்றுமொரு சிறு பாடலிலும் இயன்மொழியாகப் பாரியைச் சிறப்பிக்கிறார் கபிலர். அதில் சொல்லும் திறனில் சிறு உத்தி சேர்க்கின்றார். உலகத்தில் பாரி, மாரி என்று இரண்டு பேராற்றல்கள் நம்மைக் காப்பாற்றுகின்றன. இவற்றுள் பாரியை

மட்டும் போற்றும் புலவர்கள் மாரியை மறந்துவிடுகின்றார்கள். அவ்வாறு புகழ்வதெனில் அவர்கள் மாரியையுமல்லவா புகழவேண்டும்?

*'பாரிபாரி என்றுபல ஏத்தி*
*ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்!*
*பாரி ஒருவனும் அல்லன்;*
*மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே !'(புறம் : 107)*

*''என்ன இது? பாரி, பாரி என்று ஓயாமல் உறங்காமல் ஒருவனைமட்டுமே புகழ்கிறீர்கள்! புலவர்காள்! நீங்கள் நினைப்பதுபோல் பாரிமட்டும் உலகைப் புரக்கவில்லை. மாரி என்று ஒன்றும் இருக்கிறது. தெரியுமா?'' என்று கேட்பது போன்ற நடையில் இஃது அமைந்துளது. இதனைப் பழிப்பதுபோலப் புகழ் புலப்படுத்துதல் என்பார்கள். எங்ஙனமேனும், உலகத்தில் வள்ளுவரால் 'வான்சிறப்புப் பாடப்பட்ட மழைக்கு நிகரானவன் பாரி; அவனுக்கு நிகராக இவ்வுலகை ஆளும் மன்னரில் எவரும் இலர்' என்ற அரிய உண்மையை இப்பாடல் எடுத்துரைக்கிறது. இதுபோல் செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்துப் பாடல்கள் அனைத்தும் உள்ளதை உள்ளவாறு கூறிப் புறத்திணை இலக்கியத்திற்குப் பொலிவு சேர்க்கின்றன.*

**ஆற்றுப் படை**

பழம்புலவர்தம் வாழ்வுநெறியின் தலைமைச் சிறப்பாக அமைவது இவ் ஆற்றுப்படை நெறியாகும். தொல்காப்பியர் குறிப்பிடுவது போலப் 'பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறுத்தும்' இப் பண்பு குறிப்பிடத்தக்கதாகும். பத்துப்பாட்டில் ஐந்து பெரிய ஆற்றுப்படைப் பாடல்கள் தோன்றியிருப்பதே, அன்று இத்துறைக்கு இருந்த செல்வாக்கைக் காட்டும். மன்னர் சிறப்பு, புலவர் வறுமை, நாட்டுவளம், கொடைமைப்பண்பு, கலைவளர்ச்சி போல்வன

பல' இதனால் அ∴றியவருகின்றன. 'தாமின்புறுவது உலகின்புறக் காணும் பண்பு' கல்விக்கு உரியது. எனவே கல்வி நலமுடையார் இங்ஙனம் ஒருவர்க்கு ஒருவர் நல்வழிகாட்டிச் செல்வவளம் சேர்க்கவேண்டும் என்பதையும் அப்போதுதான் கலையும் இலக்கியமும் தடையின்றி வளரும் என்பதையும் இத்துறைப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளியைப் பாணாற்றுப் படையில் ஒரு பாடல் பாடியுள்ளார். ஒரு பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாகப் பாடுவதே பாணாற்றுப்படையாகும். உடும்பை உரித்தாற்போல எலும்பு தெரியும் மார்புடன் தன் சுற்றம் பசித்து வாடவும், அதனை நீக்குபவரைக் காணாமல் பாணன் வருந்துகிறான். அவனுடைய இசையையோ, கலையையோ யார் கேட்கிறார்கள்? சிலர்-மிகச் சிலர்தான் அதற்குச் செவிசாய்க்கிறார்கள். எனவே பாணன் தன் தலைவிதியை நொந்துகொண்டு ஓரிடத்தில் இருக்கிறான். அவனை மற்றொரு பாணன் அழைத்து, ''பீடுகெழு நெடுந்தகையும் காவிரிப் பொருநனும் ஆகிய குரிசில் உறந்தையில் இருக்கின்றான், நீயும் அவனிடம் சென்றால், மீட்டும் பிறரிடம் சென்று யாசிக்கவேண்டாமல் நினக்குப் பரிசில் நல்குவான்!'' என்று சொல்லியனுப்புகிறான். அக்கால அரசர்களின் கொடைப்பண்பை, விரிவாக விளக்குவதற்கு இத்துறை மிகவும் பயன்பட்டது.

*உடும்பு உரித்தன்ன என்புஎழு மருங்கின்*
*கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது,*
*சில்செவித்து ஆகிய கேள்வி நொந்து, நொந்து*
*ஈங்கு எவன் செய்தியோ, பாண! - பூண்சுமந்து*
*அம்பகட்டு எழிலிய செம்பொறி ஆகத்து*
*மென்மையின் மகளிர்க்குவணங்கி, வன்மையின்*
*ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை*

*உறந்தை யோனே குருசில்!*
*பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே!*

*(புறம் : 68)*

**மரபும் திறனும்**

சங்கப் புலவர்கள் மரபைப் பின்பற்றியே பாடுவர். ஆயினும் தம்திறனை வெளிப்படுத்தாமல் அவர்கள் விடுவதில்லை. ஆங்காங்கு, பாடல்களில் அவர்களின் முத்திரை பதிந்திருக்கும். இம்மரபுவழிப் பாடல்களில் அதனைக் கண்டு பிடிப்பதுதான் மிகவும் கடினம். ஆயினும் ஊன்றிய பயிற்சி உடையார் அதனை உய்த்துணர்தல் கூடும்.

**உயர்வு நவிற்சி**

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆவூர்மூலங்கிழார் இயன்மொழித் துறை அமைய ஒரு பாடல் புனைந்து போற்றியுள்ளார். அவர் தாம் சொல்லவரும் செய்திகளை மிகவும் அழுத்தம் பெறச் சொல்கிறார். வாழ்க்கையில் நடப்பவனைவிட, மேடையில் நடிப்பவன் தன் உணர்ச்சிகளைச் சிறிது மிகையாக வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் நாடகம் காண்பார்க்குச் சுவையுணர்வு பிறக்கும். ஆவூர் மூலங்கிழாருக்கு அம்முறையில் அழுத்தமாகப் புனைவதே பிடித்திருக்கிறது. வேந்தே! களிற்றின்மீது பறக்கும் உன் வெற்றிக்கொடி, வானைத் துடைப்பதுபோல் அசைகிறது! நீ சினந்து பார்க்குமிடத்தில் நெருப்புப் பற்றவும், நீ நயந்துபார்க்குமிடத்தில் பொன்பூப்பவும் செய்யக்கூடியவன். ஞாயிற்றில் நிலவொளியையும் திங்களுள் வெயிலையும் விளைவிக்கக் கூடியவன். எனவே பரிசின் மாக்கள், மேல் உலகையும் விரும்பாமல் நினது நாட்டையே நச்சுகின்றனர். பொன்னுலகில் செய்த வினைப்பயனால் அனைத்தையும் அடைந்து மகிழ்தலல்லது, உடையோர் ஈதலையும் இல்லோர் இரத்தலையும் அங்குக் காணுதல் இயலாதாகலான், ஊக்கமும்

உணர்வும் அங்குக் காணப்படுதலில்லை. எனவே 'அத்துறக்கவுலக இன்பமும் இங்கேயே கிடைத்தலின், பகைவர் நாட்டுப் பரிசில் மாக்களும் நினது நாட்டையே விரும்புகின்றனர். நின் நிழலிற் பிறந்து, நின் நிழலிலேயே வளரும் எம்மைப்பற்றிக் கேட்கவேண்டுமா? எல்லோரும் நின் நாட்டையே, பொன் நாட்டினும் மேலாக விழைகின்றோம்'' என்று ஆவூரார் அழகுபெறப் புனைகின்றார். (புறம் : 38) இயன்மொழிதான் என்றாலும் உயர்வு நவிற்சியோடு ஒன்றிச் சிறக்கிறது இப் பாட்டு.

## பொருண்மொழிக் காஞ்சி

சங்கப் புலவர்கள் என்றும் நிலையான உண்மைகளை- அறநெறிகளை எடுத்து விளக்கியுள்ளனர். சிறந்த பண்பாளர்களாக வாழ்ந்து காட்டிய அவர்கள், மிகவுயர்ந்த மெய்ப்பொருள் அறிஞர்களாகக் கருத்துக்களை வழங்கியுள்ளனர். அவர்களுடைய பாடல்களில் காணப்படும் கருத்துச் செல்வங்கள் காலத்தால் அழியாதவை.

ஓர் அடிப்படை வாழ்க்கையுண்மையை ஓரேருழவர் என்ற புலவர் நான்கே அடிகளில் கூறியுள்ளார். நாம் குடும்பம். இல்லறம் என்ற சிக்கலில் என்று மாட்டிக்கொள்கிறோமோ, அன்றிலிருந்து எப்பக்கமும் தப்பிக்க முடிவதில்லை. வாழ்க்கைச் சிக்கல் அத்தகையது. சில சமயங்களில் துறவியாகி ஓடிவிடலாம் என்று தோன்றும். அங்கேயும் வந்து, கடைசிப்பிள்ளை 'அப்பா' என்றால் என்ன செய்வது? என நினைத்தால், உடனே அவ் எண்ணம் பறந்துபோகும். வாழ்க்கையில் முற்றிலும் ஈடுபட்டு வாழவும் இயலாது. ''தோலைப் புடைத்து வைத்தாற் போன்ற களர்நிலத்தின் மேலே, குத்துச் செடியும் வெட்டவெளியுமாய் இருக்கும். அதில் வேட்டுவன் ஒருவன் ஒருமானைத் துரத்தி அலைப்பானாயின் அது எளிதில் தப்பித்து ஓடி உய்ந்துவிடும்! ஆனால் சுற்றத்தோடு கூடிய இல்வாழ்க்கை நம்மை எப்பக்கமும் தப்பவிடாமல் காலைத்தளைக்கும்; உய்யவிடாது!'' என்பது

உழவரின் பாட்டு. உலகியலில் அடிபட்டான் ஒருவன், அதனின்றும் விடுதலை பெறவிழையும் வேட்கையை இப்பாடல் வெளியிடுகிறது.

*''அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்*
*ஒருவன் ஆட்டும் புல்வாய் போல*
*ஓடி உய்தலும் கூடும்மன்;*
*ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே!''*

*(புறம் : 193)*

இல்லற வாழ்வு இனிதே. ஆனால் கால்களைப் பின்னும் வலை போன்றது. ஆசைகளை வளர்த்துக் கொள்ளுதலின், இச் சுற்றம் சூழ்ந்த வாழ்வை உழவர் 'தளை'யாக்கிக் காட்டுகிறார். மனைவி என்றும், பிள்ளை என்றும் பெயரன் என்றும் இப்படியே நம் பந்தமும் பாசமும் வளர்வதால், உய்யும் வழி கிடைப்பதில்லை. எனவேதான் இம்மெய்யறிவாளர், ஒக்கல் வாழ்க்கை காலை க் கட்டிப் போடும் என்கிறார்.

உலக இன்பமே பெரிதெனப் பேசி, மதுவுண்டு மகிழுமாறு நக்கீரர் வாழ்த்தும் இடமும் உண்டு. இவ் உலக இன்பமே பெரிதெனக் காட்டும் சிந்தனை அது!

*''யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்*
*பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்*
*ஒண்தொடி மகளிர் மடுப்ப, மகிழ்சிறந்து*
*ஆங்கு இனிது ஒழுகுமதி!''* *(புறம் : 56)*

நிலையற்றதாதலின் வாழ்க்கையைக் கொன்னே கழியாது, நன்கு தோய்ந்து அனுபவித்து வாழ வேண்டும் என்பது நக்கீரர் கொள்கை.

*''உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரால்*
*எண்ணப்பட வேண்டா தார்* *(922)*

என்பது திருக்குறள். இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட சிந்தனைக் குழுக்களை (schools of thought) நாம் சங்க காலத்தே காண்கிறோம். அவர்கள் வகுத்துத் தந்த வாழ்வுநெறிகளும் பலவாகும்; அவ்வாழ்வு நெறிகளை அவர்கள் வெளிப்படுத்துதற்குப் பயன்படுத்திய பாட்டு நெறிகளும் பலவாகும். இலக்கிய உத்திகள் மட்டுமன்றி, இலக்கியத்தின் பயனாக, நோக்கமாக அவர்கள் கொண்ட கருத்துக்களும் மிக உயர்ந்தன.

அதனால்தான் பரிசில் வாழ்க்கையின் பயனாகிய பாட்டிலக்கியம், ‘என்றும் புலராது, யாணர் நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்’ விளங்குகிறது!

## தமிழண்ணலின்
## அண்மை வெளியீடுகள்

1. இளைஞர் வாழ்வில் திருக்குறள்
2. கம்ப நாடகம்
3. மழலையர் தமிழ்க் கல்வியும்
   தமிழ்வழி உயர்கல்வியும்
4. தமிழனின் தாழ்வு மனப்பான்மை
5. பொதுநலத்தில் குப்பை கொட்டும் இந்தியர்கள்
6. தொல்காப்பியர்
7. ஔவையார்
8. பரிசில் வாழ்க்கை
9. திருக்குறள் உணர்த்தும் தமிழர் சமயம்

## பிறநூல்கள்

புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு

ஆய்வியல் அறிமுகம்

சிந்தாமணிச்

செல்வம்